விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper
பக்கங்கள்:இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 04 திங்கட்கிழமை (19.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 366

# சிறுபான்மையினருக்கு சம உரிமை கிடைக்கும்

## பெற்றுக் கொடுப்போம் என அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு



(ஹம்பத்தென்ன)

சிங்கள பௌத்தர்களுக்கு உரித்தான அனைத்து உரிமைகளும் நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

02ஆம் பக்கம் பார்க்க....

### எட்டு நாட்களாக வீடொன்றில்

## பூட்டி வைக்கப்பட்டிருந்த குடும்ப பெண் வவுனியா பொலிஸாரால் நேற்று மீட்பு



(குருமன்காடு)

வவுனியா, குருமன்காடு, காளி கோவில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் 8 நாட்களாக தனிமையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த 60 வயது மதிக்கத் தக்க குடும்பப் பெண் ஒருவர் வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா, குருமன்காடு, காளி கோவில் வீதியில் உள்ள வீடு மற்

24ஆம் பக்கம் பார்க்க....

## திருப்பதி செல்லும் பிரதமர் ரணில்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை இந்தியாவின் ஆந்திர பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள திருப்பதி வெங்கடேஸ்வரர் ஆலயத்திற்கு செல்ல உள்ளார்.

விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக பிரதமர் அங்கு

24ஆம் பக்கம் பார்க்க....

### முறையற்ற இடமாற்றத்தை எதிர்த்து

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார அமைச்சினால் நடைமுறைப்படுத்தும் முறையற்ற இடமாற்றத்தினை ரத்துச் செய்யக்கோரி வடமாகாண பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இன்றிலிருந்து காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக வடமாகாண பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடமாகாண பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கையில்,

நாடுமுழுவதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான வருடாந்த இடமாற்றம் நடைபெற்று வருகிறது. ஆனால் வடமாகாணத்தில் மாத்திரம் தாபன விதிக்கோவைக்கு எதிராக இந்த இடமாற்றம் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த வருடம் வடமாகாண

23ஆம் பக்கம் பார்க்க....

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் குறித்து ஐ.நா கவலை



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைபின் தடுப்பு காவல் தொடர்பான சில பிரிவுகள் குறித்து இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலி கவலை வெளியிட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்கள் பேரவைக்கு இன்று ஒருவருட நிறைவு

## வடக்கு-கிழக்கு இணைப்பு என சிலர் பொய்ப்பிரசாரம்!

## அமைச்சர் நிமல் கருத்து



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் அதன் கைச்சின்னத்தையும் நீல கொடியையும், கட்சியின் கொள்கைகளையும் முன்னோக்கி கொண்டு சென்று அதனை எதிர்காலத்திடம் ஒப்படைக்க வேண்டும் என தெரி

24ஆம் பக்கம் பார்க்க....

### இ.போ.ச பேருந்து-ஹயஸ் கோர விபத்து

## விசேட வானூர்தி மூலமாக நேற்று சடலங்கள் கொண்டு செல்லப்பட்டன



23ஆம் பக்கம் பார்க்க....

## இந்து ஆலயத்தின் மீது தாக்குதல்; சிவலிங்கம் தூக்கி வீசப்பட்டது

(வாழைச்சேனை)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகனேரி ஸ்ரீசித்தி விநாயகர் கோவிலின் வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த மூல விக்கிரகமான சிவலிங்கம் இனந்தெரியாதோரால் தூக்கி எறியப்பட்டுள்ளதுடன், திரைச்சீலையும் கிழித்து எறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், அக்கோவிலிலிருந்த ஏனைய பொருட்களும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

வழமை போன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கோவி

24ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுபான்மையின...

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சி அடிப்படைவாத கட்சியல்ல. ஐ.தே.க. ஆட்சியில் இருக்கும் வரை நாட்டில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்பட இடமளிக்காது.

சகல இனங்களுக்கும் சமவுரிமை கிடைக்க வேண்டும் என்பது எமது கட்சியின் நோக்கம். அரசு கவிழ்ந்து விடும் என சிலர் எதிர்பார்த்துள்ளனர்.

எனினும் ஐ.தே.க, சுதந்திரக் கட்சி ஆகிய பிரதான கட்சிகள் இணைந்து அமைத்துள்ள பலமான அரசு எந்த வகையிலும் கவிழாது.

வரவு செலவுத்திட்டத்திற்கு முன்னர் இருந்தே அரசின் பயணத்தை தடுத்து நிறுத்த எதிர்க்கட்சி முயற்சித்தது. நாடாளுமன்றத்திலும் அவர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். இறுதியில் வரவு செலவுத்திட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதியும் பிரதமரும் வெளிநாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி நாட்டுக்கு பெருமளவிலான முதலீடுகளை கொண்டு வர தலையிட்டு செயற்பட்டு வருகின்றனர்.

கடந்த அரசாங்கத்தின் நிர்வாக சீர்கேடு காரணமாக அரசின் வருமானத்தை கூற வெட்கமாக இருக்கின்றது. அரசின் வருட வருமானத்தில் கடன் தவணை மற்றும் வட்டியை செலுத்தும் முடியாமல் உள்ளது.

இந்த கடனுடன் எம்மால் முன்னோக்கி செல்ல முடியாது. இப்படியான நிலையிலேயே சீன அரசு இலங்கையில் 1.5 பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

சீனா இலங்கையில் உற்பத்தி செய்யும் பொருட்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும். இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு குறைந்த வரியை அறவிடுவது தொடர்பாக இந்தியாவுடன் உடன்படிக்கை கையெழுத்திடப்பட உள்ளது.

இந்தியாவுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கை அதிகளவான வருமானத்தை ஈட்ட முடியும். சீனா செய்ய உள்ள இந்த முதலீட்டின் ஊடாக ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைக்க சிலர் முயற்சித்து வருகின்றனர.

எனினும் அரசின் எதிர்கால திட்டத்தை சீர்குலைக்க இடமளிக்க போவதில்லை எனவும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# திருட்டு நகை அடைவுக் கடையில்

மன்னார் தலைமைப் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட இரு இடங்களில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பத்தொன்பது வயது சந்தேக நபர் ஒருவர் மற்றும் அவரிற்கு உதவியவர் என்ற ரீதியில் கொழும்பைச் சேர்ந்த சந்தேக நபருமாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களினால் திருடப்பட்ட தங்க நகைகள் அடைவு கடைகளில் இருந்து மீட்டுள்ளதாக மன்னார் தலைமைப் பொலிஸ் நிலையப் பிரிவின் குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் பி.ஆர் சரத் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 16-ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய மன்னார் தலைமைப் பொலிஸ் நிலையப்பிரிவின் குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்ட புலனாய்வு நடவடிக்கைகளை அடுத்தே திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களால் திருடப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபர்களை மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் மன்னார் தலைமைப் பொலிஸ் நிலையப்பிரிவின் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-15)


வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உங்கள் வீட்டுச் சூழலில் 18-20 வயதுக்குட்பட்ட வருக்கான சந்தர்ப்பம்

T.P.: 0763849089





High College of Arts
Technology Education

குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தமிழ், ஆங்கில மொழி மூலமான
A/L-2019 தொழில்நுட்ப பிரிவு

(C-6794)

தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

ரமணன் B.Sc (Hons), ரஜிகரன் B.Sc (Hons)

பொறியியல் தொழில்நுட்பவியல்

நிசாந்தன் B.Sc (Hons), M.Sc in BIO System Engineering
நிரோசன் B.Sc (Hons)

உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்

மதுசுதன் B.Sc (Hons), M.Sc in BIO System Engineering
சக்தி B.Sc (Hons)

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் (ICT)

லவன் B.Sc (Hons) Computer Science

புவியியல்

P.S குமரன் B.A (Hons)

விவசாயம்

சாரங்கன் B.Sc (Hons) Agriculture

ஆரம்பம்:
23.12.2016
வெள்ளிக்கிழமை
மு.ப 9.00 மணி



NEW SCIENCE HALL

2019 A/L கணித, உயிரியல் பிரிவு

தமிழ் மொழி மூலம்

PHYSICS

திரு.S.சோதிலிங்கம் திரு.G.பிரபா
திரு.K.செல்வன் திரு.N.கபிலன்

CHEMISTRY

திரு.K.சிவத்திரன் திரு.N.மகேஸ்வரன்
திரு.G.BENO திரு.T.சுசாந்தன் திரு.J.றஞ்சித்காந்

BIOLOGY

திரு.T.தம்பிராஜா எமது வழமையான ஆசிரியர்
திரு.T.கெங்காதரன்

COM.MATHS

திரு.P. செந்தில்நாதன் திரு.S. சிவகரன்

புதிய பாடத்திட்டத்துக்கமைவானது
ஆரம்பம்: 23.12.2016

ENGLISH MEDIUM

PHYSICS

MR. S.SOTHILINGAM
MR. K.SELVAN

CHEMISTRY

MR. N.MAHESWARAN
MR. G.BENO

BIOLOGY

MR. T.THAMBIRAJAH
OUR USUAL TEACHER

COM.MATHS

MR. S.SIVAKARAN

NEW SYLLABUS
COMMENCING ON 23.12.2016

(C-6797)

# மாணவனைத் தாக்கவில்லை கமால் குணரட்ன விளக்கம்

பிரபல பாடசாலையொன்றின் மாணவனைத் தாம் தாக்கியதாக வெளியான செய்திகளை ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன மறுத்துள்ளார்.

மாணவன், ஒருவர் பரீட்சை எழுதி விட்டு வரும் போது, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன அவரது சீருடையில் பிடித்து இழுத்து, தாக்க முயற்சித்தார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

பாடசாலைக்கு வெளியே மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவின் சகோதரியின் மகன் இன்னொரு மாணவனால் தாக்கப்பட்டமை தொடர்பாக, பொலிஸில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து, அந்த இடத்துக்குச் சென்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன, தனது மருமகனைத் தாக்கிய மாணவனை தாக்கினார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன,

அந்த மாணவனை தான தாக்கவோ, சந்திக்கவோ இல்லை என்று கூறியுள்ளார்.

தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய் என்று தெரிவித்துள்ளார். (இ-3)



# சட்டம், ஒழுங்கை மகிந்த அரசுதான் கட்டியெழுப்பியது

## கூறுகிறார் கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

**தற்போதைய அரசாங்கம் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதாக கூறி எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் மகிந்த அரசாங்கமே சட்டத்தையும் ஒழுங்கையும் கட்டியெழுப்பியதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி, பிரதமர் உட்பட நாட்டின் எந்தவொரு பிரஜையும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திற்கும் சென்றுவர முடியுமான வகையில் கடந்த அரசாங்கத்தினால் சட்டமும் ஒழுங்கும் கட்டியெழுப்பப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ஜப்பானில் உள்ள இலங்கையர்கள் மத்தியில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாத அச்சுறுத்தலை வெற்றி கொள்வதற்கு எதிரானவர்கள் தவிர ஊடகவியலாளர்கள் சம்பந்தமாக தனக்கு எவ்வித பிரச்சினைகளும் இருக்கவில்லை என்று அவர்தெரிவித்தார். (இ-3)

# இதைவிட அதிகம் எதிர்பார்த்தேன்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

48 வகையான மருந்துகளின் விலை குறைக்கப்பட்ட போது ஔடத நிறுவனங்கள் மூலம் ஏற்பட்ட அழுத்தங்களை விட அதிகளவில் அழுத்தங்களை எதிர்பார்த்ததாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

ஒரு ஆண்டுக்கு சுமார் 6 பில்லியன் பெறுமதியான மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அந்த மருந்துகளில் வைத்தியசாலைகளுக்கு வழங்கும் மருந்துகளின் அளவை கணக்கிடுவதற்கான முறை ஒன்று இதுவரை இருக்கவில்லை என்று அமைச்சர் தெரிவித்தார்.

அதற்காக புதிய மென்பொருள் ஒன்றை அறிமுகப்படுத்தி வைத்தியசாலைகளுக்கு பற்றாக்குறை இன்றி மருந்துகளை விநியோகிக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சில சமயங்களில் சுகாதாரத் துறைக்காக சரியான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எடுக்கப்படுகின்ற சில தீர்மானங்கள் காரணமாக சிலருக்கு கமிஷன் பணம் இல்லாது போயுள்ளதாக கூறியுள்ளார்.

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் விநியோக பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார். (இ-3)

# 'ரதுபஸ்பல சம்பவமே எனது தோல்விக்கு காரணமானது'

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ரதுபஸ்வல குறித்து யார் பொறுப்பு கூற வேண்டும் என்று ஊடகங்கள் கேள்வி எழுப்புகின்றன. அவ்வாறான சம்பவங்களுக்கு பொறுப்பு கூற வேண்டிய காரணத்தினால் தான் நான் தேர்தலில் தோல்வியடைந்தேன் என முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



கரந்தெனிய கொஸ்வதுமான சுதர்ஷனாராமய விகாரையின் தேரர்கள் வசிப்பதற்கான இரண்டுமாடி கட்டடமொன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-3)

# எம்.பிக்களுக்கு வாகனம் வழங்கும் திட்டம் நிறுத்தம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாடகை அடிப்படையில் வாகனம் வழங்கும் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஆண்டு ஒன்றுக்கு ஏழு கோடி ரூபா செலவிட்டு கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்க அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த வாகனம் வழங்கும் நடவடிக்கை குறித்த ஆவணத்தில் நாடாளுமன்ற மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் கையொப்பமிடாமையே, வாகனம் வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்படக் காரணமாகும்.

சட்டச் சிக்கல்களினால் வாகனம் வழங்குவது குறித்த ஆவணத்தில் கையொப்பமிட முடியாது என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றின் பதவிக்காலம் 45 மாதங்களாக காணப்படும் நிலையில் 60 மாதங்களுக்கு வாடகை வழங்க பரிந்துரை செய்தல், நிதிக் கொடுப்பனவிற்கான ஒதுக்கம் பற்றி தெளிவாக குறிப்பிடாமை உள்ளிட்ட பல காரணிகளில் சிக்கல்கள் காணப்படுவதனால் அனுமதி வழங்கப்பட முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு அதிகாரி கொலை; குளத்தில் இருந்து மோட்டார் சைக்கிள் மீட்பு

பொலநறுவையில் கொலை செய்யப்பட்ட, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு பொலிஸ் அதிகாரியின் மோட்டார் சைக்கிள் குளத்தில் இருந்து மீட்கப்பட்டுளளது.

குறித்த அதிகாரி பொலநறுவ-நவ நகர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கொலை செய்யப்படுவதற்கு முன்னர் அவர் பயணித்ததாக கூறப்படும் மோட்டார் சைக்கிள், மின்னேரியா குளத்தில் இருந்து நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது. கொலை செய்யப்பட்டவர் திவுலன்கடவல பகுதியை சேர்ந்தவராவார். இவர் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் பொலிஸ் கான்ஸ்டபிளாக பணியாற்றினார். (இ-3)

# குறிபார்த்து சுடும் சீனர் கொழும்பில் கைது; முக்கிய பிரமுகரைக் கொல்ல சதித்திட்டம்



(கொழும்பு)

குறிபார்த்துச் சுடுவதில் தேர்ச்சி பெற்ற, பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய சீனர் ஒருவர், கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இலங்கையில் மிக முக்கிய பிரமுகர் ஒருவரை இலக்கு வைக்கத் திட்டமிட்டிருந்தாரா என்ற சந்தேகத்தில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நிமாசிரென் என்ற சீனரே, குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கொழும்பிலுள்ள முன்னணி கசினோ நிலையம் ஒன்றில் பணியாற்றியிருந்தார்.

முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் பணியாற்றவே தாம் இலங்கை வந்ததாக குறித்த சீனர் தெரிவித்திருந்தார். எனினும், அவர் சீன சூதாட்டக்காரர்களால் நடத்தப்படும் கசினோ நிலையம் ஒன்றில் பணியாற்றி வந்தார.

கைது செய்யப்பட்ட போது, இவரது சுற்றுலா நுழைவிசைவு காலாவதியாகியிருந்தது என்று புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர், சூட்டுப் பயிற்சி பெற்றவர் என்றும், முக்கிய பிரமுகர்களை இலக்கு வைக்கும் மாபியா குழுக்களுடன் தொடர்புடையவர் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சீனர், ஜனாதிபதி இல்லம், அலரி மாளிகை மற்றும் மிக முக் கிய பிரமுகர்கள் வசிக்கும் மொனாச் கிரெஸ்காட் உள்ளிட்ட அடுக்குமாடிக் குடியிருப்புத் தொகுதிகளுக்கு அருகில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றிலேயே தங்கியிருந்துள்ளார்.

நமாசி ரென்னின் மனைவி, சீனாவில் அரச புலனாய்வாளராக பணியாற்றுகிறார் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சீனர், தென்பகுதியைச் சேர்ந்த அலெக்ஸா மற்றும் ஏனைய அரசியல்வாதிகளுடன் கிரமமான தொடர்பில் இருந்துள்ளார்.

இவர் இலங்கையில் தங்கியிருந்ததற்கான நோக்கத்தை கண்டறிவதற்கு விசாரணையாளர்கள் முயற்சிக்கின்றனர். அத்துடன், இவருடன் தொடர்பில் இருந்த நபர்களின் தொலைபேசி இலக்கங்கள் தொடர்பாகவும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

நாட்டில் எந்த நேரத்திலும், ஆட்சி மாற்றம் நிகழலாம் என்று, எதிரணி அரசியல்வாதிகள் சிலர் கூறி வரும் நிலையில், நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் சதித்திட்டத்துடன் சீன சூட்டாளர் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சீனர், நுழைவிசைவு விதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில், நாடுகடத்தப்படவுள்ளார். இவர் மிரிஹானை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் சதித் திட்டங்கள் எதனுடனும் தொடர்புபட்டிருந்தாரா என்பது குறித்து, நாடு கடத்தப்பட்ட பின்னரும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று தகவல்கள் தெரிவிப்பதாக, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

# 'வெற்றி நிச்சயம்'
## மாதாந்தத் தொடர் பரீட்சை - கார்த்திகை 2016
## க.பொ.த (உ/த) - 2017 கணித பிரிவு

**Maths Streem** — **Chemistry & Physics Average Rank list**

| St.Id | Full Name | School Name | School Name 2 | Chemistry | Physics | Average | Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 3014 | Pararasasingam Mishanth | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 88 | 86 | 87 | 1 |
| 3281 | Shandirasegaran Mugunthan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 81 | 88 | 84.5 | 2 |
| 3226 | Jude Selvakumar Anto Sheron | J/ St. John's College | J/ St. J.C | 76 | 83 | 79.5 | 3 |
| 3040 | Thayaparan Thananchseyan | J/ St. John's College | J/ St. J.C | 80 | 75 | 77.5 | 4 |
| 3224 | Saranya Raveendran | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 78 | 76 | 77 | 5 |
| 3223 | Mathanky Sachchithananthan | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 77 | 77 | 77 | 5 |
| 3022 | Suntharalingam Thivakaran | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 82 | 71 | 76.5 | 7 |
| 3194 | Prapakaran Prathees | J/ Jaffna College | J/ J.C | 83 | 70 | 76.5 | 7 |
| 3050 | Nirmaleswaran Dilaxseswaran | J/ Kokuvil Hindu College | J/ K.H.C | 79 | 73 | 76 | 9 |
| 3598 | Victor Jeyakumar Vasanth Godfrey | J/ Jaffna College | J/ J.C | 81 | 70 | 75.5 | 10 |
| 3244 | Shanmugakumar Shanmugabavan | J/ Jaffna Hindu College | J/ J.H.C | 80 | 71 | 75.5 | 10 |
| 3902 | Tharmalingam Jathusigan | J/ Jaffna Hindu College | J/ J.H.C | 70 | 78 | 74 | 12 |
| 3134 | Rajeswaran Ilankumaran | J/ Arunodaya College | J/A.C | 75 | 67 | 71 | 13 |
| 3294 | Srikumaran Kajanan | J/ Velanai Central College | J/ V.C.C | 82 | 57 | 69.5 | 14 |
| 3004 | Gajani Kangesan | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 70 | 69 | 69.5 | 14 |
| 3005 | Sivapiran Sanjeepan | Kn/ Kilinochchi Central College | Kn/ K.C.C | 83 | 55 | 69 | 16 |
| 3055 | Thillainathar Thigitharan | J/ Atchuvely Central College | J/ A.C.C | 68 | 69 | 68.5 | 17 |
| 3333 | Vijayakumar Sangeeth | J/ Mahayana College | J/ M.C | 67 | 70 | 68.5 | 17 |
| 3324 | Maathangi Baskaran | J/ Manipai Ladies College | J/ M.L.C | 75 | 62 | 68.5 | 17 |
| 3039 | Sivaneswaran Junoj | J/ St. John's College | J/ St. J.C | 72 | 64 | 68 | 20 |
| 3102 | Sivapalan Sarankan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 75 | 59 | 67 | 21 |
| 3009 | Sivakumar Utharshan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 56 | 77 | 66.5 | 22 |
| 3402 | Krishnathasan Seyon | J/ Jaffna Hindu College | J/ J.H.C | 59 | 74 | 66.5 | 22 |
| 3911 | Thayaparan Sathulakjan | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 63 | 69 | 66 | 24 |
| 3305 | Kalanantharasan Yathurshan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 64 | 65 | 64.5 | 25 |
| 3198 | Ravichandran Soban | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 62 | 67 | 64.5 | 25 |
| 3638 | Rajigaa Tharmarajah | J/ Kokuvil Hindu College | J/ K.H.C | 70 | 59 | 64.5 | 25 |
| 3904 | Sivasubramaniam Elankumaran | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 61 | 68 | 64.5 | 25 |
| 3218 | Mathusha Mahendran | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 70 | 58 | 64 | 29 |
| 3152 | Piriyanthy Mahendran | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 58 | 69 | 63.5 | 30 |
| 3158 | Mousiya Karunakaran | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 55 | 72 | 63.5 | 30 |
| 3957 | Kunasegaram Thilakshan | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 56 | 70 | 63 | 32 |
| 3262 | Yogeswaran Thusyanthan | J/ Arunodaya College | J/A.C | 74 | 51 | 62.5 | 33 |
| 3178 | Satkuneswaran Mathushan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 74 | 51 | 62.5 | 33 |
| 3286 | Kunarasa Tharsujan | J/ St. John's College | J/ St. J.C | 67 | 58 | 62.5 | 33 |
| 3179 | Pulenthiran Tenojan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 63 | 60 | 61.5 | 36 |
| 3295 | Uthayakumar Kanistan | J/ Velanai Central College | J/ V.C.C | 72 | 51 | 61.5 | 36 |
| 3932 | Vigani Ravikkumar | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 59 | 64 | 61.5 | 36 |
| 3916 | Naguleswaran Varnaraj | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 54 | 69 | 61.5 | 36 |
| 3105 | Partheepan Vasavan | J/ Jaffna Hindu College | J/ J.H.C | 61 | 62 | 61.5 | 36 |
| 3363 | Thurairajasingam Sajithkanth | J/ Kokuvil Hindu College | J/ K.H.C | 70 | 52 | 61 | 41 |
| 3455 | Stephan Delexshan | J/ St. John's College | J/ St. J.C | 63 | 59 | 61 | 41 |
| 3297 | Gayathiri Muralitharan | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 58 | 64 | 61 | 41 |
| 3484 | Sivasubramaniam Sivaneevan | J/ Jaffna Hindu College | J/ J.H.C | 62 | 60 | 61 | 41 |
| 3924 | Jalini Sivarajah | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 61 | 60 | 60.5 | 45 |
| 3042 | Jeyabalasingam Thanushan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 52 | 68 | 60 | 46 |
| 3090 | Vigneswaran Vithiyasahar | J/ St. John's College | J/ St. J.C | 61 | 59 | 60 | 46 |
| 3953 | Laksika Tharmalingam | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 57 | 63 | 60 | 46 |
| 3169 | Sivakumar Sivapprasanna | J/ St. John's College | J/ St. J.C | 67 | 51 | 59 | 49 |
| 3919 | Nagarajah Kopisankar | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 58 | 60 | 59 | 49 |
| 3187 | Thirukumaran Sutharshanan | J/ Jaffna College | J/ J.C | 69 | 48 | 58.5 | 51 |
| 3923 | Kanagathurai Tharsan | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 52 | 65 | 58.5 | 51 |
| 3086 | Balakumar Srigajan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 49 | 67 | 58 | 53 |
| 3038 | Suntharamoorthy Nearujan | J/ St. John's College | J/ St. J.C | 52 | 64 | 58 | 53 |
| 3427 | Sribalan Ajithdaniel | J/ St. John's College | J/ St. J.C | 45 | 71 | 58 | 53 |
| 3137 | Saranja Thavarasa | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 66 | 50 | 58 | 53 |
| 3520 | Balasingam Jeyasathan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 65 | 50 | 57.5 | 57 |
| 3018 | Premachandran Rangeelan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 60 | 55 | 57.5 | 57 |
| 3366 | Dushyanthan Thuvarakan | J/ St. John's College | J/ St. J.C | 53 | 62 | 57.5 | 57 |
| 3670 | Pirakasini Mahendran | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 67 | 48 | 57.5 | 57 |
| 3063 | Ketheeswaran Kukesan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 67 | 47 | 57 | 61 |
| 3450 | Yogalingam Vajeeharan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 63 | 51 | 57 | 61 |
| 3020 | Jeyaparipalan Parthipan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 56 | 58 | 57 | 61 |
| 3246 | Sajanthini Satgunarasa | J/ Manipai Ladies College | J/ M.L.C | 64 | 50 | 57 | 61 |
| 3037 | Thangarajah Kaarunjan | J/ Jaffna Hindu College | J/ J.H.C | 53 | 61 | 57 | 61 |
| 3113 | Shanmuganathan Saisuthan | J/ Jaffna Hindu College | J/ J.H.C | 48 | 66 | 57 | 61 |
| 3413 | Veerakathipillai Gajabavan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 53 | 60 | 56.5 | 67 |
| 3072 | Sivarajh Vishakanan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 58 | 54 | 56 | 68 |
| 3181 | Kamalavel Kanthasoroopan | J/ Vaddu Hindu College | J/ V.H.C | 56 | 56 | 56 | 68 |
| 3922 | Yogarasa Pinthushan | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 51 | 61 | 56 | 68 |
| 3056 | Magenthirarajah Vithursan | J/ Atchuvely Central College | J/ A.C.C | 64 | 47 | 55.5 | 71 |
| 3054 | Manikkavasagar Amalan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 64 | 47 | 55.5 | 71 |
| 3431 | Ashokumar Rasath | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 58 | 53 | 55.5 | 71 |
| 3096 | Ruban Shathursan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 54 | 57 | 55.5 | 71 |
| 3270 | Sivaniha Rajendram | J/ Uduvil Girls' College | J/ U.G.C | 61 | 50 | 55.5 | 71 |
| 3217 | Colin Vigneswaran Nithurjini | J/ Uduvil Girls' College | J/ U.G.C | 67 | 42 | 54.5 | 76 |
| 3296 | Maheswaran Nirushan | J/ Velanai Central College | J/ V.C.C | 63 | 46 | 54.5 | 76 |
| 3330 | Satkunarasa Ajinthan | J/ Kokuvil Hindu College | J/ K.H.C | 51 | 57 | 54 | 78 |
| 3150 | Gowshalya Vivekananthakurukkal | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 56 | 52 | 54 | 78 |
| 3439 | Sathurshana Sivalingam | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 56 | 52 | 54 | 78 |
| 3928 | Sathiyaseelan Sankarjee | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 47 | 61 | 54 | 78 |
| 3232 | Thulaxshana Sathiyaseelan | J/ Chundikuli Girls' College | J/C.G.C | 58 | 49 | 53.5 | 82 |
| 3276 | Sathushana Ganeshalingam | J/ Jaffna Hindu Ladies College | J/ J. H. L. C | 55 | 52 | 53.5 | 82 |
| 3909 | Arumugam Sarangan | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 45 | 62 | 53.5 | 82 |
| 3714 | Moganarasa Thamilmaran | Kn/ Kilinochchi Maththiya M.V | Kn/ K.M.M.V | 48 | 59 | 53.5 | 82 |
| 3058 | Amirthalingam Jatheesanan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 48 | 58 | 53 | 86 |
| 3344 | Baskaran Keerthanan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 44 | 62 | 53 | 86 |
| 3131 | Kugathasan Shaarangan | J/ Vaddu Hindu College | J/ V.H.C | 49 | 57 | 53 | 86 |
| 3159 | Kiruththika Sivasankaranathan | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 66 | 40 | 53 | 86 |
| 3132 | Abivarna Thavajogarajah | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 61 | 45 | 53 | 86 |
| 3411 | Rajasegar Thakshan | J/ St. Patricks' College | J/ S.P.C | 55 | 51 | 53 | 86 |
| 3174 | Kannathasan Sathurthikan | J/ St. John's College | J/ St. J.C | 61 | 45 | 53 | 86 |
| 3252 | Thaventhiran Senujan | J/ Kokuvil Hindu College | J/ K.H.C | 57 | 47 | 52 | 93 |
| 3125 | Mythily Ganesamoorthy | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 51 | 53 | 52 | 93 |
| 3013 | Uthayakumar Navarathan | J/ Jaffna Hindu College | J/ J.H.C | 50 | 54 | 52 | 93 |
| 3386 | Mahendran Hemakanth | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 55 | 48 | 51.5 | 96 |
| 3065 | Kanakalingam Kugan | J/ Kokuvil Hindu College | J/ K.H.C | 62 | 41 | 51.5 | 96 |
| 3173 | Sivakumaran Bavanujan | J/ St. John's College | J/ St. J.C | 60 | 43 | 51.5 | 96 |
| 3148 | Bavitha Puvaneswaran | J/ Jaffna College | J/ J.C | 47 | 55 | 51 | 99 |
| 3365 | Sothinathan Ramanan | J/ Kokuvil Hindu College | J/ K.H.C | 64 | 38 | 51 | 99 |
| 3122 | Thiruchelvam Mathusan | J/ Jaffna College | J/ J.C | 56 | 46 | 51 | 99 |
| 3533 | Thavananthan Thanujan | J/ Jaffna Central College | J/ J.C.C | 49 | 52 | 50.5 | 102 |
| 3604 | Kunasekaram Kujinthan | J/ Kokuvil Hindu College | J/ K.H.C | 55 | 45 | 50 | 103 |
| 3606 | Ijunthini Thuraisingam | J/ Manipai Ladies College | J/ M.L.C | 52 | 48 | 50 | 103 |
| 3049 | Saranja Navaneethakumar | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 51 | 49 | 50 | 103 |
| 3213 | Thiruchelvam Sathurgasthan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 51 | 48 | 49.5 | 106 |
| 3642 | Srinanthanasarma Sabananthan | J/ Kokuvil Hindu College | J/ K.H.C | 51 | 47 | 49 | 107 |
| 3361 | Subanista Thaneswaran | J/ Vaddu Hindu College | J/ V.H.C | 57 | 41 | 49 | 107 |
| 3545 | Abdul Careem Abdullah | A/ Kekirawa Central College | A/K.C.C | 46 | 51 | 48.5 | 109 |
| 3254 | Raveenthirarasan Venujan | J/ St. John's College | J/ St. J.C | 56 | 41 | 48.5 | 109 |
| 3473 | Keerthika Eswaranathan | Kn/ Poonagari Central College | Kn/ P.C.C | 49 | 48 | 48.5 | 109 |
| 3236 | Sivanujah Sivasubramaniam | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 51 | 45 | 48 | 112 |
| 3144 | Kirushanthy Kirubananthan | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 45 | 51 | 48 | 112 |
| 3064 | Thanendran Sivaparan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 65 | 30 | 47.5 | 114 |
| 3505 | Jegatheeswaran Nisoothanan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 41 | 54 | 47.5 | 114 |
| 3285 | Kamshika Kanthappu | J/ Jaffna Hindu Ladies College | J/ J. H. L. C | 56 | 39 | 47.5 | 114 |
| 3388 | Thakshayini Jeyakaran | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 50 | 45 | 47.5 | 114 |
| 3003 | Suthatharan Branavasuthan | J/ Jaffna College | J/ J.C | 54 | 41 | 47.5 | 114 |
| 3370 | Selvaratnam Ketharagan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 49 | 45 | 47 | 119 |
| 3180 | Ravichandran Harilakshan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 48 | 46 | 47 | 119 |
| 3227 | Krishnahini Ratneswaran | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 47 | 47 | 47 | 119 |
| 3219 | Mathurantha Kanthakumar | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 41 | 53 | 47 | 119 |
| 3343 | Uthayakumar Nitharsan | Kn/ Poonagari Central College | Kn/ P.C.C | 58 | 36 | 47 | 119 |
| 3034 | Sivarasa Sharujan | J/ Jaffna Central College | J/ J.C.C | 42 | 51 | 46.5 | 124 |
| 3364 | Selvarajah Anushan | J/ St. Patricks' College | J/ S.P.C | 54 | 39 | 46.5 | 124 |
| 3164 | Paranika Sathiyaseelan | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 46 | 46 | 46 | 126 |
| 3959 | Thanabalasingam Senthuran | J/Chavakachcheri hindu college | J/ C.H.C | 32 | 60 | 46 | 126 |
| 3612 | Rakanthasapapathippillai Vimalan | Kn/ Poonagari Central College | Kn/ P.C.C | 55 | 37 | 46 | 126 |
| 3167 | Jathurshana Janarthan | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 40 | 51 | 45.5 | 129 |
| 3335 | Naksala Sabeendran | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 55 | 35 | 45 | 130 |
| 3293 | Sharuha Jeyarajasingam | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 46 | 44 | 45 | 130 |
| 3092 | Paramanayakam Thishan | J/ St. Patricks' College | J/ S.P.C | 55 | 34 | 44.5 | 132 |
| 3643 | Vijayarasha Niroshan | Mu/ Mallavi Central College | Mu/ M.C.C | 50 | 39 | 44.5 | 132 |
| 3518 | Sivapalan Sivaruban | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 46 | 41 | 43.5 | 134 |
| 3002 | Thushanthiga Sivalingam | J/ Jaffna Hindu Ladies College | J/ J. H. L. C | 42 | 45 | 43.5 | 134 |
| 3542 | Kamsika Sathasivam | J/ Jaffna Hindu Ladies College | J/ J. H. L. C | 48 | 38 | 43 | 136 |
| 3378 | Kirushnasamy Yathushan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 54 | 30 | 42 | 137 |
| 3184 | Vithurshajini Arumainayagam | Mu/ Yogapuram M. V | Mu/ Y.M.V | 43 | 41 | 42 | 137 |
| 3590 | Niththijanantham Suvasthikan | J/ Jaffna Central College | J/ J.C.C | 42 | 41 | 41.5 | 139 |
| 3112 | Thavarajan Dinojan | J/ Jaffna Hindu College | J/ J.H.C | 53 | 30 | 41.5 | 139 |
| 3119 | Sreeskantharaja Sreesangeethan | J/ Jaffna Hindu College | J/ J.H.C | 44 | 39 | 41.5 | 139 |
| 3214 | Thulashithah Rajaharan | J/ Jaffna Hindu Ladies College | J/ J. H.L. C | 45 | 37 | 41 | 142 |
| 3185 | Mahendran Thanujan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 37 | 45 | 41 | 142 |
| 3215 | Ilaveny Vijayaratnam | J/ Jaffna Hindu Ladies College | J/ J. H.L. C | 48 | 33 | 40.5 | 144 |
| 3283 | Somasekaram Kajan | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 48 | 32 | 40 | 145 |
| 3070 | Kuganesan Magilrajah | J/ Jaffna Hindu College | J/ J. H. C | 43 | 37 | 40 | 145 |
| 3651 | Thirunavukkarasu Thilaxshan | J/ Vaddu Hindu College | J/ V.H.C | 40 | 40 | 40 | 145 |
| 3435 | Thanusha Shantharuban | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 43 | 37 | 40 | 145 |
| 3145 | Vaishnavi Sivabaskaran | J/ Vembadi Girls High School | J/ V.G.H.S | 38 | 42 | 40 | 145 |
| 3190 | Inthirakumar Tharnisan | Mu/ Udaiarkaddu M.V | Mu/ U.M. V | 52 | 28 | 40 | 145 |

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

New Science World

**New Science World** Physics: R. Kumaran, R.Kugan | Chemistry: Dias, T. Sivakumar

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

New Science World
T.P: 077 336 4055

2019 A/L
கணித, உயிரியல் பிரிவு

தமிழ்மொழி மூலம்

பௌதிகவியல்
திரு. R. குமரன் M.Sc
திரு. R. குகன் B.Sc

இரசாயனவியல்
திரு. டயஸ் B.Sc (Hons), Spl.in chem
திரு. K.T. சிவகுமார் B.Sc, PGDE

உயிரியல்
திரு. S. பொன் திவாகரன் B.Sc (Hons)
திரு. V. உமாசங்கர் B.Sc, PGDE
திரு. T. கஜேந்திரன்

இணைந்த கணிதம்
திரு. S. செந்தில்ராஜ் B.Sc, PGDE

English Medium

Physics
Mr. R.Kumaran M.Sc

Chemistry
Mr. Dias B.Sc (Hons) Spl.in che.

Biology
Mr. V. Umashanger B.Sc, PGDE
Mr. T. Kajenthiran

Com.Maths
Mr. T. Shanjeevan B.Sc (Hons), Dip. in English (Lecturer in University)

ஆரம்பம்
23.12.2016
New Science World
பிறவுண் றோட்,
நாவலர் றோட் சந்தி.
(C-6791)





கவிஞர குு.றஜபன எழுதிய "சததுவக கேடு" கவிதை நூல வெளியட்டு விழா நேறறைய தினம யாழ.நாவலர கலாசார மணடபததில இடமபெறறது. யாழபபாண தமிழச சஙகததின ஏறபாட்டில யாழபபாண தமிழச சஙகத தலைவர மனோனமணி சணமுகதாஸ தலைமையில நடைபெறற இநத நிகழவில நூலின வெளியட்டுரையை பேராசிரியர எஸ.சிவலிஙகராஜாவும ஆயவுரையினை கவிஞர சோ.பதமநாதனும நிகழததியிருநதனர. இந நூலினை காருணய அறககட்டளை ஸதாபகர தமிழழகன வெளியிட்டு வைகக நூலின முதற பிரதியினை புதிய உயர கலைக கலலூரி நிரவாகி அருளநஙகை பெறறுக கொணடார. இந நிகழவிறகு வடககு மாகாண சபை உறுபபினர பா.கஜதபன, கோபபாய ஆசிரியர பயிறசி கலாசாலை உப தலைவர லலசன, பருததிததுறை பிரதேச செயலரும கவிஞருமான ஜெயசலன உட்பட பலர கலநது கொணடனர. (படஙகள: பொ.சோபிகா)

## திருடிய ஆளில்லா விமானத்தை சீனாவே வைத்துக்கொள்ளட்டும்

### டொனால்ட் ட்ரம்ப் அதிரடி

தென்சீனக் கடல் பகுதியில் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த தங்கள் நாட்டு ஆளில்லா விமானத்தை திருடிய சீனாவே அதை வைத்து கொள்ளட்டும் என்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துளளார்.

தென்சீனக் கடல் பகுதியில் அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான 'USNS Bowditch' என்ற போர்க்கப்பல் கடல்சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறது. கடந்த 15 ஆம் திகதி பிலிப்பைன்ஸ் நாட்டை ஒட்டியுள்ள கடற்பகுதியில் தண்ணீருக்கு அடியில் ஆளில்லா தேடும் விமானம் மூலமாக சில ஆய்வுகளை செய்தபோது அந்த ஆளில்லா விமானத்தை சீனக் கடற்படையினர் பறிமுதல் செய்தனர்.

தங்கள் நாட்டுக்கு சொந்தமானது என்று ஆங்கிலத்தில் பெயர் பொறிக்கப்பட்டிருந்தும், அதை சீன கடற்படையினர் பறிமுதல் செய்ததற்கு அமெரிக்க இராணுவ தலைமையகமான 'பென்டகன்' எதிர்ப்பு தெரிவித்தது. உடனடியாக அந்த ஆளில்லா விமானத்தை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

தாய்வான் விவகாரத்தில் 'ஒன்றுபட்ட சீனா' என்ற கொள்கையில் எனக்கு உடன்பாடு இல்லை என்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் குறிப்பிட்டிருந்த நிலையில், சீன கடற்படையினரின் இந்த நடவடிக்கை இருநாடுகளிடையே பதற்றத்தை அதிகரிக்கும் வகையில் அமைந்தது.

இதையடுத்து, பறிமுதல் செய்யப்பட்ட ஆளில்லா விமானத்தை அமெரிக்காவிடம் திருப்பி ஒப்படைக்க சீனா முன்வந்தது.

இந்நிலையில், இவ்விகாரம் தொடர்பாக தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ள அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 'நீங்கள் திருடிய ஆளில்லா விமானத்தை எங்களிடம் ஒப்படைக்க வேண்டாம், அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று சீனாவிடம் நாம் கூறிவிட வேண்டும்' என்று தெரிவித்துள்ளார். (இ-3)

## மரண அறிவித்தல்



### தம்பு தர்மராசா (மெக்கானிக் தருமு)

சூறாவத்தையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தர்மராசா (மெக்கானிக் தருமு) 17/12/2016 சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு தங்கம் மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 19.12.2016 இன்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதேச செயலக வீதி,
சுன்னாகம். (6983)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆய்வுநூல் வெளியீட்டு விழா

"ஆராய்ச்சியின் ஊடாகப் பனங்கைத் தொழிலின் மேம்பாடு" எனும் தொனிப் பொருளில், பனை ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சி முடிவுகளின் வெளியீடுகளை உள்ளடக்கிய ஆய்வு நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பனை அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும் பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் நிகழ்த்தவுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளை உள்ளடக்கிய குறித்த ஆய்வு நூல் ஆங்கில மொழியில் வெளியிடப்படவுள்ளதுடன் இதன் தமிழாக்கம் விரைவில் வெளிவரவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வைத்திய கலாநிதி சி.சிவசங்கர் தெரிவித்தார்.

170 பக்கங்களைக் கொண்ட இந்த ஆய்வு நூலில் "பனையின் மருத்துவ முக்கியத்துவம்", "போசனை முக்கியத்துவம்", "பனை உற்பத்தி சார் புதிய கண்டு பிடிப்புக்கள", "பனை ஆராய்ச்சி சார் கட்டுரைகள்", "பனை உற்பத்தித் திறனை அதிகரிப்பது தொடர்பிலான கட்டுரைகள்" எனப் பல்வேறு விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பனை வள ஆர்வலர், ஆய்வாளர், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (இ-9)

## நத்தார் கரோல் உற்சவம்

யாழ்.பாதுகாப்புப் படை தலைமையகம் மற்றும் 51 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் வருடாந்த நத்தார் தினமும் கரோல் நிகழ்வும் இன்றைய தினம் இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணம் சந்தன மாதா தேவாலயத்தில் இடம் பெறும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## இராசி பலன்

19.12.2016

(மார்கழி 04, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு

சஷ்டி முன்னிரவு 11.14 மணிவரை

மகம் மாலை 6.24 மணிவரை

சுபநேரம் 12.23-1.53 மணிவரை

இராகுகாலம் 7.53-9.23 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம், அவிட்டம் | | |
| சுக் | | | சந் ராகு |
| சூரி புத | சனி | | குரு |

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், பிள்ளைகள் குடும்பப் பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகும்.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும் நாள், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள்.

**மிதுனம்:** பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், விரதங்களில் நம்பிக்கை கூடும், மனதில் தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

**துலாம்:** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்:** உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** தொழில் ரீதியாக புதிய நபர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், முயற்சியில் முன்னேற்றமுண்டு.

**மகரம்:** தேகநலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கும்பம்:** குடும்பத்தினரிடையே சந்தோசம் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கை மேலோங்கும் நாள்.

**மீனம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

# ஊடக அடக்குமுறை குறித்து தூதரகங்களிடம் முறைப்பாடு செய்ய கூட்டு எதிர்க்கட்சி தீர்மானம்

ஊடக அடக்குமுறை குறித்து வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களிடம் முறைப்பாடு செய்ய கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரம் தொடக்கம் இந்த தெளிவூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

தற்காலத்தில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் குறித்து தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகராலயங்களுக்கு தெளிவுபடுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

நாளுக்கு நாள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலம் பிற்போடப்படுவதனால் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் முடக்கப்பட்டமை குறித்தும் முறைப்பாடு செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் சர்வதேச அமைப்புக்களிடமும் இது விடயமாக முறைப்பாடு செய்யப்படும் என அவர் தெரிவித்தார். (இ-3)

## மோடியைப் பின்பற்றவில்லை - மலேசியாவில் ஜனாதிபதியின் கையில் கிடைத்த ஆதாரம்





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மலேசிய விஜயத்தின் போது, அங்குள்ள வீடொன்றில் இருந்த புகைப்படம், தாம் இந்தியப் பிரதமரைப் பின்பற்றவில்லை என்று கூறுவதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது. மலேசியாவுக்கான இலங்கை தூதுவர் இப்ராஹிம் அன்ஸாரின் வீட்டில் இந்த பழைய புகைப்படத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கண்டுள்ளார்.

அந்த புகைப்படம் 2009 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. இப்ராஹிம் அக்காலப்பகுதியில் எகிப்தில் இலங்கை உயர்ஸ்தானிகராக பணியாற்றியிருந்தார். அந்த புகைப்படத்தை காட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தான் 2009ஆம் ஆண்டில், அணிந்த ஆடையையே ஜனாதிபதி தேர்தலில் அணிந்திருந்தேன் என்று தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அணியும் மேலங்கியுடன் கூடிய அந்த ஆடையை, கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தான் அணிந்து கொண்டு பிரசாரம் செய்த போது, தாம் மோடியைப் பின்பற்றுவதாக பலரும் விமர்சித்தனர் என்றும், ஆனால் அந்த ஆடையை அதற்கு முன்னரே தாம் அணிந்திருப்பதாகவும், ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

## புதிய விற்பனை மையங்கள் ஐம்பது அமைக்கப்படும்

(கொழும்பு)

அடுத்த ஆண்டிற்குள் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் புதிய விற்பனை மையங்கள் 50 ஐ ஸ்தாபிக்க திட்டமிட்டிருப்பதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் 12 புதிய விற்பனை மையங்களை இந்த வருடத்தில் ஸ்தாபிப்பதாக அவர் தெரிவித்தார்.

இரண்டு விற்பனை மையங்கள் வரகாபொல மற்றும் குளியாப்பிட்டிய நகரங்களில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டதுடன், அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரை காலமும் நட்டத்தில் இயங்கிய அரச நிறுவனமான மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் புதிய நிர்வாக மற்றும் முகாமைத்துவம் காரணமாக தற்போது இலாபமடையும் நிறுவனமாக மாறியுள்ளதென்று அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் 500 மில்லியன் ரூபா இலாபத்தை எட்டுவதற்கு திட்டமிட்டிருப்பதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (இ-10)

## பணிப்பெண்ணாக தாய் செல்வதை பிள்ளைகள் விரும்புவது இல்லை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து தாய்மார்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களாக செல்வதை பிள்ளைகள் விரும்புவது இல்லை என கொழும்பில் நடைபெற்ற மாநாடொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் தாய்மார்களின் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலன்களை வலுப்படுத்தும் வகையில் சேவ் த சில்ரன் (save the children) பங்களிப்புடன் இம்மாநாடு நடைபெற்றது.

யுனிசெப் (UNICEF) பிரதிநிதிகள், கல்வி அமைச்சு, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஆகியவற்றின் அதிகாரிகளுடன் உள்நாட்டுச் சிறுவர் நலன் சார்ந்த தன்னார்வ தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தாய்மார்கள் தொழில் பெற்று செல்வதால் குடும்ப பொருளாதாரம் போன்ற ஓரிரு சாதகமான அம்சங்கள் இருந்தாலும் பெற்றோர் பிரிதல், பிள்ளைகளின் இளவயது திருமணம், கல்வி இடை விலகல், துஷ்பிரயோகம் உட்பட பாதகமான அம்சங்கள் பல இருப்பது பலராலும் இம் மாநாட்டின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக மத்திய கிழக்கில் தொழில் புரியும் தாய்மார்களின் பிள்ளைகள் கிளிநொச்சி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலிருந்து வருகை தந்து தங்கள் அனுபவ ரீதியான கருத்துக்களை அங்கு பகிர்ந்து கொண்டனர்.

பெற்றோர் உள்நாட்டு உழைப்புடன் தங்களுடன் முழுமையாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பை அவர்களில் பலரும் வெளிப்படுத்திக் கொண்டதாக கூறுகின்றார் இம் மாநாட்டில் கலந்து கொண்ட இளைஞர் அபிவிருத்தி அகத்தின் ஆலோசகரான பொன். சற்சிவானந்தம்.

அதுவே தங்கள் பாதுகாப்புக்கும் அபிவிருத்திக்கும் துணையாக இருக்கும் என்பதை அவர்களின் கருத்துக்கள் மூலம் அறிய முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

தவிர்க்க முடியாத நிலையில் தாய் வெளிநாடு செல்ல வேண்டிய நிலை ஏற்படும் போது, தங்களின் பராமரிப்புக்கு பொறுப்பான சிறிய தாய் உட்பட உறவுகளுக்கு தங்களை கையாள்வது தொடர்பாக பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அவர்களிடம் காணப்படுகின்றது என்றும் பொன். சற்சிவானந்தம் தெரிவித்தார்.

பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் போதும் நாடு திரும்பிய பின்னரும் குடும்பங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்து அதற்கு பரிகாரம் காண்பதற்கான திட்டங்கள் எதுவும் உள்நாட்டில் இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-3)

## சு.கவினரின் ஆடையில் மகிந்தவுக்கு சந்தேகம்



நல்லாட்சி அரசாங்கத்தில் உள்ள சுதந்திர கட்சியினர் ஆடை அணிந்து கொண்டுதான் இருக்கின்றார்களா என தனக்கு சந்தேகம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியினர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினரை நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமாறு கூறுகின்றனர். சுதந்திர கட்சியினர் ஏன் இன்னும் நல்லாட்சி அரசுடன் இருக்கின்றார்கள் எனத் தெரியவில்லை. எனது ஆட்சியின் போது அது நடந்தது, இது நடந்தது என என்னையும் எனது அரசாங்கத்தையும் குறைகூறுகின்ற இவர்கள் இப்போது என்ன செய்திருக்கின்றார்கள்? இந்த நல்லாட்சியில் ஊடகம் தொடர்பாக கதைத்து வேலையில்லை. சில ஊடகங்களை வைத்து என்னை தாக்கி செய்திகள் வெளியிடுகின்றனர். கடந்த 1980 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் நடந்த விடயங்களை வெளியிடுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## மகிந்த அணியைச் சேர்ந்தவருக்கு எதிராக விரைவில் குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் மத்திய மாகாணத்தின் முக்கிய அரசியல்வாதி ஒருவருக்கு எதிராக எதிர்வரும் ஜனவரி மாதம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளது.

இந்த அரசியல்வாதிக்கு எதிராக பல்வேறு ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோத சொத்து குவிப்பு, நிதி மோசடி போன்ற குற்றச் செயல்கள் தொடர்பில் இந்த அரசியல்வாதிக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# பிச்சை எடுத்த சிறுமியை சட்டத்தரணியாக்கிய 'ஜெ' நெகிழும் மைசூர் பெண்



அப்பலோ வைத்திய சாலையில் கடந்த செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி அனும திக்கப்பட்ட ஜெயலலிதா, தொடர்ந்து 75 நாட்கள்சிகிச்சை பெற்று பலன் அளிக்காமல் டிசெம்பர் 5ஆம் திகதி கால மானார். மறைந்தாலும், "புரட்சித்தலைவி", "இரும்புப் பெண்" என வரலாற்றின் புக முரைகளிலும், தமிழக மக்கள் மனதில் "அம்மா" என்ற சொல்லின் அன்பிலும் வாழ்ந்து கொண்டுதான் இருக் கிறார்.

ஜெயலலிதா கொண்டு வந்த நலத்திட்டங்கள் பற்றி பலரும் அறிவர். ஆனால், தனிப்பட்ட முறையில் அவர் பிரியம் காட்டிய எளிய மனி தர்கள் பற்றி பரவலாக அறி யப்படவில்லை. அப்படி ஒரு வர்தான், நாகரத்னா!

கர்நாடகா மாநிலம் மைசூரைச் சேர்ந்த சிறுமி நாக ரதனா, நகர வீதிகளில் பிச்சை எடுத்து பெற்றோருடன் வாழ்ந்து வந்தார். ஆனால், அவருக்கு படிக்க ஆசை. பிச்சை எடுத்துக்கொண்டே படித்தார். இருக்க வீடு கூட இல்லாத நிலையிலும், தெரு விளக்கு வெளிச்சத்தில் படித்து, 2001 ஆம் ஆண்டு பத்தாம் வகுப் புப் பொதுத்தேர்வில் நல்ல மதிப் பெண்களுடன் தேர்ச்சி பெற்றார நாகரத்னா. அதற்கு மேல படிக்க இயலாத அவ ரின் நிலைமை, தினமணி நாளிதழில் செய்தியாக வெளி யானது.

இந்தச் செய்தியை அப் போது முதல்வராக இருந்த ஜெயலலிதா படித்து அறிந் ததும், மனம் நெகிழ்ந்து, உடனடியாக கர்நாடக மாநில அ.தி.மு.க. செயலாளர் புகழே ந்தியை அழைத்து, அது பற்றி விசாரித்தார். மைசூருக்கு விரைந்த புகழேந்தி, அங்கு நாகரத்தினாவைத் தேடிக் கண்டுபிடித்தார்.

"புகழேந்தி என்னைச் சந்தித்து, "உனக்கு ஜெய லலிதாவைத் தெரியுமா?" என்று கேட்டார். "ம்... தெரி யுமே. தமிழகத்தின் முதல் வர்" என்று சொன்னேன். அதற்கு அவர், "ஜெயலலிதா அம்மா உன்னைப் பார்க்க விரும்புகிறார். உடனே புற ப்படு" என்றார். எனக்கு ஆன ந்த அதிர்ச்சியாக இருந்தது. மறுநாள் நாங்கள் முதல் வரைச் சந்தித்தோம்" என்று சொல்லும்போது நாகரத்னா வுக்கு, முதல்வர் ஜெயலலிதா வைச் சந்திக்க வாய்ப்பு அமை ந்தபோது, அவரிடம் தன் கஷ்டங்களை எல்லாம் தெரி வித்தார்.

அவரிடம் ஒரு இலட்சத் துக்கான காசோலையைக் கொடுத்த ஜெயலலிதா, அவரைப் படிப்பைத் தொடரச் சொல்லி வாழ்த்தினார்.

"அம்மாவுக்கு நன்றி சொல்ல என்னிடம் வார்த்தைகள் வர வில்லை. என் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்த அம்மா, "நன்றாகப் படி" என தைரியம் ஊட்டினார்" எனறு சொல்லும் நாக ரத்னா, ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வங்கியில் வைப்புச் செய்து அதில் வரும் வட்டியில்படிப்பைத்தொடர்ந்தார்.

மைசூரில் உள்ள மஹாஜனாஸ் சட்டக் கல்லூரியில் எல்.எல்.பி.படிப்பை முடித்து, தற்போது பெங்களூரில் உள்ள சிவில் நீதிமன்ற சட்டத்தரணி யாகப் பணியாற்றுகிறார் நாகரத்னா. "பிச்சை எடுத்த நான் இன்று சட்டத்தரணி ஆகியிருப்பதற்கு ஜெயலலிதா அம்மா தான் காரணம். அவருக்கு நன்றி கூற வார்த் தைகளே இல்லை.

அம்மாவை மீண்டும் ஒருமுறை எப்படியாவது நேரில் சந்தித்து நன்றி சொல்லிவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தேன். ஆனால், அவரின் இறப்புச் செய்தி கேட்டு என் இதயமே வெடித் ததுபோல் ஆகிவிட்டது" என்று நாகரத்னா கண்ணீர் மல்க இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்தி ரிகையிடம் தெரிவித்திரு க்கிறார்.

நாம் கர்நாடக மாநில அ.தி.மு.க செயலாளர் புகழே ந் தியை தொடர்புகொண்டு பேசினோம். அந்த நினை வுகளை நம்முடன் பகிர்ந்து கொண்டார்.

"நாகரத்னாவுக்கு அம்மா உதவி செய்தது உண்மை தான். 2001ஆம் ஆண்டு அம்மா தமிழக முதல்வராக பதவி ஏற்றிருந்த தருணம் அது. அன்று அம்மாவிடம் இருந்து அழைப்பு வந்தது. உடனே போயஸ் கார்டனு க்குச் சென்றேன். "தினமணி படித்தீர்களா?" என்று கேட் டார். "இல்லை, நீங்கள் கூப் பிட்டதும் உடனே புறப்பட்டு வந்துவிட்டேன்" என்றேன். "சரி, மைசூரில் இருக்கும் ஒரு பெண் பிச்சை எடுத்துக் கொண்டே 10ஆம் வகுப்புத் தேர்வில் டிஸ்டிங்ஷனில் தேர்வாகியுள்ளார். அதை உறுதிப்படுத்தி, அவளை உடனே இங்கே அழைத்து வாருங்கள்" என்றார்

மைசூர் சென்று நாக ரத்னாவைப் பற்றி விசா ரித்தேன். நாகரத்னாவைப் பற்றிய செய்தியைப் பார்த்து, அங்குள்ள ஒரு கிறிஸ்தவ தொண்டு நிறுவனம் அவரை அழைத்துச் சென்றிருப்பதை தெரிந்துகொண்டு அங்கு சென்றேன். நாகரத்னா வைப் பார்த்து விபரத்தைச் சொல்லி, அம்மாவிடம் அழை த்துவந்தேன்.

நாகரத்னாவைப் பாரா ட்டிய அம்மா, "நீ மேற்கொ ண்டு என்ன படிக்கப் போகி றாய்?" என்று கேட்டார். "நான பொலிஸ் ஆஃபீஸர் ஆக விரும்புகிறேன்" என்றார். "ஏன்?" என அம்மா கேட்க, "நான் தெருவிளக்கில்தான் படித்தேன.

அப்படிப் படித்துக்கொண் டிருந்த போது, ஒருநாள் பொலிஸ் என்னை அடித்துவிட்டது" என்று சொல்லி தன் கால் தழும்புகளை அம்மாவிடம் காட்டினார்.

"சரி, என்ன உதவி வேண டும் என்றாலும் கேள்" என்று சொல்லி, ஒரு இலட்சத்துக் கான காசோலையை நாகர த்னாவிடம் தந்தார் அம்மா. அப்போது ஒரு இலட்சம் என் பது பெரிய தொகை. நான் நாகரத்னாவின் பெயரில் அதை வங்கியில் வைப்புச் செய்து பற்றுச்சீட்டை அம்மா விடம் கொடுத்துவிட்டேன்.

இப்போது பெங்களூர் நீதிமன்றத்தில் சட்டத் தரணி யாக உள்ளார். அம்மா கால மானதும், நாகரத்னாவுக்கு அம்மா உதவி செய்ததை பத்திரிகையாளர்களிடம் பகி ர்ந்து கொண்டேன். பெங்க ளூரில் நாகரத்னாவுடன் பத்திரிகையாளர் சந்திப்பு ஏற்பாடு செய்திருந்தேன். அப்போது பத்திரிகையாளர் கள் நாகரத்னாவை பார்த்து, "நீங்கள் தமிழக முதலமைச் சர் ஜெய லலிதாவை நேரில் பார்த்தீர்களா? அவர் என்ன சொன்னார்?" என்று கேட்ட னர். அதற்கு நாகரத்னா, "முதலமைச்சர் யாரையும் நான் பார்க்கவில்லை" என் றார்.

இதைக் கேட்ட எனக்கு "பக்" என்று ஆகிவிட்டது. பிறகு நாகரத்னா, "எனக்கு அவர் முதலமைச்சராகத் தெரியவில்லை. அப்போது என் கண்களுக்கு தெய்வ மாகத்தான் தெரிந்தார். பிச்சை எடுத்துக்கொண்டிருந்த என் வாழ்க்கைக்கு வழிகாட்டிய தெய்வம் அம்மா" என்று கண்களில் நீர்வடிய தெரி வித்தார். பெங்களூர் தொலைக் காட்சிகளில் எங்கள் இரு வரின் பேட்டி வெளியானது" என்றார் புகழேந்தி.

"அம்மா" என்றால் அன்பு!. (இ-3)

# இளைஞர் பாராளுமன்ற தேர்தல் வாக்களிப்பு





நான்காவது இளைஞர் பாராளுமன்ற தேர்தலுக் கான வாக்களிப்பு நேற்றைய தினம் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் நடை பெற்ற இளைஞர் பாராளு மன்ற தேர்தலின் மூலம் 160 இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு நாடளாவிய ரீதியில் 670 நிலையங்க ளில்இத்தேர்தல்நடைபெற்றது.

அந்தவகையில் யாழ். மாவட்டத்தின் 10 இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்க ளைத் தெரிவு செய்வதற்காக 27 நிலையங்களில் தேர்தல் நடைபெற்றது.

யாழ்ப்பாண பிரதேச செய லகம், நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலை யம், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், கொக்கு வில் இந்துக்கல்லூரி, சண்டி லிப்பாய் சோதி வேம்படி கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை, உடுவில் பிரதேச செயலகம், ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம், சங்கானை பிரதேச செயலகம், வலக்கம் பளை சமுர்த்தி வங்கி, காரைநகர் பிரதேச செயலகம், தெல்லிப்பழை பிரதேச செய லகம், வலத்துண்டல்றோமன கத்தோலிக்க பாடசாலை, கோப்பாய் பிரதேச செயலகம், ஆவரங்கால் கிழக்கு கிராம சேவகர் அலுவலகம், கர வெட்டி பிரதேச செயலகம், கரணவாய் தாமோதரம் வித் தியாலயம், மருதங்கேணி பிரதேச செயலகம், குடத் தனை கிராம அபிவிருத்தி சங்கம், பருத்தித்துறை பிர தேச செயலகம், பொலிக ண்டி விண்மீன் அர்ப்பணி ப்பு மண்டபம், சாவகச்சேரி கைதடி நவீல்ட் பாடசாலை, மிருசுவில் றோமன் கத்தோலி க்க வித்தியாலயம், ஊர்காவற் றுறை பிரதேச செயலகம், நெடுந்தீவு பிரதேச செயலகம், வேலணை பிரதேச செய லகம், புங்குடுதீவு மகா வித்தி யாலயம் ஆகியவற்றில் வாக் களிப்பு நிலையங்கள் அமைக் கப்பட்டு வாக்களிப்பு நடை பெற்றிருந்தன.

நேற்றைய தினம் காலை 7மணி முதல் பி.ப 4 மணி வரை இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அங்கத்தவர்கள் 12 ஆயிரத்து 267 பேர் இத் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றி ருந்தனர். இதில் இளைஞர் கள் பலர் ஆர்வத்துடன் வாக் களித்திருந்தமை குறிப்பிடத்த க்கது. (இ-9)


**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்
தொ.இ: B/6627

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'7'
தகைமை/தொழில்:A/L/வியாபாரம்
தொ.இ: B/6628

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
தொ.இ: B/6629

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 32 செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:NDT BE/ பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/6630

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/6668

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 33 செவ் 2 இல்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/6678

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 18
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L/முன்பள்ளி ஆசிரியர்
தொ.இ: G/6680

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 20 செவ் இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:HNDIT/ கணக்காளர்
தொ.இ: G/6682

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

# அவயவங்களை இழந்து பாதிக்கப்பட்ட

## மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை அவயவங்கள்



முல்லைத்தீவு மாவட்ட இராணுவ படைத் தலைமையக ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேசெயலகப் பிரிவிற்குட்பட்ட மக்களில் போர் காரணமாகவும் மற்றும் ஏனைய காரணங்களாலும் தமது அவயவங்களை இழந்து பாதிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை அவயவங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் மு/முள்ளிவாய்க் கால் கிழக்கு அ. த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, சுமார் ஆறு இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான செயற்கை அவயவங்கள் 48 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வின் போது இராணுப் பொறுப்பதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் உட்பட பயனாளிகள் எனப்பலரும் கலந்து கொண்டுள்ளனர். (2-15)

# படுகாயம் அடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

(மல்லாவி)

வவுனியா பொலிஸ் பிரிவில் உள்ள இராசேந்திர குளம் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் படுகாயம் அடைந்த நிலையில் வீதியால் சென்ற பொதுமக்களினால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் கடந்த 17 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தலையில் பலத்த காயம் ஏற்பட்டு அதி தீவிர பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வவுனியா இராசேந்திர குளத்தைச் சேர்ந்த எஸ்.அகிலேஸ்வரன் வயது 35 என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். (2-250-15)

## மூவின பெண்களின் ஆற்றுப்படுத்தல் தலைவிக்கு வவுனியாவில் கௌரவிப்பு

போருக்கு பின்னரான குணப்படுத்தல் என்னும் தேசிய மட்ட கலந்துரையாடலில் நோர்வே தூதுவர் மற்றும் அமைச்சர் மனோகணேசன் ஆகியோரினால் மூவின பெண்களின் அகில இலங்கை ரீதியாக போருக்கு பின்னர் பெண்களை ஆற்றுப்படுத்தல் தலைவியாக வவுனியாவைச் சேர்ந்த திருமதி ச.கமலாதேவி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற போருக்கு பின்னரான குணப்படுத்தல் தொடர்பான தேசியமட்ட கலந்துரையாடலிலேயே இத் தெரிவு இடம்பெற்றது. (2-250)


## மன்னார் பொது வைத்தியசாலையில்

# நோயாளர் விடுதிக்கு செல்லும் பாதையோரங்களில் மலசலக்கழிவுகள்

### அகற்ற துரிதகதியில் நடவடிக்கை- வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையில் உள்ள நோயாளர் விடுதிகளில் காணப்படுகின்ற அதிகளவான மலசல கூடங்கள் பயன்பாட்டிற்கு உதவாத நிலையில் மிகவும் மோசமாக காணப்படுவதாக நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



குறிப்பாக மன்னார் பொது வைத்தியசாலையின் நோயாளர் விடுதி 4 இல் அமைந்துள்ள பகுதியில் உள்ள மலசல கூடங்களில் உள்ள மனிதக் கழிவுகள் நோயாளர் விடுதிக்கு வெளியே பாதையோரங்களில் தேங்கி கிடப்பதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் அப் பகுதியூடாக நோயாளர் விடுதிக்கு செல்வோர், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் நோயாளர் விடுதிகளில் காணப்படுகின்ற மலசல கூடங்கள் உரிய பராமரிப்பு இன்றி காணப்படுவதாகவும் மனிதக்கழிவுகள் மலசலகூடத்தினூடாக வழிந்தோடுவதாகவும் இதனால் நோயாளர்கள்பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரச்சினைகள் தொடர்பாக நோயாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் மன்னார பொது வைத்தியசாலை நிர்வாகத் திடமும் அதிகாரிகளிடமும் பல தடவைகள் தெரிவித்தும் உரிய நடவடிக்கைகளை இதுவரை மேற்கொள்ளவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் அதிகமான பணியாளர்கள் கடமையாற்றுகின்ற வைத்தியசாலையாக மன்னார் பொது வைத்தியசாலை காணப்படுவதோடு கழிவுகள் அகற்றும் பணிக்கு தனியார் நிறுவனம் ஒன்றின் பணியாளர்களும் கடமையாற்றுவதாகவும் இந்த நிலையிலே மன்னார் பொது வைத்தியசாலையில் இவ்வாறான சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளருமான திருமதி யூட் ரதினியிடம் தொடர்பு கொண்டு வினவிய போது,

குறித்த பிரச்சினை தொடர்பாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

உடனடியாக வெளியேறியுள்ள மனிதக்கழிவுகளை அகற்ற துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். (2-9)





மாந்தை கிழக்கு பிரதேச செயலகம்


மாந்தை கிழக்கு பிரதேச செயலகம்


துணுக்காய் பிரதேச செயலகம்


புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்


ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம்


ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம்



கரைதுறைப்பற்று பிரதேச செயலகம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 4 ஆவது இளைஞர் பாராளுமன்ற தேர்தல் நாடளாவிய ரீதியில் நேற்று நடைபெற்றது. இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற பதிவுகள் சில ...

நிறைவடைந்த தேர்தலில் முல்லையில் 54.4 வீதமான வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது.


(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)


துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவு


ஒட்டுசுட்டான் - மாங்குளம் கிராம அலுவலகர் அலுவலகம்பிரதேசசெயலகம்


கரைதுறைப்பற்று -மு/கலைமகள் வித்தி

# தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போர்த்தளபாடங்கள் காட்சிப்படுத்தல்




(முல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட வலைஞர் மடத்திற்கும் - இரட்டை வாய்க்கால் பகுதிக்கும் இடையில் உள்ள சோலைப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் இருந்து கைப்பற்றப்பட்ட போர்த் தளபாடங்களின் காட்சியகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முன்னர் முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் உள்ள மந்துவில் குளத்திற்கு அருகில் இராணுவத்தினால் காட்சிப்படுத்தி வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ போர்த்தளபாடங்கள் அனைத்தும் மேற்படி சோலைப் பகுதியில் கொட்டகைகள் அமைத்துக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதம் முதல் முல்லைத்தீவு -பரந்தன் வீதியில் உள்ள மந்துவில் குளத்திற்கு அருகில் இராணுவத்தினால் காட்சிப் படுத்தியிருந்த இராணுவ போர்த் தளபாடங்கள் அங்கிருந்து முழுமையாக அகற்றப்பட்ட நிலையில் மீண்டும் புதிய இடத்தில் மீளவும் அமைக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன,

இந்தக் காட்சியறை இருக்கும் இடத்தை குறிக்கும் குறியீட்டுப் பலகை ஒன்று முல்லைத்தீவு இரட்டைவாய்க்கால் பிள்ளையார் ஆலய சந்தியில் முல்லைத்தீவு - பரந்தன் வீதியின் ஓரத்தில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த காட்சியகத்தில் விடுதலைப் புலிகளினால் தயாரிக்கப்பட்ட போர்ப் படகுகள், ஆயுதங்கள் உட்பட கனரக ஆயுதங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




# நீர்ப்பாசனத் திணைக்கள கட்டடம் முருங்கனில் திறந்து வைக்கப்பட்டது



மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கனில் புதிதாக அமைக்கப்பட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் கட்டடத்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எல்.வீரசிங்கத்தின் அழைப்பிற்கிணங்க, நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஆர். எம்.டபிள்யூ.ரத்நாயக்காவின் பங்களிப்புடன் நடைபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களத்திறப்பு விழாவில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா, வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் ஆகியோர் இணைந்து இத்திணைக்களத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைத்துள்ளனர். (2-15)

# சர்வதேச வலுவிழந்தோர் தினமும் கட்டடத் திறப்பு விழாவும்



(மல்லாவி)

சர்வதேச வலுவிழந்தோர் தினத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒளிரும் வாழ்வு அமைப்பிற்காக உடையார் கட்டு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் சர்வதேச வலுவிழந்தோர் தினத்தினையும் ஒளிரும் வாழ்வு அமைப்பின் அங்கத்தவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள்,பொதுமக்கள் எனப்பலரும் அனுஷ்டித்துள்ளனர்.

இந் நிகழ்வு ஒளிரும் வாழ்வு அமைப்பின் தலைவர் ப.இராசகுமார் தலைமையில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு நடைபெற்றுள்ளது.

நிகழ்விற்கு இந்தியாவின் இலங்கைக்கான துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து சிறப்பித்துள்ளார்.

இதன்போது மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகளான 20 பாடசாலை மாணவர்களுக்கு வங்கி கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு வங்கிப் புத்தகங்கள் வழங்கப்பட்டதோடு 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் 50 பேருக்கான உலருணவுப்பொதிகளும் 2 பேருக்கு நிதி உதவியும் 5 போருக்கான சுழற்சி முறை கடன்களும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வின் போது பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, சிவசக்தி ஆனந்தன் உட்பட வடக்குமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் வல்லிபுரம் கமலேஸ்வரன், ஒளிரும் வாழ்வு அமைப்பின் அங்கத்தவர்கள்,பொதுமக்கள் எனப்பலரும் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-15-281)

# சட்டத்திற்கு முரணாக மண் அகழ்வில் ஈடுபட்ட ஆறு வாகனங்கள் சிக்கின

## மாங்குளம் பொலிஸார் அதிரடி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் வடகாடு விளாத்திக்குளம் பகுதியில் சட்டத்திற்கு முரணான வகையில் மண் அகழ்வில் ஈடுபட்ட 5 உழவு இயந்திரங்கள் மற்றும் ஒரு டிப்பர் வாகனம் என்பன சிக்கியதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவல் தெரிவிக்கின்றது.

இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின்பெரேராவின் உத்தரவுக்கமைய மாங்குளம் பொலிஸ்நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் உதயகுமார, பொலிஸ் பரிசோதகர் பிரியதர்சன, உப பொலிஸ் பரிசோதகர் அ.சியாளன், பொலிஸ் பரிசோதகர் லால் ஆகியோர் தலைமையில் பொலிஸ் கொஸ்தாபல்களான ராஜபக்ஷ (31331), வசந்த (13816), பில்றோய் (88695), ருவான் (71542) அடங்கிய குழுவினரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் பிற்பகல் ஒரு மணியளவில் பனிக்கன்குளம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மண் அகழ்வு குற்றச்சாட்டில் ஒரு உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டு சாரதியும் கைது செய்யப்பட்டதோடு சட்டத்துக்கு முரணான வகையிலான வகையில் மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட ஒரு உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிற்பகல் 4 மணியளவில் வடகாடு பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மண் அகழ்வு குற்றச் சாட்டில் ஒரு உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டதோடு சட்டத்துக்கு முரணான வகையில் மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒரு உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டதுடன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாலை 5.30 மணியளவில் பனிக்கன்குளம் பகுதியில் சட்டத்துக்கு முரணான வகையில் மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒரு உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்


இதேவேளை விளாத்திக்குளம் பகுதியில் சட்டத்துக்கு முரணான வகையில் மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒரு டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்டதுடன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த வகையில் பொலிஸாரின் இந்த அதிரடி நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட 6 பேரும் வாகனங்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதாக பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

# திருவாசக முற்றோதல்

(பளை)

பளை இரட்டைக்கேணி கண்ணகி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த கலாசார விழா நேற்று முன்தினமும் நேற்றும் வவுனியாவில் நடைபெற்றது. இதில் முதலாம் நாள் நிகழ்வான நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு வவுனியா பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் மொழியரசி செல்வி கலா குமரப்பா அரங்கில் இடம்பெற்ற நிகழ்வின் போது... (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2016-13.01.2017



*சந்தர்ப்பங்களை சாதகமாக்கிக் கொள்ளும் சிம்ம ராசி நேயர்களே!*

உங்களின் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஜென்ம ராசியில் ராகுவும், 7இல் கேதுவும் சஞ்சரிக் கிறார்கள். கேதுவோடு செவ்வாய் இணைந்திருக்கிறார். யோகாதிபதி செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் இருப்பதால், இந்த மாதத்தை யோகமான மாதமென்றே சொல்லலாம். தேக நலன் சீராகும். செல்வ வளம் பெருகும். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சியில் இதுவரை இருந்த இடையூறுகள் அகலும்.

விரயாதிபதி சந்திரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராசிநாதன் சூரியனும், தனாதிபதி புதனும் இணைந்து சந்திரனைப் பார்க்கின்றனர். வேலைக்காக வெளிநாடுகளில் விண்ணப்பித்தவர்களுக்கு அனுகூலமான தகவல் வந்து சேரும். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள்.

இரண்டாம் இடத்தில் சஞ்சரிக்கும் குருபகவான் உங்கள் ராசிக்கு 6,8,10 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். இதன் விளைவாக எதிரிகள் விலகுவார்கள். இலாகா மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமையும். வீடு, வாகனங்கள் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். வீட்டுப் பராமரிப்புச் செலவு உருவாகும். வாகனங்களில் அடிக்கடி பழுது ஏற்படுவதை முன்னிட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவதற்கான முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

'அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருக்கிறதே' என்று நீங்கள் நினைக்கலாம். இதுவரை உங்களுக்கு மனக் கஷ்டத்தையும் பணக்கஷ்டத்தையும் கொடுத்து வந்த சனிபகவான் இனி நன்மைகளைச் செய்யப் போகிறார். சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிபகவானை வழிபடுவது நல்லது. சனிக்கிழமை அன்று அதிகாலையில் விநாயகரையும் ஆஞ்சநேயரையும் வழிபாடு செய்தால் சுப விரயங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

ராகு-கேதுக்களின் ஆதிக்கம் கூடுதலாக இருப்பதால் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்வதோடு மகாலட்சுமி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமிக்கு லட்சுமி கவசம் பாடி வழிபாடு செய்வது சிறப்புத் தரும். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும். புத ஆதித்ய யோகத்தோடு இந்த மாதம் பிறப்பதால் புதிய

## முயற்சிகளில் வெற்றி கிட்டும்

திருப்பங்கள் பலவற்றை சந்திப்பீர்கள்.

நடராஜர் தரிசனம் நன்மையை வழங்கும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 19ஆம் திகதி விருச்சிக ராசிக்கு புதன் வருகிறார். வக்ர இயக்கத்தில் வந்தாலும் கூட நான்காமிட த்தில் சஞ்சரிப்பது நன்மைதான். 2.11 இற்கு அதிபதி 4இல் வரும் பொழுது குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக் குவீர்கள். இதுவரை ஸ்தம்பித்து நின்ற தொழில் தானாக நடைபெறும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்பொழுது உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். புதிய தொழில்




தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 30ஆம் திகதி கும்ப ராசிக்கு சுக்ரன் செல்கிறார். உங்கள் ராசிக்கு 3,10இற்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் சப்தம ஸ்தானத்திற்கு செல்வது யோகம்தான். வசதிகள் பெருகும். வாய்ப்புகள் வந்து சேரும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். தொழிலில் எதிர்பார்த்தபடி எல்லாம் கிடைக்கும். ஒரு சிலருக்கு, பழைய தொழிலை மாற்றி, புதிய தொழில் தொடங்கும் எண்ணம் உருவாகலாம். உத்தியோகத் தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் அனுகூலத்தோடு இடமாற்றங்கள் எளிதில் வந்து சேரும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 8ஆம் திகதி தனுசு ராசிக்கு புதன் செல்கிறார். வக்ர இயக்கத்தில் உள்ள புதன் தக்க விதத்தில் பலன்களை வழங்குவார். அஞ்சல் வழியிலும் அனுகூலங்கள் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலை மோதும். நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

இந்த மாதம் அனுமன் ஜெயந்தி அன்று அனுமனை வழிபட்டு வருவதன் மூலம் தடைகள் அகலும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட காரியத் தடைகள் அகலும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர். சுபச் செலவு உண்டு. குடும்ப ஒற்றுமை கூடும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதன் மூலம் குழப்பங்களில் இருந்து விடுபட இயலும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். தாய்வழி ஆதரவோடு பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர். அலுவலகப் பணிகளில் இருப்பவர்களுக்கு, சக ஊழியர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். நடராஜர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



*எண்ணிய காரியம் ஈடேறும் வரை முயற்சிக்கும் கன்னி ராசி நேயர்களே!*

உங்களின் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் புதன் வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். இதனால் வரும் மாற்றங்களால் நல்ல ஏற்றங்கள் கிடைக்கும் என்றே சொல்லலாம். உங்கள் ராசிநாதனாகவும் 10ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன், வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது தொழில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி பெற, புதிய நண்பர்கள் உங்களோடு வந்திணைவர். இதனால் பொருளாதார நிலை உயர வழி உண்டாகும்.

சேமிக்க வேண்டுமென்ற ஆசை உருவாகும் நேரம் இது. புதியதாகத் தொடங்கிய தொழில் மூலமும் இலாபம் வந்து சேரலாம். குருவின் பூரண அருள் உங்களுக்கு இருக்கிறது. உங்கள் ராசியிலேயே குரு பகவான் சஞ்சரித்து வந்தார். சஞ்சரித்த குரு இப்பொழுது சகாயத்தை அள்ளி வழங்கும் நேரமாக அமைகிறது.

தலைமைப் பதவிகள் தானாக வந்து சேரும். நிலைமை உயர்ந்து நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும். இல்லம் தேடிவந்த வரன்கள் எல்லாம் இரண்டாண்டுகளாகத் திரும்பி, திரும்பிச் செல்கின்றதே என்ற கவலை இனி அகலும். சனி மூன்றில் இருப்பதால் உடன்பிறப்புகள் உங்களோடு பகை பாராட்டலாம். அவர்களை அனுசரித்துச் சென்றால் ஆதாயம் உண்டு.

புத-ஆதித்ய யோகத்தின் விளைவாக அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிக நன்மை கிடைக்கும். திடீரெனப் பொறுப்புகள் வந்து மகிழ்ச்சியை வழங்கலாம். ஒரு சிலருக்கு வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. அங்ஙனம் வாங்கும் பொழுது குடும்ப உறுப்பினர்களின் ஜாதகத்தை ஆராய்ந்து, பூமிகாரகன் செவ்வாய் யாருடைய ஜாதகத்தில் வலுவாக இருக்கிறாரோ அவருடைய பெயரில் வாங்குவது நல்லது. விலகிச் சென்ற சொந்தங்களில் ஒரு சிலர் உங்களோடு வந்திணைவர். வியாழன் தோறும் விரதமிருந்து குரு கவசம் பாடி குருவை வழிபடுவதன் மூலம, எந்த நாளையும் இனிய நாளாக அமைத்துக் கொள்ள இயலும்.

## உத்தியோக அனுகூலம் கிட்டும்!

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 19ஆம் திகதி விருச்சிக ராசிக்குப் புதன் செல்கிறார். ராசிநாதன் புதன் 3இல் சஞ்சரிக்கும் பொழுது, வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். இழப்புகளை ஈடுசெய்ய முன்வருவீர்கள். எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும்.




மங்களத் தகவல் வீடு தேடிவரும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சியில் அனுகூலம் கிடைக்கும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 2,9இற்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, வாங்கிய கடனைக் கொடுக்க வாய்ப்புகள் வந்து சேரும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. முக்கியப் பிரமுகர்கள் இல்லம் தேடிவந்து உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளைப் போக்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தங்கம், வெள்ளி வாங்கி மகிழும் நேரமிது.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 8ஆம் திகதி தனுசு ராசிக்கு புதன் செல்கிறார். இந்தக் காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. அக்கம் பக்கத்து வீட்டாரின் அன்புத் தொல்லைக்கு ஆளாக நேரிடும். செய்யும் காரியங்களை கவனித்துச் செய்தால் சிக்கல்களில் இருந்து விடுபடலாம். இடம், பூமி விற்பனையில் தாமதம் ஏற்படலாம். நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்புகள், மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். இம்மாதம் புதன்கிழமை தோறும் விஷ்ணுவையும் லட்சுமியையும் வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

உங்களை முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கவிருக்கும் மாதம் இது. முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உறவினர் பகை அகலும். ஊர்மாற்றம் இடமாற்றம் மட்டுமல்ல, நாடுமாற்றங்கள் கூட ஒரு சிலருக்கு வந்து சேரலாம். சென்ற மாதத்தில் கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்போடு உன்னதமான காரியமொன்று இல்லத்தில் நடைபெறப் போகிறது. விலை உயர்ந்த மின்சாதனப் பொருட்களை வாங்கும் சூழ்நிலை உருவாகும். கணவன்-மனைவிக்குள் கனிவும் பாசமும் பெருகும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் நடைபெறும் நேரமிது. ஆருத்ரா தரிசனத்தன்று நடராஜப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

# ஜெயலலிதா மரணத்தின் மர்மங்கள்!



பன்னீருக்கு மோடியின் வாஞ்சை

இப்படியொரு துக்கம் ததும்பிய, இறுக்கம் நிறைந்த, பதற்றம் கலந்த பதவியேற்பு விழாவை தமிழக ஆளுநர் மாளிகை இதற்குமுன் கண்டது இல்லை. கடந்த டிசெம்பர் 5ஆம் திகதி நள்ளிரவில், ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் தமிழக அமைச்சரவை பதவியேற்றுக்கொண்ட நிகழ்ச்சி விசித்திரமாகவே நடந்து முடிந்தது.

அமைச்சரவை பதவியேற்பு என்றாலே, உற்சாகம் ஊற்றெடுக்கும். உள்ளேயும் வெளியேயும் தோரணங்கள் கட்டப்பட்டு விழாக்கோலம் பூண்டிருக்கும். ஆளும்கட்சி வி.ஐ.பிக்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், முக்கியப் பிரமுகர்கள் என அரங்கம் நிரம்பி வழியும். முதல்வராக, அமைச்சர்களாகப் பதவியேற்பவர்களின் முகங்களில் புன்னகையும் பூரிப்பும் வெளிப்படும். ஆனால், இவற்றுக்கு எல்லாம் நேர்மாறாக, ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்றது.

'முதல்வர் ஜெயலலிதா காலமானார்' என்று தொலைக்காட்சிகளில் செய்தி வெளியானதால் ஏற்பட்ட களேபரத்துக் குப் பின்னர், 'வைத்தியர்களின் தீவிரக் கண்காணிப்பில் முதல்வர் இருக்கிறார்' என்று மறுப்பு அறிக்கை வெளியான பிறகும்கூட, அப்பலோ வைத்தியசாலையில் பதற்றம் தணியவில்லை. அப்போது, அ.தி.மு.கவின் தலைமை நிலைய மேலாளர் மகாலிங்கம், அப்பலோவில் இருந்து காரில் வெளியேறினார். 'ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமைக்கழக அலுவலகத்தில் மாலை 7 மணி அளவில் அ.தி.மு.க எம்.எல்.ஏ-க்கள் கூட்டம் நடக்க உள்ளது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக அவர் செல்கிறார்' என்று தகவல் வெளியானது. மகாலிங்கம் வெளியேறிய பிறகு, அப்பலோவில் இருந்த அரசு உயர் அதிகாரிகள் ஒவ்வொருவராக வெளியேறத் தொடங்கினர்.

பின்னர், இரவு 8 மணி அளவில் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அப்பலோவில் இருந்து அ.தி.மு.க. தலைமைக்கழக அலுவலகத்துக்குச் சென்றனர். பின்னர், ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அமைச்சர்களும் அப்பலோவில் இருந்து தலைமைக்கழகம் சென்றனர். அங்கு எம்.எல்.ஏ-க்கள் கூட்டம் நடந்தது. பின்னர் நள்ளிரவு 12 மணி அளவில் ஓ.பன்னீர்செல்வம் உட்பட அமைச்சர்கள் அனைவரும் ஆளுநர் மாளிகை நோக்கிச் சென்றனர். எம்.எல்.ஏ-க்களை ஏற்றிச் செல்வதற்காக ஏசி பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. 12.45 மணி அளவில் விழா அரங்கத்துக்கு ஆளுநர், ஓ.பன்னீர் செல்வம் உட்பட அனைவரும் வந்தனர். அதிகாலை ஒரு மணி அளவில் நிகழ்ச்சி தொடங்கியது.

இறுக்கமும் மௌனமும் குடிகொண்டிருந்த அந்த அரங்கத்தில் பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவ், ஓ.பன்னீர் செல்வம் ஆகிய இருவரும் அருகருகே அமர்ந்து இருந்தனர். பின்வரிசையில் தலைமைச் செயலாளர் ராமமோகனராவ், அரசின் ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், ஆளுநரின் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா உள்ளிட்ட அதிகாரிகள் அமர்ந்திருந்தனர். இவர்களுக்கு எதிரே அமைச்சர்கள் அனைவரும் அமர்ந்திருந்தனர். எடப்பாடி பழனிசாமி, திண்டுக்கல் சீனிவாசன், வேலுமணி, தங்கமணி ஆகியோர் முன்வரிசையில் அமர்ந்திருந்தனர்.

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு இரங்கல் குறிப்பை ஆளுநர் வித்யாசாகர் ராவ் முதலில் வாசித்தார். பின்னர் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தினர். அதன் பின்னர் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. அதன் பிறகு, பதவியேற்பு நடந்தது. முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் பதவியேற்றார். "ஓ.பன்னீர்செல்வம் எனும் நான்..."



என்று ஆளுநர் வித்யாசாகர் ராவ் தமிழில் சொன்னதும், பன்னீர்செல்வம் உறுதிமொழியை வாசித்தார். முதல்வராக பன்னீர்செல்வம் பதவியேற்றவுடன், இரண்டு பிரிவுகளாக ஏனைய அமைச்சர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாகப் பதவியேற்றனர். 20 நிமிடங்களில் நிகழ்ச்சி முடிந்தது. பிறகு, அனைவரும் அப்பலோ வைத்தியசாலைக்கு வந்தனர்.

முதல்வர் பதவியில் இருந்த அண்ணா, எம்.ஜி.ஆர் ஆகியோர் மரணம் அடைந்த சமயத்தில், இடைக்கால முதல்வராக ஒருவர் பொறுப்பேற்று, பின்னர் முதல்வராக ஒருவர் தேர்வுசெய்யப்பட்ட முறை பின்பற்றப்பட்டது. அண்ணா மரணம் அடைந்தபோது, இடைக்கால முதல்வராக நெடுஞ்செழியன் பதவியேற்றார். அதன் பிறகு, தி.மு.க. எம்.எல்.ஏ-க்கள் கூட்டம் நடந்தது. அதில், முதல்வராக கருணாநிதி தேர்வுசெய்யப்பட்டார். எம்.ஜி.ஆர் மரணம் அடைந்தபோது, இடைக்கால முதல்வராக நெடுஞ்செழியன் பதவியேற்றார். பின்னர், எம்.எல்.ஏ-க்கள் கூட்டம் நடைபெற்று வி.என்.ஜானகி முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டார். இப்போது, ஜெயலலிதா மரணத்தைத் தொடர்ந்து, இடைக்கால முதல்வர் என நியமிக்கப்படாமல், ஓ.பன்னீர்செல்வம் முதல்வராகப் பதவியேற்றுக் கொண்டார்.

2014 ஆம் ஆண்டு சொத்துக் குவிப்பு வழக்கில் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தால் ஜெயலலிதாவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதால், அவரது முதல்வர் பதவி பறிபோனது. அதனால், ஓ.பன்னீர்செல்வம் முதல்வர் ஆனார். அவரது தலைமையில் அமைச்சர்கள் பதவியேற்றனர். அந்த நிகழ்ச்சியில், ஓ.பன்னீர்செல்வம் உட்பட அமைச்சர்கள் அனைவரும் சிந்திய கண்ணீர், ஆளுநர் மாளிகையில் ஆறாக ஓடியது. அனைவரும் குலுங்கிக் குலுங்கி அழுதனர். ஆனால், இந்த முறை ஓ.பன்னீர்செல்வம் உட்பட அனைவரும் இறுகிய முகங்களுடன் காட்சி அளித்தனர். யார் கண்களிலும் ஒரு சொட்டு கண்ணீர்கூட வழியவில்லை!

சசிகலா, சசிகலாவின் கணவர் எம்.நடராஜன், சசிகலாவின் சகோதரர் திவாகரன், திவாகரனின் மகன் ஜெயானந்த், சசிகலாவின் அண்ணி இளவரசி, இளவரசியின் மகள் பிரியா, மகன் விவேக், விவேக் மனைவி கீர்த்தனா, சசிகலாவின் அக்காள் மகன் பாஸ்கரன், சசிகலாவின் அண்ணன் மகன் மகாதேவன் உட்பட ஒட்டுமொத்த சசிகலாவின் உறவுகளால் அமைக்கப்பட்ட 'பாதுகாப்பு வளையத்தில்'தான் ஜெயலலிதாவின் உடல் வைக்கப்பட்டிருந்தது. ஜெ. உடல் அருகில், அமைச்சர்களால்கூட நெருங்க முடியவில்லை. ஜெயானந்தின் நண்பர் தேவாதான் உணவு, டீ ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்தார். அடையாறு ஆனந்தபவனில் இருந்து உணவு வரவழைக்கப்பட்டது.

அமைச்சர் ஜெயக்குமாரும், நாடாளுமன்ற சபாநாயகர் தம்பிதுரையும் பரபரப்பாக இருந்தனர். மு.க.ஸ்டாலின் ஜெயலலிதா உடலுக்கு அஞ்சலி செலுத்தியவுடன், படிக்கட்டில் அமர்ந்திருந்த முதலமைச்சர் பன்னீர்செல்வத்தின் கையைப் பிடித்தார். எழுந்த பன்னீர்செல்வத்துக்கு ஆறுதல் சொன்ன ஸ்டாலின், சசிகலா பக்கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை. கனிமொழி அஞ்சலி செலுத்தி விட்டு சசிகலாவிடம் பேசிக் கொண்டிருந்தார்.

ரஜினிகாந்த் அஞ்சலி செலுத்த வந்தபோது, பிரதமர் மோடி வருவதாக தகவல் வந்தது. ரஜினி குடும்பத்தினரை நாற்காலிகள் போட்டு உட்கார வைத்தனர். மோடி வர தாமதம் ஆனதால் ரஜினியை அஞ்சலி செலுத்த அழைத்தனர். சிரம் தாழ்த்தி ஜெயலலிதா உடலுக்கு ரஜினி அஞ்சலி செலுத்தினார். மனைவி லதா, மருமகன் தனுஷ், மகள்கள் சௌந்தர்யா, ஐஸ்வர்யா ஆகியோர் சசிகலாவிடம் பேசிவிட்டுச் சென்றனர். பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் சபீதாவிடம் அஞ்சலி நிகழ்ச்சி ஏற்பாடுகளுக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் பரபரப்பாக வலம் வந்தார். காலையில்




சேலையில் இருந்த சபீதா, மாலையில் வீட்டுக்குப் போய்விட்டு சுடிதாரில் திரும்பினார்.

கவிஞர் வைரமுத்து அஞ்சலி செலுத்திவிட்டு, சசிகலாவிடம் பேசிக்கொண்டிருந்தார். விஜயகாந்த், அவரது மனைவி பிரேமலதா, மைத்துனர் சுதீஷ் ஆகியோர் அஞ்சலி செலுத்த வந்தனர். வெளியேறும் வழியாக விஜயகாந்த் உள்ளே வந்ததால் அவரை பொலிஸ் தடுத்தது. விஜயகாந்த் குரலை உயர்த்தியதால் அவர்களை உள்ளே அனுப்பினர். ஓ.பி.எஸ், சசிகலா என யார் பக்கமும் விஜயகாந்த் திரும்பவில்லை. ஸ்டைலாக கையை உயர்த்தி, பொதுக்கூட்டத்தில் கை காட்டுவதுபோல மக்களை நோக்கி கைகாட்டினார்.

வைகோ அஞ்சலி செலுத்திவிட்டு வந்து பேட்டி கொடுத்தார். அப்போது கமராமேன்கள், "சார்... ரெடி" என்றதும் கடுப்பான வைகோ, "எனக்கு நீ ஆர்டர் போடுகிறாயா?" என கோபமாகக் கேட்டு விட்டு, 20 நிமிடங்களுக்கு மேல் பேசி விட்டுத்தான் அங்கிருந்து நகர்ந்தார். பல ஆண்டுகளாக ஜெயலலிதா இருக்கும் திசைக்கே வராமல் இருந்த எம்.நடராஜன், ராஜாஜி ஹோலில் 'கம்பீரமாக'த் தோன்றினார். ராகுல் காந்தி, தமிழக காங்கிரஸ் பரிவாரங்களுடன் வந்தார்.

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு கூட்ட நெரிசலில் சிக்கி அஞ்சலி செலுத்த வந்தார். தமிழக அரசின் ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், ஒரு பொலிஸ் அதிகாரியை அழைத்து, "ஒரு மாநில முதல்வரை இப்படித்தான் கூட்ட நெரிசலில் அழைத்து வருவீர்களா?" என எச்சரிக்கை செய்தார். மாநில முதல்வர்களும் திரையுலகப் பிரமுகர்களும் வரிசையாக வந்து அஞ்சலி செலுத்தினர். நடிகர் கருணாஸ் அஞ்சலி செலுத்தி, செல்ஃபியும் எடுத்துக்கொண்டார்.

கேரள ஆளுநர் சதாசிவம், முதலமைச்சர் பினராயி விஜயன், முன்னாள் முதலமைச்சர் உம்மன்சாண்டி ஆகிய மூவரும் ஒன்றாக அஞ்சலி செலுத்த வந்தனர். அதை எல்லோரும் ஆச்சர்யமாகப் பார்த்தனர். கேரளாவில் மூன்று நாள் துக்கம், முதல்வர் மறைவுக்கு நாளிதழ்களில் தமிழில் விளம்பரம் என கேரள அரசு ஏற்படுத்திய ஆச்சர்யங்கள் அதிகம். அப்பலோ, போயஸ் கார்டன் என எல்லா இடங்களிலும் துரத்தியடிக்கப்பட்ட ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா, தனது கணவர் மாதவனுடன் அஞ்சலி செலுத்த வந்திருந்தார். "என்னை இவ்வளவு நாட்களாகத் துரத்தியவர்கள், இன்று பெரிய மனது வைத்து என் அத்தைக்கு அஞ்சலி செலுத்த அனுமதித்துள்ளனர்" என சொல்லிவிட்டு சோகமாக நகர்ந்தார் தீபா.

உ.பி முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் வந்தபோது, ஜெயலலிதாவின் உடல் இராணுவ வாகனத்தில் ஏற்றப்பட்டு புறப்படத் தயாரானது. அதை அறிந்த அகிலேஷ் யாதவ், கொஞ்சமும் யோசிக்காமல், காரில் இருந்து இறங்கி கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஓடிப்போய், அந்த வாகனத்தில் ஏறினார். அந்த வாகனத்தில் ஓ.பன்னீர் செல்வம், சசிகலா, இளவரசி மகள் பிரியா ஆகியோர் இருந்தனர்.

**காட்சிகள் விரியும்**

ஜூனியர் விகடன்

# ஊடக சுதந்திரம் கோரி நாடாளுமன்றை முற்றுகையிட்டு போலந்தில் போராட்டம்





ஊடகங்களின் செய்தி வெளியீட்டை கட்டுப்படுத்தும் விதிமுறைகள் தொடர்பாக அதிருப்தி தெரிவித்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆதரவாக போலந்து தலைநகர் வார்சாவில் நாடாளுமன்ற கட்டடத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் போராட்டம் வரவு - செலவு திட்டத்தின் மதான வாக்கெடுப்பை தாமதமாக்கியது. பின்னர் அது முக்கிய நாடாளுமன்ற அறைக்கு வெளியே நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு வரை நூற்றுக்கணக்கான பொலிஸாரை போராட்டக்காரர்கள் சுற்றி வளைத்திருந்தனர்.

“நாடாளுமன்ற கட்டடத்தில் முதல்முறையாக பொலிஸாரை பார்க்கிறேன்” என்று விக் பிளாட்பாம் கட்சியை சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மிகையில் ஸ்டெர்பா தன்னுடைய டுவிட்டர் பதிவில் தெரிவித்திருக்கிறார்.

வலது சாரி சட்டம் மற்றும் நீதி கட்சியின் தலைவர் யாரோஸ்வாஃப் காட்ச்சின்ஸ்கி இந்த போராட்டம் “போக்கிரித்தனம்” என்று கண்டித்துள்ளார்.

“எங்களை பயமுறுத்த யாரையும் அனுமதிக்கமாட்டோம்” என்று அவர் கூறியுள்ளார்.

சட்டம் மற்றும் நீதிக் கட்சியின் பிரதமர் பியட்டா சியிட்லோவோடு அவர் நாடாளுமன்றத்தை விட்டு உள்ளூர் நேரப்படி காலை மூன்று மணிக்கு வெளியேறினார்.

அதிகாரிகளின் வாகனங்கள் செல்வதற்கு வழியேற்படுத்த, பொலிஸார் போராட்டக்காரர்களை கலைப்பதற்காக கண்ணீர்ப் புகைக்குண்டுகளை பயன்படுத்தியதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெர்ஸி மேஸ்டோவிக், டிவிஎன்24 செய்திகள் தொலைக்காட்சிக்கு தெரிவித்தார்.

பத்திரிகைகளை தவிர்த்து விட்டு சிறியதொரு அரங்கத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை வரவு - செலவு திட்டம் தொடர்பான முக்கிய வாக்கெடுப்பு நடத்தியது சட்டத்திற்கு புறம்பானது என்று அரசை எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

1989 ஆம் ஆண்டு ஜனநாயக முறை மீட்கப்பட்ட பிறகு நாடாளுமன்ற அறைக்கு வெளியே நடத்தப்பட்டுள்ள வாக்கெடுப்பு இதுதான்.

வரவு - செலவு திட்டத்தை அங்கீகரிக்க போதுமான உறுப்பினர்கள் இருந்ததாக காட்ச்சின்ஸ்கியும், பிற சட்டம் மற்றும் நீதி கட்சியின் உறுப்பினர்களும் கூறியுள்ளனர்.

ஆனால், இது தொடர்பாக அடுத்த வாரம் மீண்டும் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கோரியுள்ளனர்.

போதுமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்ததற்கான எந்தவொரு சான்றும் இல்லை. மேலும் அதில் பங்கேற்ற பலரும் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை என்று சந்தேகப்படுகின்றோம் என்று நோவாடெஸ்னா என்கிற எதிர்க்கட்சியின் தலைவர் ரிஸ்சார்ட் பெட்ரு தெரிவித்தார்.

தங்களுடைய பணியில் அரசு விதிக்க திட்டமிட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு எதிராக ஒருநாள் நாடாளுமன்ற நடவடிக்கைகளை செய்திகளாக்க போலந்தின் பக்கச்சார்பற்ற ஊடகங்கள் மறுப்புத் தெரிவித்திருக்கின்றன.

அடுத்த ஆண்டு முதல் குறைந்த எண்ணிக்கையிலான பத்திரிகையாளர்களே நாடாளுமன்ற கட்டடத்திற்குள் அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஒளிப்பதிவு செய்ய தெரிவு செய்யப்பட்ட 5 தொலைக்காட்சி நிறுவனங்களே அனுமதிக்கப்படும் என்று தெரிகிறது.

இந்த நடவடிக்கைகள், கட்டுப்பாடானவை என்று நம்பவில்லை என்று அரசு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு அதிகாரத்திற்கு வந்த பிறகு, வலது சாரி சட்ட மற்றும் நீதி கட்சியானது, பத்திரிகை சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதாகவும், நீதி துறையை குறைத்து மதிப்பிடுவதாகவும் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கிறது. (இ-3)

# இந்துக்களுக்கு நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஜனாதிபதி தேர்தலில் தன்னை ஆதரித்து வெற்றி பெறச்செய்ததற்காக இந்திய வம்சாவளியினருக்கு ட்ரம்ப் தனது நன்றியை தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற டொனால்டு ட்ரம்ப், இப்போது நாடு முழுவதும் பயணம் செய்து வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து வருகிறார்.

இந்த நிலையில் அவர் புளோரிடா மாகாணம், ஆர்லண்டோ நகரில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசினார்.

அப்போது ஜனாதிபதி தேர்தலில் தன்னை ஆதரித்து வெற்றி பெறச்செய்ததற்காக இந்திய வம்சாவளியினருக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், “இந்த கூட்டத்தில் திரளான இந்திய சமூகத்தினர்- இந்துக்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்துக்களுக்கு நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம்” என தெரிவித்தார்.

தொடர்ந்து ட்ரம்ப் பேசும் போது, “இந்தியர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் வியப்பு அளிப்பவர்கள். அவர்கள் நமக்கு வாக்களித்தார்கள். அவர்கள் அற்புதமானவர்கள்” என புகழாரம் சூட்டினார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வாக்குப்பதிவு நடப்பதற்கு 15 நாட்கள் முன்னதாக ட்ரம்ப் குடியரசு கட்சி இந்து கூட்டமைப்பினர் நடத்



திய நிகழ்ச்சியில் பங்கேற்று பேசியதும், இந்திய-அமெரிக்க உறவு மேலும் வலுப்படுவதற்கு தான் பாடுபடப் போவதாக கூறியதும் நினைவு கூரத்தக்கது. (இ-3)

# இந்தோனேசியாவில் இராணுவ விமானம் விபத்துக்குள்ளானது

## 13 பேர் உயிரிழப்பு

இந்தோனேசியா நாட்டில் இராணுவ விமானம் விபத்துக்குள்ளான சம்பவத்தில் 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்தோனேசியா நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள பப்புவா நியூகினியா டிமிக்கா என்ற இடத்தில் இருந்து வாமெனா என்ற இடத்தை நோக்கி நேற்றுக் காலை உணவுப் பொருட்களை ஏற்றிச்சென்ற 'ஹெர்குலஸ் சி-130' ரக விமானம் மோசமான வானிலை காரணமாக தரையில் விழுந்து நொறுங்கியது.

இந்த கோர விபத்தில் அந்த விமானத்தில் இருந்த 3 விமானிகளும், 10 இராணுவ வீரர்களும் சம்பவ இடத்திலேயே பலியாகினர். (இ-3)

# ஆப்கானிஸ்தானில் விமான நிலைய பெண் ஊழியர்கள் 5 பேர் சுட்டுக்கொலை

(கந்தஹார்)

ஆப்கானிஸ்தானில் விமான நிலையத்தில் பணியாற்றி வந்த 5 பெண் ஊழியர்களும துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்ள கந்தஹார் நகர விமான நிலையத்தில் பணியாற்றி வந்த பெண் ஊழியர்கள் 5 பேர் நேற்று முன்தினம் காலை ஒரு மினி வானில் வழக்கம் போல பணிக்கு சென்று கொண்டிருந்தனர்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த 2 பேர், அந்த மினி வான் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர்.

இதில் வானில் இருந்த 5 பெண் ஊழியர்களும் கொல்லப்பட்டனர். வானை ஓட்டி வந்த சாரதியும் இரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார். இந்த சம்பவம், அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக கந்தஹார் ஆளுநரின் செய்தி தொடர்பாளர் சமீம் கடுல்வாக் கூறும்போது, “கந்தஹார் விமான நிலையத்தில் பெண்பயணிகளின் உடைமைகளை பரிசோதிக்கிற பொறுப்பில் இருந்து வந்த 5 பெண் ஊழியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்றார்.

கந்தஹார் விமான நிலையத்தின் இயக்குநர் அகமதுல்லா பைஸி கூறுகையில், “வேலை பார்க்கிற பெண்களுக்கு கொலை மிரட்டல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதனால் அவர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

பெண்கள் வேலை பார்ப்பதை விரும்பாத கும்பல், இந்த செயல்களில் ஈடுபட்டு வருகிறது என்றார். நேற்றைய தாக்குதலுக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை.

இருப்பினும் ஆப்கானிஸ்தானில் பெண்கள் மீது தலிபான் அமைப்பினர் தான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால், இந்த தாக்குதலையும் அவர்கள் தான் நடத்தி இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. (இ-3)



# அலெப்போவிலிருந்து வெளியேற பல்லாயிரக்கணக்கான மக்கள் தவிப்புடன் காத்திருப்பு

(டமாஸ்கஸ்)
சிரியாவில் தற்காலிக போர் நிறுத்தத்தை இரு தரப்பினரும் திடீரென்று இரத்து செய்ததால் அலெப்போ நகரை விட்டு வெளியேற முடியாமல் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் தவிப்புடன் காத்திருக்கின்றனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தை பதவியில் இருந்து நீக்குவதற்காக கடந்த ஆறாண்டுகளாக உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது.

அங்குள்ள கிழக்கு அலெப்போ நகரை கிளர்ச்சியாளர்களிடம் இருந்து மீட்பதற்காக கடுமையான சண்டை நடந்து வந்தது. நகரின் பெரும்பான்மையான பகுதிகளை ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் படைகள் மீட்டு விட்டன.

இதற்கிடையே அலெப்போ வில்போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், ஜனாதிபதி ஆதரவு படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நிறுத்தம் செய்வதற்காக துருக்கியும் ரஷ்யாவும் முயற்சி மேற்கொண்டன.

அதில் ஜனாதிபதி ஆதரவு படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது.

இந்த உடன்பாட்டின்படி கிழக்கு அலெப்போ நகரில் இருந்து கிளர்ச்சியாளர்களும் பொதுமக்களும் வெளியேறி, வடக்கு சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ள பகுதிக்கு சென்று விட வேண்டும்.

போரினால்காயம்அடைந்த மக்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உடனடியாக வெளியேற முன்னுரிமை அளிக்கப்பட்டது. அவர்கள் வெளியேறுவதற்காக 20 பேருந்துகள் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

துருக்கி அரசு ஏற்பாடு செய்த இந்த பேருந்துகளின் மூலம் நேற்று முன்தினம் ஒருநாளில் மட்டும் மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேறியதாகவும் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த கடந்த 72 மணி நேரத்தில் சுமார் பத்தாயிரம் மக்கள் வெளியேறியுள்ளதாகவும் இங்குள்ள போர் கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது.

அலெப்போ நகரம் மீண்டும் ஜனாதிபதி படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பது, ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. இந்த சண்டையில் சிரியாவுக்கு உதவியாக இருந்த ரஷ்யா மற்றும் துருக்கிக்கு கிடைத்துள்ள வெற்றியாகவும் கருதப்பட்டது.

இருப்பினும், அங்கு இன்னும் சுமார் 50 ஆயிரம் மக்கள் சிக்கித் தவிப்பதாக ஐ.நா. மனிதநேய முகமை கவலை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தற்காலிக போர்நிறுத்தத்தை நேற்று அரசுப்படைகளும் போராளிகளும் மீறித் தாக்குதலில் ஈடுபட்டனர். அலெப்போ நகரில் இருந்து மக்களை வெளியேற்ற அளிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்ததாக அறிவிப்பு வெளியானது.

போராளிகள் வசமுள்ள ஃபுவா மற்றும் கர்பயா நகரில் இருக்கும் பொதுமக்களை வெளியேற்ற வேண்டுமானால் டமாஸ்கஸ் மாகாணத்தில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளடயா மற்றும் மடானி நகரங்களில் இருந்து போராளிகளை அரசு விடுவிக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டதால் அலெப்போவை விட்டு வெளியேறும் வாயில்கள் அனைத்தும் அடைக்கப்பட்டன.




இதனால், தங்களது வீடுகளை விட்டு வெளியேறி அலெப்போ நகரின் எல்லையோரம் உள்ள சோதனைச் சாவடி அருகே பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று முன்தினமிரவிலிருந்து பல மணிநேரமாக நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

சாப்பிட உணவோ, குடிநீரோ கிடைக்காமல் பலமணி நேரமாக திறந்தவெளியில் கடும்குளிரில் காத்திருப்பதால்முதியோர்களும்குழந்தைகளும் உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதாக பலர் குற்றம் சாட்டினர்.

சொத்து, சுகம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, உடலுறுப்புகள் உருக்குலைந்தும் குண்டுவீச்சில் தங்களது குடும்பத்தினரை பறிகொடுத்தும் அலெப்போவில் வாழ்வதை விட எங்காவது ஒரு அகதிகள் முகாமில் தங்கிக் கொள்ளலாம் என்ற ஆசையில் நகரை விட்டு வெளியேற தீர்மானித்ததாக அவர்களில் சிலர் சோகத்துடன் தெரிவித்தனர். (இ-3)

## குற்றச்சாட்டுக்களிலிருந்து ஏ.டி.டி. விடுவிக்கப்பட்டார்



மாலியின் முன்னாள் ஜனாதிபதி அமடு டூமாணி டூரே மீதான தேசத் துரோக குற்றச்சாட்டுக்களை அந்நாட்டு நாடாளுமன்றம் கைவிட்டுள்ளது.

ஏ.டி.டி. என்று பரவலாக அறியப்பட்ட அமடு டூமாணி டூரே, 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற புரட்சியில் ஆட்சியிலிருந்து இறக்கப்பட்டார்.

நாட்டின் வடக்கே இருந்த போராளிகளை தோற்கடிக்க ஜனாதிபதியாக இருந்த டூரி இராணுவத்திற்கு வழிவிடாதது தொடர்பான குற்றச் சாட்டுக்கள் குறித்து நாடாளுமன்ற ஆணையம் ஒன்று விசாரித்து வந்தது.

அமடு டூமாணி டூரே மீதான பல வழக்குகளில் இதுவும் ஒன்றாகும். ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி நடைபெற்றதினிருந்து செனி கலில் தஞ்சம் அடைந்திருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# ரஷ்யா மீது சைபர் போர் அமெரிக்கா எச்சரிக்கை

(கொழும்பு)
ரஷ்யா மீது சைபர் போர் தொடுப்போம் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கடந்த நவம்பர் 8 ஆம் திகதி நடைபெற்றது. குடியரசுக் கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்பும் ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளின்டனும் போட்டியிட்டனர். இதில் ட்ரம்ப் வெற்றி பெற்றார். எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி அவர் பதவியேற்க உள்ளார்.

ஹிலாரி வெளியுறவு அமைச்சராக இருந்தபோது அரச ஈ-மெயிலை பயன்படுத்தாமல் தனிப்பட்ட ஈ-மெயில் சர்வரை பயன்படுத்தியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் வாக்குப்பதிவுக்கு சில நாட்களுக்கு முன்பு ஹிலாரியின் 6.5 இலட்சம் ஈ-மெயில்கள் ஊடகங்களில் வெளியாகின.

ஹிலாரியின் ஈ-மெயில்களை ரஷ்ய உளவுத் துறை ஹக்கிங் செய்து விக்கிலீக்ஸ் மூலம் வெளியிட்டிருக்கிறது என்று அமெரிக்க உளவு அமைப்பான சிஐ.ஏ. அண்மையில் குற்றம் சாட்டியது. இந்த கருத்தை அமெரிக்காவின் எப்.பி.ஐ. பொலிஸாரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஹிலாரியை தோற்கடிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ரஷ்ய உளவுத்துறை செயற்பட்டிருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் குற்றம் சாட்டி வருகின்றன.



இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவிக்கையில்,

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு தெரியாமல் எதுவும் நடக்காது. ஜனநாயக கட்சியின் முக்கிய ஈ-மெயில்களை ரஷ்ய உளவுத் துறை திருடியுள்ளது. இதற்குப் பதிலடியாக ரஷ்யா மீது சைபர் போர் தொடுப்போம்.

இந்த விவகாரத்தில் ரஷ்யாவின் அபாயகரமான நடவடிக்கைகளை குடியரசு கட்சி புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்ய உளவுத்துறை திரைமறைவு செயலில் ஈடுபட்டதாக கூறப்படுவதை புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆரம்பம் முதலே மறுத்து வருகிறார். (இ-3)

# துருக்கி வெடிகுண்டுத் தாக்குதலில் இராணுவத்தினர் 13பேர் உயிரிழப்பு

## 48 பேர் படுகாயம்

துருக்கியின் மத்திய பகுதியின் இராணுவ வீரர்களை ஏற்றிச் சென்ற பேருந்தின் மீது வெடிகுண்டு நிரம்பிய கார் மோதியதில் இராணுவ வீரர்கள் 13 பேர் பலியாகினர். 48 பேர் படுகாயமடைந்தனர்.

இது குறித்து துருக்கி இராணுவம் வெளியிட்ட தகவலில் "துருக்கி இராணுவத்தின் கீழ் நிலையில் உள்ள வீரர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை அனுமதிபெற்று உள்ளூரிலுள்ள சந்தைக்கு பொருட்கள் வாங்க பேருந்தில் சென்றனர்.

அப்போது வெடி குண்டுகள் நிறைந்த வாகனத்தை இராணுவ வீரர் கள் வந்த பேருந்தின் மீது பயங்கரவாதிகள் மோதச் செய்தனர்.

இதில் பேருந்தில் பயணம் செய்த 13 பேர் பலியாகினர். 44 பேர் பலத்த காயம் ஏற்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்" என்று கூறப்பட்டுள்ளது.



கடந்த டிசெம்பர் 10 ஆம் திகதி கால்பந்தாட்ட மைதானத்தில் நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் 44 பேர் பலியாகினர்.

இந்தத் தாக்குதலுக்கு குர்திஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்றிருந்தனர். இந்த நிலையில் மீண்டும் இதேபோன்ற தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

துருக்கியில் அரசுக்கு எதிராக குர்திஸ் இனத்தவரும் ஜிகாதிஸ்டுகளும் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இணையத்தில் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் செய்திகள்

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இணையத்தில் வெளி யாகும் தகவல்கள் பொய்யா னவை என ஜனாதிபதி மைத திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார். மலேசியாவின் பிரிக்பீல்ட் அமைந்துள்ள பௌத்த விஹாரையில் நேற்று முன்தினம் அவர் இதனைத் தெரிவித்தார்.



"தற்போதைய அரசாங்கம் தொடர்பில் இணையத்தில் போலி யான பிரசாரங்கள் செய்யப்படு கின்றன. இணையத்தின் ஊடாக செய்யப்படும் பிரசாரங்களில் உண் மையில்லை. தற்போதைய அரசா ங்கம் நாட்டை பிளவடையச் செய் வதாகவும், இராணுவத்தை பல வீனப்படுத்த முயற்சிப்பதாகவும் போலிப் பிரசாரங்கள் செய்யப்ப டுகின்றன.

இவ்வாறான பிரசாரங்கள் முழு மையாகவே பொய்யானவை. எவ் வாறான தடைகள் ஏற்படுத்தப் பட்டாலும் நாட்டை கட்டியெழுப் பும் திட்டம் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# சர்வஜன வாக்கெடுப்பு

புதிய அரசியலமைப்பைத் தயா ரிப்பதற்கான செயற்பாடுகள் முன் னெடுக்கப்பட்டுள்ள நிலையில், ஆறு உப-குழுக்களின் அறிக்கை கள் மீதான விவாதம், நாடாளு மன்றத்தில் ஜனவரி மாதம் 9,10 மற்றும் 11 ஆம் திகதிகளில் இடம் பெறவிருக்கின்றது. இந்நிலையில், புதிய அரசியலமைப்பை நிறை வேற்றிக்கொள்வதற்கு, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமா, இல் லையா என்ற கேள்வி எழுந்து ள்ளது.

எனினும், அரசியலமைப்புச் சபையை நியமிப்பதற்கான தீர் மானத்தில் இந்த விவகாரம் தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில், 83ஆம உறுப்புரை ஏற்பாடுகளில் முர ணாக இருந்தால் மட்டுமே, நாடா ளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டு, சர்வஜன வாக் கெடுப்பு நடத்தப்படல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 83ஆம பிரிவின் பிரகாரம், அரசியலமைப் பில், 1ஆம், 2ஆம், 3ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம், 30(2) அல்லது 62(2) ஆம் உறுப்புரைகளில் ஏதாவது ஏற்பா டுகளை திருத்துதல் அல்லது மாற் றீடு செய்வதற்கான சட்டமூலம் அல்லது உறுப்புரைகளுடன் முர ண்படும் சட்டமூலம் ஆகியவற்றை சமர்ப்பித்தால் மட்டுமே மேற்குறிப் பிட்டவாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும். 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம்:- 1ஆம்:- இலங்கை, சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஜனநாயக சோசலிசக் குடியரசாகும் என்பதோடு, இல ங்கை ஜனநாயக சோசலிசக் குடி யரசு என அறியப்படுத்தல் வேண் டும். 2ஆம்:- இலங்கை குடியரசு ஒற்றையாட்சி உடைய அரசாகும். 3ஆம்:- இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகவும் பாரதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். இறைமை என்பது ஆட் சித் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகிய வற்றை உள்ளடக்கும். 6ஆம்:- இலங்கை குடியரசின் தேசியக் கொடி 7ஆம்:- இலங்கையின் தேசிய கீதம் 'ஸ்ரீலங்கா தாயே' என்பதாக இருத்தல் வேண்டும். 8ஆம்:- இலங்கைக் குடிய சின் தேசிய தினம், பெப்ரவரி நான்காம் நாளாக இருத்தல் வேண்டும் 9ஆம்:- பௌத்த மதத்துக்கு முதன் மைத் தானம். 10ஆம்:- தான் விரும்பும் மதத்தை பின்பற்றும் மத சுதந்திரம். 11ஆம்: ஆளெவரும் சித் திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழி வான நடத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்பட லாகாது. 30(2) குடியரசின் ஜனாதி பதி, மக்களினால் தேர்ந்தெடுக்கப் படுதல் வேண்டும் என்பதுடன் அவர், ஐந்தாண்டுகள் கொண்ட ஒரு தவணைக்குப் பதவி வகித்தல் வேண்டும். 62(2):- நாடாளுமன் றம் முன்னதாகக் கலைக்கப்பட்டால் ஒழிய, ஒவ்வொரு நாடாளுமன்ற மும் அதன் முதலாவது கூட்டத் துக்கென நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து ஐந்து ஆண்டுகள் கொண்ட காலத்துக்கு தொடர்ந்து இருத்தல் வேண்டும். அதற்கு மேற்பட்ட காலத்துக்கு செல்லக்கூடாது. ஐந்து ஆண்டுகள் முடிவடைந்தால், நாடா ளுமன்றம் கலைக்கப்பட்டதாகச் செயற்படுத்தல் வேண்டும் ஆகிய னவே 83(அ) வின் பிரகாரம் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதில் ஏதாவது திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் கொண்டு வரப்பட்டால் மட்டுமே, புதிய அரசி யலமைப்பின் மீது சர்வஜன வாக் கெடுப்பு நடத்தப்படும். இன்றேல், வாக்கெடுப்பின் போது சமுகம ளிக்காத உறுப்பினர்கள் உட்பட நாடாளுமன்றத்தில் மூன்றிலிர ண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்படும் என்பது குறிப பிடத்தக்கது. (இ-3)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 15

"மே மாதம் 23 ஆம் திகதி தஞ்சாவூர் பேருந்து நிலையத்தில் வைத்து சங்கர் என்பவரை கைது செய் துள்ளார்கள். இவர் விடுதலைப்புலிகள் இயக்கத் தைச் சேர்ந்தவர் என்றும் சென்னை புரசைவாக்க த்தில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்தவர் என்றும் தெரியவந்தது. அவரிடம் இருந்த டைரியில் ஒரு துண் டுச் சீட்டு இருந்தது. அதில் நளினிதாஸ் என்ற பெயரில் எனது அலுவலக தொலைபேசி எண்ணும் அலுவலக முகவரியும் எழுதப்பட்டிருந்தது."



இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாகச் சேர்க்கப்பட்ட சிவராசன் உண்மையில் பிடிக்க முடியாத நபரா... அல்லது பிடிப டாத நபரா? என்ற கேள்வி பலருக் கும் எழுந்திருக்கும். எங்களைக் கேட்டால் மிகச் சாதாரணமாகவே சிவராசனைப் பிடித்திருக்கலாம். வேண்டும் என்றே அவரை 'பிடி க்க முடியாத' நபராக மாற்றிக் காட்டியது சி.பி.ஐ-யின் சிறப்புப் புலனாய்வு குழுதான். இந்தக் குற்றச்சாட்டை நான் வேண்டும் என்றோ, மேம்போக்காகவோ கூறவில்லை. இன்னும் சொல் லப் போனால் இது என் சொந்தக் கருத்தும் அல்ல. நான் சொல்வது அனைத்தும் சி.பி.ஐ-யினர் சொன்னவை. நீதிமன்றத்தில் பதிவான ஆதாரங்கள், பத்திரி கைச் செய்திகள், இன்னும் முக் கிய ஆவணங்களில் இருந்து மட்டுமே எடுத்துச் சொல்கிறேன்.

1991 மே மாதம் 21ஆம் திகதி முன்னிரவு ராஜீவ்காந்தி படு கொலை சம்பவம் நடக்கிறது. சி.பி.சி.ஐ.டி. பொலிஸாரிடம் இரு ந்த இந்த வழக்கை, மத்தியப் புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ. எடுத்துக்கொண்டு சிறப்புப் புலனா ய்வுக் குழுவை நியமித்தது. அதி லிருந்தே குற்றவாளிகளைத் தேடத் தொடங்குகிறார்கள்.

மே மாதம் 23ஆம் திகதி தஞ்சாவூர் பேருந்து நிலையத் தில் வைத்து சங்கர் என்பவரை கைது செய்தார்கள். இவர் விடு தலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும், சென்னை புரசைவாக்கத்தில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்தவர் என் றும் தெரியவந்தது. அவரிடம் இருந்த டைரியில் ஒரு துண்டுச் சீட்டு இருந்தது. அதில் நளினி - தாஸ் என்ற பெயரில் எனது அலு வலக தொலைபேசி எண்ணும் அலுவலக முகவரியும் எழுதப் பட்டிருந்தது. எபினேசர் ஸ்டோர், ராபர்ட் பயஸ் என்ற பெயரில் உள்ள தொலைபேசி எண்ணும் இருநதது. இந்த இரண்டு தொலை பேசி எண்களைவைத்து உடனே விசாரணையில் இறங்கிவிட்ட னர். அந்த நிமிடமே நளினி யாகிய நானும் ராபர்ட் பயஸும் சி.பி.ஐ. கண்காணிப்பு வளையத் துக்குள் வந்துவிட்டோம். அடுத்த நாள் 24ஆம் திகதி வந்த பத்தி ரிகைகளில், 'சங்கர் என்ற விடுத லைப் புலி சென்னை புரசைவாக்க விடுதி ஒன்றில் தங்கியிருந்தார். அவரை சிவராசன் என்பவர்தான் தங்கவைத்து பழமும் கொடுத்தார் என்று வெளியானது. ஆக, சிவரா சன் பெயர் 23-5-91 அன்றே சி.பி.ஐ. பொலிஸாருக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது.

சங்கர் பிடிபட்டு, அவரிடம் இரு ந்த தொலைபேசி எண்களை எடுத்துக்கொண்டபோதே நான் அவர்களின் கண்காணிப்பு வளை யத்துக்குள் வந்து விட்டேன் என்றால், அப்போதே என் கண வரும் அவர்களின் வளையத்துக் குள் வந்துவிட்டார் என்று தான் கூறவேண்டும். 24, 25 ஆகிய இரண்டு நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டு இருந்தது. அத னால், நான் அலுவலகம் செல்ல வில்லை. ஆனால், 23ஆம் திகதி அன்றே நான் அலுவலகத் தில் இருந்து புறப்பட்டு வந்த பிறகு பொலிஸார் அங்கு சென்று என்னைப் பற்றி விசாரணை செய்திருக்கிறார்கள். அடுத்து, 27ஆம் திகதி மற்றும் 29ஆம் திகதிகளில் என்னை அலுவல கத்துக்குத் தேடிவந்து விசாரித்து விட்டுப் போனார்கள். அப்போதே என் அலுவலகம், வீடு ஆகிய வற்றில் எல்லாம் கண்காணிப்பு பொலிஸை நிறுத்தியிருப்பார்கள். அந்தக் கட்டத்தில், ராயப்பேட்டை வீட்டில் இருந்த என் கணவர், என்னைத் தேடி அடையாறில் உள்ள என் அலுவலகம் வந்து கொண்டிருந்தார். ஆக, அவரும் அவர்களின் கண்காணிப்பு வளையத்துக்குள்தான் இருந்தி ருக்க வேண்டும்.



மற்றொரு பக்கம், 23ஆம் திகதியே ஹரிபாபுவின் கமரா வும், அதில் இருந்த புகைப்படங் களும் பொலிஸாருக்குக் கிடைத்து விட்டன. அதில் சிவராசன், தனு, சுபா மற்றும் என்னுடைய புகைப் படங்களும் இருந்தன. அந்தப் புகைப்படத்தில் இருந்தவர்கள் பற்றி துருவித் துருவி விசாரித் துக்கொண்டிருந்தார்கள்.

(வலிகள் தொடரும்...)

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் குறித்து ஐ.நா.கவலை

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவின் சில பிரிவுகள் குறித்து ஐ.நா. கவலை வெளியிட்டுள்ளது.**



இலங்கையுள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலி, இதுகுறித்துக் கருத்து வெளியிடுகையில், சட்டவாளர் இல்லாத நிலையில், ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு அனுமதிக்கும் பிரிவு உள்ளிட்ட பல பிரிவுகள் குறித்து ஐ.நா. கரிசனை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

"நாம் பல விடயங்கள் குறித்து கரிசனைகளை எழுப்பியுள்ளோம். சட்டவாளர்கள் இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவது அனைத்துலக சட்ட நியமங்களின் படி 48 மணி நேரமாக உள்ள ஆரம்ப தடுப்புக்காவலை 72 மணித்தியாலங்களாக அனுமதிப்பது உள்ளிட்ட விடயங்களில் புதிய வரைவு கவலை தருகிறது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பிரதான கட்சிகளுடன் இணைந்து போட்டி;ஹக்கீம்



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பிரதான கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு பெருமளவு ஆதரவு காணப்படுவதனால் அங்கு தனித்து போட்டியிடவுள்ளதாகவும் ஏனைய பகுதிகளில் பிரதான கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதான கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லையெனத் தெரிவித்த அவர், தமக்கு சாதகமான வேட்பாளர் பதவியை பெற்றுத் தரும் பிரதான கட்சியுடன் இணையவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடும் பட்சத்தில் பாரிய வெற்றி பெறமுடியும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ்பொலிஸ் இணைப்பதிகாரிகள்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களுக்கும் இலங்கை பொலிஸாருக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் அரசாங்கத்தின் நகர்வுகளின் ஒரு பகுதியாக, ஓய்வுபெற்ற மூன்று தமிழ்பேசும் மூத்த பொலிஸ் அதிகாரிகள் இணைப்பதிகாரிகளாக நியமிக்கப்படவுள்ளனர்.

இலங்கைபொலிஸ்ஆணைக்குழுவின் செயலர் ஆரியதாச குரே இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர்களான, கே.அரசரட்ணம், கணேசநாதன், செல்வராஜா ஆகியோர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் பொலிஸ் பயிற்சி மையத்துக்கும் இணைப்பதிகாரிகளாக நியமிக்கப்படவுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைச் செய்யும் போது, தாம் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் நம்மால் விளங்கிக் கொள்ள முடியாத பொலிஸ் அறிக்கைகளில் கையெழுத்திடுமாறு கோரப்படுவதாகவும் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடக்கில் பணியில் உள்ள 15 ஆயிரம் பொலிஸாரில் பெரும்பாலானவர்கள் தமிழ் பேச முடியாதவர்கள் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, கிழக்கு மாகாணத்துக்கான இணைப்பதிகாரியாக அரசரட்ணமும் வட மாகாணத்துக்கான இணைப்பதிகாரியாக கணேசநாதனும் நீர்கொழும்பு பொலிஸ் பயிற்சி மையத்துக்கான இணைப்பதிகாரியாக செல்வராஜாவும் நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இவர்கள் இரண்டு ஆண்டுகள் பணிக்கு அமர்த்தப்படுவர். அதன் பின்னர் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இவர்களின் பணி நீடிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

# தாக்குதல் நடத்திய கடற்படை தளபதிக்கு உயர்மட்ட பதவி?

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தனவுக்கு உயர்மட்டப் பதவி ஒன்று வழங்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன், இலங்கை கடற்படைத் தளபதி ரவீந்திர விஜேகுணவர்த்தன சேவையில் இருந்து ஓய்வுபெறவுள்ளார்.

இதன் பின்னர், அவர் உயர் பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், தற்போதைய கடற்படைத் தளபதிக்கு உயர்மட்டப் பதவி வழங்குவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று, இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

அண்மையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஊடகவியலாளர் ஒருவரை தாக்கியதாக இலங்கை கடற்படைத் தளபதி மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

எனினும், இலங்கை அரசாங்கம் அவரைப் பாதுகாக்கும் நோக்கில் செயற்படுவதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களை விடுவிக்க எடுத்த நடவடிக்கைக்காக, இலங்கை கடற்படைத் தளபதிக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராட்டுத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)



## இன்று ஒரு தகவல்

### இனிமை Vs கடமை

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களைக் கூடத் தொழிலுக்கோ வேலைக்கோ தான் முதலிடம் தருகிறார்கள்.

உதாரணமாக தன் அப்பாவும் அம்மாவும் தன்னைப் பார்க்க அமெரிக்காவிற்கு வந்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். உடன் அவர்கள் அன்று விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டில் உட்கார்ந்து விடுவதில்லை.

ஆர்வங்களையெல்லாம் தேக்கி வைத்துக் கொண்டு "ம்மா கம்பனிக்குப் போயிட்டு வந்துடறேன். எல்லாத்தையும் சாயந்தரம் பேசிக்குவோம்'' என்று கிளம்பிவிடுகிறார்கள். எத்தனையோ நாள் தங்கப் போகிறார்கள். ஆற அமரப் பேசிக் கொள்வோமே! என்று எண்ணுகிறார்கள்.

ஊரிலிருந்து மாமன், மச்சான் எல்லாரும் வந்திருக்கிறார்கள். எல்லாரும் மாமல்லபுரம் கூப்பிடுகிறார்கள். நமக்கோ ரொம்பத்தான் ஆசை- இந்த மாதிரி அரட்டை செட் இனி அமையுமா? என்று. ஆனால் தொழில் புரியும் இடத்திலோ இன்று ஒரு முக்கியமான முடிவை எடுக்க வேண்டியிருக்கிறது. அல்லது எங்கும் நகர முடியாதபடி வேலைகள் ஒரே மனப் போராட்டம்! ச்சே ஆபீஸ் வேலையும் தொழிலும் எப்போதும் தான் இருக்கிறது. என்ன ஆனாலும் சரி, மாமல்லபுரம் தான் என முடிவு செய்வதா? கூடாது. அது சரியல்ல.

சிலர் இந்த மனப் போராட்டத்தில் ஓரளவு தெளிவடைந்து அலுவலகம் போனாலும் அங்கே எல்லாரையும் கடுப்பு அடிப்பார்கள், எரிந்து விழுவார்கள், தொழிலை நொந்து கொள்வார்கள். இந்த மனப்போக்கு மாற வேண்டும்.

கொஞ்ச நேரம் கூடுதலாகத் தூங்குவது இனிமைதான். ஆனால் அது கடமையைப் பாதிப்பதாக இருந்தால் அப்படி அல்ல. இத்தகைய தருணத்தில் தூக்கம் நம் ஜென்ம விரோதி.

விழா நாட்களில் வேலைக்குப் போக வேண்டியிருக்கிறதே, தொழிலைப் பார்க்க வேண்டியிருக்கிறதே என நொந்து கொள்கிறவர்கள் உண்டு. இது சற்று சங்கடமானது தான். ஆனால் ஊரெல்லாம் விலகியிருக்க நாம் மட்டும் தொழில் செய்வது இருக்கிறதே அது இத்தகைய நாட்களிலும் நாம் உழைக்கிறோம் எனும் பெருமித உணர்வையே நியாயப்படி தர வேண்டும். பார்வைகளை இப்படி மாற்றிக் கொள்ளாவிட்டால் தொழில் கசக்கத்தான் செய்யும். உலக இனிமைகளைப் பெற நமக்கு உரிமை உண்டு. மறுக்கவில்லை. ஆனால் அவற்றைக் கடமைக்கு வேட்டு வைத்துவிட்டுப் பெற வேண்டும் என்று எவ்விதக் கட்டாயமும் இல்லை.

நியாயப்படி உங்களோட நான் வந்து சுற்றிக் காட்டணும். ஆனா எனக்கு லீவு இல்லை. எங்கேயும் போக முடியல- வர முடியல்லை. என்ன வேலை போங்க! என்று பிறரிடம் புலம்பலாம். இப்படிப் பேசுவதைப் பிறரைத் திருப்திப்படுத்த வேண்டுமானால் ஜயோ பாவம் என்று பரிதாபத்தைச் சம்பாதிக்க வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாமே தவிர, மனத்தில் சிறு மூலையில் கூட அப்படி ஒரு நினைப்புக்கு இடம் தந்துவிடக் கூடாது.

இப்படிப்பட்ட நினைப்புகள் வளருமானால் அது பிழைப்பையே கெடுத்துவிடும்.

இனிமை என்பது கடமைக்கு எதிரானதல்ல. மாறாக, கடமையே இனிமை என நினைத்தால் அந்த நினைப்பு நாம் எதிர்பார்ப்பதற்கும் மேலான இனிமைகளை நம் வாழ்க்கையில் கொண்டு வந்து சேர்க்கும்.

**லேனா தமிழ்வாணன்**

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களை முன்னேற்ற அரசியல் ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும்

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நலன்கள் தொடர்பில் அரசியல் ரீதியில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என பெண் குடும்பத் தலைமை தாங்கும் ஒன்றியங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இவ்விடயம் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் எவரும் அக்கறை செலுத்துவதில்லை எனவும் உதவிகளை செய்வதாகக் கூறி பேச்சளவில் மட்டும் நின்றுவிடாது அதற்கு செயல் வடிவம் கொடுக்க முன்வர வேண்டும் எனவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

பெண் தலைமைத்துவத்தினருக்கான தேசிய மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். ரில்கோ விடுதியில் நடைபெற்றது. அங்கு கலந்துகொண்டு அவர்கள் ஒவ்வொருவரும் தமது கருத்துக்களை பதிவு செய்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் நாட்டிலே இடம்பெற்ற 30 வருட கால யுத்தம் எமது உறவுகளை எம்மிடம் இருந்து பறித்து விட்டது. ஆனாலும் நாம் தளராமல் எங்கள் குடும்பங்களை நிர்வகிக்க வேண்டிய நிலையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களாக அடையாளப்படுத்தப்பட்டு எங்களது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வழியின்றியும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழியின்றியும் காலத்துடன் போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எங்களது பாதுகாப்பு இன்று வரை உறுதிப்படுத்தப்படவில்லை. அதிலும் நாம் வடக்கு மற்றும் கிழக்கில் இன்று வரை போதிய வசிப்பிட வசதிகள் இன்றி அல்லல்படுகின்றோம். உரிய சமூக அடிக்கட்டுமான வசதிகள் இன்றி போர் முடிந்த பிற்பாடும் நாம் அல்லலுறுகின்றோம்,

பாதுகாப்பு வலயங்களில் எமது காணிகள் அகப்பட்டுள்ளதனால் வாழ்விட வசதிகள் இன்றி ,பொருளாதார முயற்சிகளினை மேற்கொள்ளவும் வழி இன்றி நாம் தவிக்கிறோம். இராணுவ பிரசன்னம் அதிகரித்துள்ள நிலையில் வெளியில் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலையில் உள்ளோம். புலனாய்வுத்துறையினரின் தொடர்ச்சியான கண்காணிப்பில வாழ்ந்து வருகிறோம். இதனால் பல துன்பங்களை அனுபவித்து வருகிறோம்.

எமது பிரச்சினைகளை கூறுவதற்கு நாம் பொலிஸாரை நாடும் போதும் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சொல்லிலடங்காதவை. வீட்டுத்திட்டங்கள் எமக்கு போதுமானவையாகவும் பொருத்தமானவையாகவும் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும்.

நாம் உழைப்பதுக்கு அஞ்சுபவர்கள் அல்ல . ஆனாலும் எமக்குரிய வாழ்வாதார முயற்சிகள் பொருத்தமான வகையில் ஏற்படுத்தி தரப்பட வேண்டும். அதற்கான பயிற்சிகள் , முதலீடுகள், ஏனையோரைப் போன்று எமக்கும் வழங்கப்பட வேண்டும்.

நாம் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக இருப்பதனால் வாழ்வாதார உதவித்திட்டங்களில் வயது, பாரபட்ச நிலைமைகள் முதன்மையான காரணிகளாக நோக்கப்படுகின்றன. இவற்றுக்கான மாற்று வழிமுறைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

பெண்தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான விசேட ஒய்வூதியத்திட்டம் அல்லது அதற்கு பதிலாக விசேட திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு அதனைப் பெறும் தகுதி எமக்கு வழங்கப்பட வேண்டும்.

எங்கள் பிள்ளைகளுக்கான விசேட கல்வி சலுகைகள், பாதிக்கப்பட்டுள்ள எங்கள் பிள்ளைகளுக்கான உளவியல் தேவைகள் குறித்து ஆற்றுப்படுத்தற்திட்டங்கள் அமுல்படுத்துமாறு கேட்கிறோம்.

எங்கள் பிரதேசங்களில் எமக்கான சுகாதார வசதிகளை நாம் பெறுவதற்கான முன்னுரிமை வழங்கப்படுவதுடன் எமது ஆரோக்கியம் பேணும் வகையில் அமைந்த சத்துணவுத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

எமது சமூக கலாசார உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளின் உண்மை நிலை பற்றி எமக்கு காலதாமதமின்றி அறியத்தரப்பட வேண்டும். உறவுகளை இழந்த பாதிக்கப்பட்டுள்ள எமக்கான நிதி மற்றும் பக்கச்சார்பின்றி குற்ற விசாரணைகள் இடம்பெற்று நீதி வழங்கப்பட வேண்டும். இழப்பீடுகளை பெறுவதற்கான ஏற்பாடுகள துரிதமாக்கப்பட வேண்டும்.

கற்றுக்கொண்ட பாடங்கள நல்லிணக்க ஆணைக் குழுவினால் முன்மொழியப்பட்ட பொருத்தமான சிபாரிசுகள், துரித கதியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மொத்தத்தில் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு உரிமைகளை நாம் அனுபவிக்கும் விதத்தில் எங்கள் வேண்டுகோளை செவமடுத்து எங்கள் வாழ்வில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்த அனைத்து தரப்பினரும் உதவி செய்ய வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளனர். (இ-9)

# கருணாநிதியின் உடல் நலம் குறித்து விசாரிக்க வந்த வைகோவின் வாகனம் மூலம் தி.மு.கவினர் தாக்குதல்

உடல்நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள திமுக தலைவர் கருணாநிதியை நலம் விசாரிக்க வந்த மதிமுக பொதுச் செயலாளர் வைகோவுக்கு திமுகவினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் காவேரி வைத்தியசாலை பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



திமுக தலைவர் கருணாநிதி உடல்நலக் குறைவு காரணமாக வியாழக்கிழமையன்று மீண்டும் காவேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மூச்சுத்திணறல் நுரையீரல் தொற்று காரணமாக அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சிகிச்சைக்கு பின்னர் அவர் உடல்நிலை சீராக உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கருணாநிதி உடல்நலம் குறித்து நேற்று முன்தினம் காங்கிரஸ் துணை தலைவர் ராகுலகாந்தி, அதிமுக எம்.பி. தம்பித்துரை, அமைச்சர் ஜெயக்குமார் ஆகியோர் நேரில் சென்று கருணாநிதியின் உடல் நலம் குறித்து கேட்டறிந்தனர்.

இந்தநிலையில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, கருணாநிதியை சந்திக்க ஆழ்வார்பேட்டை காவேரி வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் மாலை வந்தார். அப்போது வைத்தியசாலை முன்பு திரண்டிருந்த திமுக தொண்டர்கள் வைகோவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மேலும் வைகோவின் வாகனத்தின் மீது கல்வீசி தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து கருணாநிதியை சந்திக்காமலே வைகோ திரும்பிச் சென்றுவிட்டார்.

இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. (இ)

# சிரியாவில் அமைதி நிலவ வேண்டும்; சிறுவன் எழுதிய உருக்கமான கடிதம்



சிரியா நாட்டில் நடக்கும் போர்கள் நிறுத்தப்பட்டு சமாதானம் நிலவ வேண்டும் என 7 வயது சிறுவன் எழுதியுள்ள கடிதம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் கிழக்கு மிட்லேண்ஸ் பகுதியில் வசித்து வரும் இந்திய வம்சாவளியை சேர்ந்தவனான அரூஷ் அங்குள்ள மூன்றாம் வகுப்பு படித்து வருகிறான்.

இன்னும் சில நாட்களில் கிறிஸ்மஸ் பண்டிகை வருவதால் கிறிஸ்மஸ் தாத்தாவிடம் என்ன பரிசுவேண்டும் என ஒரு கடிதமாக எழுதுமாறு அரூஷ் வகுப்பாசிரியர் மாணவர்களிடம் தெரிவித்தார்.

அரூஷ் தனது கடிதத்தில் சிரியா நாட்டில் போர்கள் நிறுத்தப்பட்டு கிறிஸ்மஸ் அன்று அமைதி நிலவ வேண்டும், இதுதான் எனக்கான கிறிஸ்மஸ பரிசு என எழுதி தன் ஆசிரியரிடம் கொடுத்துள்ளான்.

இது குறித்து அரூஷ் கூறுகையில், எனக்கு சண்டையே பிடிக்காது. சிரியா போரில் பலர் கொல்லப்படுகின்றனர். இது நிறுத்தப்பட்டு சமாதானம் நிலவ வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் எனக் கூறியுள்ளான். (இ-3)

# அரச ஊழியர்கள் அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு முன்னணி இடம்

(கொழும்பு)

நாட்டின் சனத்தொகையுடன் ஒப்பிடும் போது அரச ஊழியர்கள் அதிகம் உள்ள உலக நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னணியில் உள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் அரசாங்கம் நாட்டைக் கட்டியெழுப்புவதில் அதிக சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது ஜனாதிபதியின் செயலாளர் பீ. பீ. அபேகோன் தெரிவித்தார். (இ-3)

# குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

புஸ்ஸல்லாவ பகுதியில் நபரொருவர் தொழிலுக்காக சென்றுவீடு திரும்பும் வேளையில் குளவி தாக்குதலுக்கு உள்ளாகி மரணம் அடைந்துள்ளார். குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் தொத்சைல்ட் தோட்டம் வை.ஆர்.சி பிரிவை சேர்ந்த 50 வயதான சன்முகம் ரவிச்சந்திரன் என்பவரே உயிரிழந்துள்ளார். (இ-3)

# வாகன சாரதிகளுக்கு எச்சரிக்கை

பண்டிகை காலத்தில் மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்வது தொடர்பில் விசேட திட்டம் ஒனறு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்கு விசேட பொலிஸ்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து பொலிஸ் தலைமையக பிரிவின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். மேலும், சாரதிகளின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு சிவில் ஆடைகளுடன் பல பொலிஸ் அதிகாரிகளை ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை, பண்டிகை காலத்தில் விடுதிகள் மற்றும் உணவகங்களை கண்காணிப்பதற்கும் விசேட குழுக்கள நியமிக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதார சேவைகள் ஆய்வாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக்காலத்தில் விடுதிகள் மற்றும் உணவகங்களை கண்காணிப்பதற்கு 2,100 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொது சுகாதார சேவைகள் ஆய்வாளர் சங்கத் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

மேலும், மனிதப் பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்யும் உணவகங்கள குறித்து 011-263-5676 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அழைப்பினை ஏற்படுத்தி முறைப்பாடுகளை பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அவர தெரிவித்தார். பொது மக்களின் நலன் கருதி அவசர அழைப்பு 24 மணித்தியாலங்கள் சேவையில் இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)


# 180 வது நினைவுநாள்

## தேவராசா நிறோஜ்



தோற்றம்
20 • 08 • 1999

மறைவு
23 • 06 • 2016



காலனின் கணக்குத்தான் தவறியதோ -உன்
வாழ்வும் இப்படி முடிந்ததுவோ? இல்லை
காலனாய் வந்தார்களே சாரதி இருவர்

கவலைகளை நெஞ்சமது சுமந்திருக்க
கண்களது கண்ணீரைச் சுமந்திருக்க
நிறோஜ் உனை தீ தீண்ட
எப்படித்தான் தாங்கிடுவோம்

மீள வண்ணத் தேசம் நீ
மீண்டு விட்ட போதுமென்ன
மறக்கவென்னா நின்பாசம்
மனம் விட்டகலாதிருக்கும்

நினைவலைகள் என்றுமிங்கே
நிக்காது தானடிக்கும்
அலையும் கரையும் கலந்தது போல்-உன்
நினைவில் நாம் என்றும் நாம் கலந்திருப்போம்


19.12.2016 இன்றையதினம் அன்னாரின் ஞாபகார்த்தமாக யாழ். காங்கேசன்துறை வீதியில் தாவடிச் சந்திப்பகுதியில் (முனியப்பர் கோவில் முன்பாக) பஸ்தரிப்பு நிழற் குடை திரு.உபாலி கிரிவத்துடுவ (பிராந்திய முகாமையாளர் இ.போ.ச) அவர்களினால் பிற்பகல் 12.30 மணியளவில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து விழாவை சிறபிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**என்றும் உன் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**
**காளிகோவிலடி, தாவடி வடக்கு.**

(6984)

## facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 932

உஷாந்தன் நெய்மார்




தர்சி




ரஞ்சித்




ராஜி




கின்சன்




பிரியா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# சிறுவர் அரங்கம்

## தங்க எலி

..அவனை வியப்புடன் பார்த்த சேட் அதற்கு சம்மதிக்க, அந்த எலியை எடுத்துச் சென்றான் அந்த வியாபாரியின் மகன்.

சேட், தனது கணக்குப் பிள்ளையைப் பார்த்து, "இந்தப் பையன் மிகுந்த அறிவாளியாகத் தெரிகிறான். பார், நிச்சயம் ஒரு நாள் இவன் லட்சாதிபதி யாவான்" என்று கூறினார்.

அந்தச் சிறுவன் இறந்து போன எலியை எடுத்துச் சென்று கொண்டிருந்தபோது, வழியில் எதிர்ப்பட்ட ஒருவன், பசித்த தனது பூனைக்கு இறந்துபோன அந்த எலியைப் பேரம்பேசி வாங்கிக் கொண்டு அந்தச் சிறுவனிடம் சிறிது பணம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

அதை வாங்கிய அவன், அந்தப் பணத்தில் சிறிது வேர்க்கடலையும், ஒரு மண் பானையும் வாங்கினான். அந்தப் பானையில் தண்ணீரை நிரப்பினான். நகரில், நான்கு சாலைகள் கூடும் இடத்திற்கு அருகில் இருந்த ஒரு மர நிழலில் உட்கார்ந்து கொண்டான். அவ்வழியே வருவோர் போவோருக்கெல்லாம் கடலையையும் தண்ணீரையும் கொடுத்தான்.

சிறுவனின் இந்தச் சேவையைக் கண்ட, அவ்வழியே சென்று கொண்டிருந்த மக்கள் சிலர் அவனுக்குப் பணம் தரத்தொடங்கினர். இதைப் பார்த்த சிலர் விறகுக் கட்டைகளைத் தந்தனர். இப்படியாக அந்தச் சிறுவனுக்கு நிறைய விறகுக் கட்டைகள் சேர்ந்தன.

ஒருநாள் விறகு வியாபாரி ஒருவரிடம் அந்த விறகுகளை எடுத்துச்சென்று விற்றான். விற்ற பணத்தில் மேலும் நிறைய வேர்க்கடலை வாங்கினான். முன் போலவே அவ்வழியே செல்வோருக்குக் கடலையும், தண்ணீரும் தந்தான். இதனால் நாளடைவில் அவனிடம் பணமும் விறகும் நிறைய சேரத் தொடங்கின. பணம் நிறைய சேரச் சேர அனைத்துக்கும் நிறைய விறகுகளை வாங்கி விற்றான். அப்படி விறகு விற்றதில் கிடைத்த லாபம் பலமடங்கானது.

மழைக்காலம் வந்தது. இதனால், விறகு வியாபாரம் மந்தமாகத் தொடங்கியது. மக்கள் தண்ணீர் குடிப்பதும் குறைந்து போனது. எனவே, கிடைத்த விறகுகளைக் கொண்டு அவன் சொந்தமாக ஒரு கடை வைத்தான். சிறிது நாள்களுக்குப் பிறகு வியாபாரம் தொடர்ந்து நடந்தது. சிறிது நாள்களிலேயே அவன் பெரிய வியாபாரி ஆகிவிட்டான்.

அவன் வாலிபப் பருவத்தை அடைந்தான். தானும் தன் தாயும் வசிப்பதற்காக ஓர் அழகான வீடு ஒன்றைக் கட்டினான். அதில் தன் தாயோடு சுகமாக வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் தன் கடையில் உட்கார்ந்திருந்தபோது, அவனுக்குத் திடீரென்று அந்த சேட்டின் ஞாபகம் வந்தது. "இந்தக் காசு, பணம், வீடு, சுகமான வாழ்வு எல்லாம் யாரால் கிடைத்தது? அந்த சேட் ஜியால் தானே!' என்று நினைத்துக் கொண்டவன், அவரைக் காண நினைத்தான்.



உடனே அந்த சேட்டுக்கு அன்பளிப்பாகத் தருவதற்காக தங்கத்தால் செய்யப்பட்ட ஓர் எலி பொம்மையை வாங்கிக்கொண்டு அவர் வீட்டுக்குச் சென்றான்.

"சேட்ஜி! என்னை நினைவிருக்கிறதா? நீங்கள் தந்த இறந்துபோன எலி என்னை லட்சாதிபதி ஆக்கிவிட்டது. அந்த எலியால் தான் எனது வாழ்க்கை திசை மாறிப்போனது, வறுமை காணாமல் போனது" என்றான்.

ஆனால் சேட், அன்று நடந்த சம்பவத்தை முற்றிலும் மறந்திருந்தார். அதை அவருக்கு நினைவுபடுத்தினான் அந்த வியாபாரியின் மகன். அவன் கூறியதைக் கேட்ட அந்த சேட், மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அவனது முயற்சியையும் உழைப்பையும் பாராட்டினார். தன் ஒரே மகளை அவனுக்கு மணம் செய்தும் கொடுத்தார்.

அறிவாற்றலும், முயற்சியும், உழைப்பும் ஒருவனுக்கு இருந்தால், ஒன்றுக்கும் உதவாத பொருளால்கூட ஒருவர் வாழ்க்கையில் முன்னேற முடியும் - உயர முடியும் என்பதையும் உழைப்பின் உயர்வையும் அவன் புரிந்து கொண்டான்.

பிள்ளைச் செல்வங்களே! உழைப்பு ஒன்றுதான் நம்மை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதை இக்கதை மூலம் புரிந்து கொண்டிருப்பீர்களே! "உழைப்பே உயர்வு தரும்" என்கின்ற தாரக மந்திரத்தையும் அடிக்கடி நினைவில் நிறுத்துங்கள்!

(முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

19 12.2016

- 324 - லிசீனியஸ் ரோமப் பேரரசன் பதவியைத் துறந்தான்.
- 1154- இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றி முடிசூடினான்.
- 1606 - ஐக்கிய அமெரிக்காவின் 13 குடியேற்ற நாடுகளில் முதலாவதான வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுன் நகரில் இங்கிலாந்தில் இருந்து மூன்று கப்பல்களில் ஆங்கிலேயர்கள் வந்திறங்கினர்.
- 1871 - யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக கத்தோலிக்க மதகுருப் பதவிகள் (ordination) வழங்கப்பட்டன.
- 1877 - யாழ்ப்பாணம், நெடுந்தீவில் வாந்திபேதி, மற்றும் சின்னம்மை நோய் பரவியதில் பலர் இறந்தனர்.
- 1907 - பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 239 பேர் கொல்லப்பட்டனர்.
- 1916 - முதலாம் உலகப் போர்: பிரான்சில் வேர்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ஜேர்மனியப் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்தன.
- 1941 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனிய இராணுவத் தலைவர் ஆனார்.
- 1961 - போர்த்துகீச குடியேற்ற நாடான டாமன் டையூ பகுதியை இந்தியா தன்னுடன் இணைத்துக்கொண்டது.
- 1963 - சான்சிபார் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்று சுல்தான் ஹமூட் பின் முகமது தலைமையில் முடியாட்சியைப் பெற்றது.
- 1967 - இரு நாட்களின் முன்னர் கடலில் நீந்தும் போது காணாமல் போன ஆஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் இறந்து விட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- 1972 - சந்திரனுக்கு கடைசித் தடவையாக மனிதரை ஏற்றிச் சென்ற அப்பல்லோ 17 பாதுகாப்பாக பூமி திரும்பியது.
- 1983 - உலகக்கோப்பை காற்பந்துப் போட்டியில் வழங்கப்படும் பரிசுக்கிண்ணம் பிரேசிலில் அந்நாட்டு காற்பந்தாட்ட அமைப்பின் தலைமையகத்தில் வைத்துத் திருடப்பட்டது.
- 1984 - ஹொங்கொங்கின் ஆட்சியை ஜூலை 1, 1997 இல் மக்கள் சீனக் குடியரசிடம் மீண்டும் ஒப்படைக்கும் ஒப்பந்தம் சீனத் தலைவர் டெங் க்ஸியாவோபிங், பிரித்தானியப் பிரதமர் மார்கரெட் தாட்சர் ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.
- 1997 - இந்தோனீசியாவில் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 104 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - டைட்டானிக் திரைப்படம் வெளியானது.
- 2000 - யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் 3 வயதுக் குழந்தை உட்பட 8 பொதுமக்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள்

- 1901 - ருடால்ப் ஹெல், ஜெர்மானிய கண்டுபிடிப்பாளர். (இ. 2002)
- 1906 - லியோனிட் பிரெஷ்னேவ், சோவியத் ஒன்றியத் தலைவர். (இ. 1982)
- 1922 - கே. அன்பழகன், தமிழக அரசியல்வாதி.
- 1934 - பிரதிபா பாட்டீல், இந்தியாவின் 12 வது குடியரசுத் தலைவர்.
- 1974 - ரிக்கி பொன்ரிங், அவுஸ்திரேலியத் துடுப்பாட்டக்காரர்.

### இறப்புகள்

- 1111 - அல் கசாலி, இசுலாமிய மெய்யியலாளர். (பி. 1058)
- 1848 - எமிலி புரொண்டி, ஆங்கிலேய எழுத்தாளர். (பி. 1818)
- 1927 - ராம் பிரசாத் பிசுமில், இந்திய விடுதலைப் போராட்ட வீரர். (பி. 1897)
- 2013 - டேவிட் ராஜேந்திரன், ஈழத்து வானொலி, மேடை நாடகக் கலைஞர். (பி. 1945)
- 2014 - எஸ். பாலசுப்பிரமணியன், திரைப்படத் தயாரிப்பாளர், விகடன் குழும உரிமையாளர். (பி. 1936)

### சிறப்பு நாள்

- கோவா - விடுதலை நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 70 | 50 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 140 | 120 | 200 | 100 |
| தக்காளி | 100 | 100 | 70 | 50 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 30 | 100 | 20 | 40 | 60 | 40 |
| [illegible] | 160 | 100 | 80-160 | 100 | 160 | 150 |
| பூசணி | 40 | 40 | 50 | 45 | 60 | 40 |
| புடோல் | 100 | 100 | 60 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 80 | 40 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 130 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 130 | 110 | 110 | 120 | 100 |
| பாகற்காய் | 150 | 400 | 350 | 250 | 400 | 90 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 60 | 60 | [illegible] | 50 |
| பயற்றங்காய் | 180 | 150 | 140 | 100 | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | 140 | 150 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 120 | 70 | 60 | 120 | 70 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 | 120 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 300 | - | 200-300 | 250 | 150 | 400 |
| இஞ்சி | 200 | 150 | 160 | 140 | 150 | 200 |
| [illegible] | 30 | 50 | 50 | 40 | 60 | 50 |
| கீரை-1 பிடி | 60 | 50 | 50 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 400 | 450 | 400 | 350 | 400 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 50 | 35 | 35- 45 | 50 |
| இராசவள்ளி | 350 | 500 | 300 | 300 | — | 250 |
| வெங்காயப்பூ | 250 | — | — | 240 | — | — |
| முள்ளங்கி | 50 | 100 | 60 | 60 | 80 | 60 |
| [illegible] | 35 | 80 | 35 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 30 | 10 | 25 | 25 | 25 |
| [illegible] | 80 | 120 | 80 | 40 | 100 | 60 |

# வர்த்தகத்தில் செல்லாத உத்திகளை மாற்றத் தயாரா?

தொழில் ரகசியம்

அண்மையில் இந்தியாவில் 1000 ரூபாய், 500 ரூபாய் தாள்கள் செல்லாது என அறிவிக்கப்பட்டது. உடனடியாக செல்லாத நோட்டை வங்கிகளில் கொடுத்து மாற்றுமாறு கூறினர். அதுசரி அங்கு மக்கள் நீண்ட வரிசைகளில் நின்று மாற்றினார்களே, அப்படியே உங்கள் வர்த்தகத்திலும் செல்லாத உத்திகள் ஒன்றிரண்டு இருக்குமே. அதை எப்பொழுது மாற்றலாம் என்றிருக்கிறீர்கள்?

அதற்கான சில யோசனைகளைத்தான் பார்க்கப்போகிறோம்.


சில்லறை தட்டுப்பாட்டினால் வியாபாரம் குறைந்துவிட்டது என்று புலம்பும் கடைகள் இன்னமும் கிரெடிட் கார்டை ஒப்புக் கொள்வதில்லை. சின்ன கடை, சிறிய வர்த்தகம் என்று சாட்டுப்போக்குச் சொல்கிறார்கள்.

கிரெடிட் கார்டும், டிஜிட்டல் செலுத்துகை முறைகளும்தான் இனி என்பதை அனைவரும் உணர வேண்டும். பழ வியாபாரி முதல் பழைய பேப்பர் கடைக்காரர் வரை ஏதாவது சாட்டுப்போக்குக் கூறி கிரெடிட் கார்டை ஒப்புக்கொள்ளாமல் இருந்தால் நீண்ட நாள் வண்டி ஓடாது என்பதை உணர்ந்தால் நன்று.

உங்கள் தொழிலுக்கு இணையத்தளம் இல்லை என்றால் அதைச் செய்யுங்கள். வெளியில் சொல்ல முடியாத விடயங்களுக்கே ஆயிரம் இணையத்தளம் இருக்கும் இக்காலத்தில் தொழில்கள் இணையதளம் இல்லாமல் இருப்பது பஞ்ச மாபாதகம். இணையதளம் உருவாக்குவதோடு அதில் ஈ-காமர்ஸ் வசதி செய்து மக்களை உங்கள் வெப்சைட்டிலிருந்தே வாங்கச் செய்யும் வழியை தேடுங்கள். சந்தைக்குப் போகாமல் வீட்டில் மல்லாக்க படுத்து ஷொப்பிங் செய்ய மக்கள் பழகி வருகிறார்கள். போதாததற்கு பொருளாதாரமே டிஜிட்டல் மயமாகி வருகிறது. இனியும் ஈ-காமர்ஸ் வசதி செய்யாத தொழில்கள் ஈ, காகா இல்லாத வர்த்தகம்தான் செய்யவேண்டியிருக்கும்!

புடவைக்கடை போன்றவற்றில் பணம் கொடுத்து வாங்குபவர்கள் குறைந்து கிரெடிட் கார்டுகள் மூலம் வாங்குபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறதாம். ஆனால் இன்னமும் பலர் கிரெடிட் கார்டை சும்மா பந்தாவிற்கு வாங்கி ஸ்டைலாக பர்ஸில் வைத்து உபயோகிக்காமல் பணம் தந்தே பொருள் வாங்கி வருகிறார்கள். அவர்களை கடைக்குள் கவர்ந்திழுத்து பொருள் வாங்க வைக்க கிரெடிட் கார்டில் வாங்குபவர்களுக்கு சிறப்புத் தள்ளுபடி அளியுங்கள். கிரெடிட் கார்டில் வாங்கினால் வாங்கும் அளவிற்கேற்ப ஆச்சரியமான பரிசுகள் என்று அறிவித்து பாருங்கள். ஆசை யாரை விட்டது. கணவர் மனம் கரையவில்லை என்றாலும் அவர் மனைவியும் குழந்தைகளும் அவரை குண்டுக்கட்டாய் கடைக்கு இழுத்து வந்து வாங்க வைக்கும் சாத்தியக்கூறு இருக்கிறதே!

நல்லெண்ணெய் போன்ற பொருள்களின் விற்பனை குறைந்திருக்கிறது. அதிக விலை என்பதால் நல்லெண்ணெயை விட விலை குறைந்த ரீஃபைண்ட் எண்ணெய், பாம் எண்ணெய் போன்றவற்றுக்கு மக்கள் மாறுவதை பார்க்கமுடிகிறது. இது போன்ற பிராண்டுகள் விற்பனையை மேம்படுத்த விளம்பரத்தை மட்டுமே நாடுவதை விட சிறந்த வழி உண்டு. விலை அதிகமான நல்லெண்ணெய் கம்பனிகள் தங்கள் பிராண்டின் சின்ன சைஸ் பக்கற்றுகளை அறிமுகம் செய்யலாம். பணத் தட்டுப்பாட்டால் செலவை குறைக்கவே பலர் இந்த பிராண்டுகளை விட்டு விலை குறைந்த பிராண்டுகளை நாடுகின்றனர். அவர்களை மீண்டும் கவர்ந்திழுக்கவும் விலை குறைந்த பிராண்டுகளுக்கு மாறாமல் தடுக்கவும் கம்பனிகள் தங்கள் பிராண்டுகளை சின்ன சைஸ் பக்கற்றை சிறிய விலையில் விற்கலாம். 500 ரூபாய் கொடுத்து ஒரு லிட்டர் வாங்க யோசிப்பவர்கள் கால் லிட்டர் .அல்லது அதற்கும் குறைவான சைஸ் பக்கற்றுகளை வாங்கலாமே. இதை 'லோ பிக் அப் ப்ரைஸ்' உத்தி என்பார்கள்.




மக்கள் கடைகளுக்கு வருவது குறைந்தால் கவலை வேண்டாம். அவர்கள் கடைகளுக்கு வராவிட்டால் என்ன, நீங்கள் அவர்கள் வீடு தேடி சென்று உங்கள் பொருள்களை விற்க முடியுமா என்று பாருங்களேன். இதுபோன்ற நேரடி விற்பனை முறை கடந்த ஐந்து வருடத்தில் 20% அதிகரித்திருக்கிறது என்று ஒரு அறிக்கை கூறுகிறது. முயற்சி செய்து பாருங்களேன்.

உங்கள் பிராண்டை அப்படி விளம்பரப்படுத்த முடியுமா என்று கிரியேடிவாய் சிந்தியுங்களேன்.

இங்கு நாம் கூறிய யோசனைகள் உங்கள் பிராண்டுக்கு பயனில்லாமல் இருக்கலாம். விடயம் அதுவல்ல. அதை மூளை என்ற வங்கியில் தந்து புதிய யோசனைகளாக மாற்றி வியாபாரத்தை பெருக்கும் வழிகளை தேடுங்கள். விற்பனையை கூட்ட புதிய வழிகளை நாடுங்கள். கண்டிப்பாய் வெற்றி பெறுவீர்கள். லாபம் அடைவீர்கள். அந்த லாபத்திற்குண்டான வரியை செலுத்தி வங்கி பிதுங்கும் அளவிற்கு செதுக்குங்கள். யார் உங்களை கேட்கப் போகிறார்கள்!

# கொமர்சல் வங்கியின் ஆண்டறிக்கைக்கு 6 விருதுகள்







கொமர்ஷல் வங்கியின் ஆண்டு அறிக்கை ஆறு விருதுகளை வென்றுள்ளது. வங்கித் துறையில் சிறந்த ஆண்டறிக்கைக்கான விருதான எட்மன்ட் ஜே குரே ஞாபகார்த்த விருது உட்பட ஆறு விருதுகளை கொமர்ஷல் வங்கிவென்றுள்ளது.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைகளுக்கான விருது வழங்கும் விழாவிலேயே இந்த விருதுகள் வெல்லப்பட்டுள்ளன.

இந்த 52வது வருடாந்த விழாவில் கொமர்ஷல் வங்கியின் நிதித்துறை அறிக்கையிடலுக்கான அர்ப்பணம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் கணக்கியல் துறையில் கீர்த்தி மிக்க தொழிற்சார் நிறுவனமான பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இந்த வருடாந்த நிகழ்வில் வங்கித் துறைக்கான அறிக்கையிடலில் 13-து தடவையாக தங்கவிருதை கொமர்ஷல் வங்கி வென்றுள்ளது.

2015-ம் ஆண்டின் கொமர்ஷல் வங்கியின் வருடாந்த அறிக்கை ஒட்டு மொத்த பிரிவில் மூன்றாம் இடத்தை வென்றுள்ளது. கூட்டாண்மை ஆளுகை வெளிப்பாடுகள், கூட்டாண்மை சமூகப் பொறுப்பு அறிக்கையிடல் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் ஆகிய பிரிவுகளில் வெள்ளிப் பதக்கங்கள் வெல்லப்பட்டுள்ளன. சிறந்த மூலதன முகாமைத்துவ வெளிப்பாடுகள், ஒருங்கிணைந்த அறிக்கையிடல் ஆகிய பிரிவுகளில் வெண்கலப் பதக்கங்கள் வெல்லப்பட்டுள்ளன. இந்த ஆறு விருதுகளோடு இவ் விருது விழாவில் ஆகக் கூடுதலான விருதுகளை வென்ற கூட்டாண்மை நிறுவனமாக கொமர்ஷல் வங்கி தலை நிமிர்ந்து நின்றது.

2001 முதல் வங்கிகளின் வருடாந்த அறிக்கையிடல் ஒட்டுமொத்த பிரிவுக்கான விருதை கொமர்ஷல் வங்கி 9 தடவைகள் வென்றுள்ளது.

தரத்தையும் எமது வெளிப்பாடுகளையும் அதிகரிக்கும் வழிவகைகளில் நாம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றோம்.

நல்ல ஆளுகையின் சிறந்த அம்சமாக வெளிப்படைத் தன்மையே இருக்க முடியும் என்று நாம் நம்புகின்றோம் என்று கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதமநிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் எமது அறிக்கையிடல் குழு பெரும் பிரயத்தனம் எடுத்து செயற்படுகின்றது.

சிக்கலான சூழ்நிலைகளுக்கு மத்தியில் அவர்கள் தகவல்களைத் திரட்டுகின்றனர்.

வர்த்தகத்தின் உள்ளார்ந்த நிலையை பங்குதாரர்கள் விரிவாக அறிந்துகொள்ளவும் அது எவ்வாறு இடம்பெறுகின்றது என்ற விவரத்தை அவர்கள் அறிந்துகொள்ளவும் வழிவகுப்பதே இதன் நோக்கம்.

வங்கித்துறை பிரிவில் எமக்கு 13வது வருடமாகக் கிடைத்துள்ள விருதானது நிதி அறிக்கையிடலில் எமது தொடர்ச்சியான அர்ப்பணத்துக்கு கிடைத்துள்ள மிகச் சிறந்த அங்கீகாரமாகும் என்றார்.

# இலங்கைக்கு பாரிய நெருக்கடி

டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துவரும் நிலையில் அது தொடர்பில் இலங்கை அவதானமாக செயற்பட வேண்டும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக இலங்கை ரூபாவின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

ஒபெக் நாடுகள் மசகு எண்ணெய் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் மசகு எண்ணெய்யின் விலை 45 டொலரில் இருந்து 57 டொலராக அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் இலங்கை பாரிய நிதி நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டிய ஏற்படும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,324.10 | 6,268.61 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,555.02 | 3,521.67 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,412.510 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** சிற்றி ஹவுசிங்(8.30), ஓட்டோரோம்(76.20), சுவர்ணமகால் பினான்ஸ்(1.50), கொழும்பு ரஸ்ட்(10.50), சனச வங்கி(105.0)

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** எஸ்எம்பி லீசிங் (X) (0.30), ரன்கிறின்(51.60), நேசன் லங்கா(1.30), செரன்டிப் இன்ஜி(6.80), சம்சன் இன்ர(90.40).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 147.49 | 151.23 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 182.19 | 188.19 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 152.75 | 158.64 |
| சுவிஸ் பிராங் | 142.33 | 148.05 |
| கனேடிய டொலர் | 109.96 | 114.35 |
| அவுஸ்திரேலிய டொலர் | 107.48 | 112.37 |
| சிங்கப்பூர் டொலர் | 101.77 | 105.55 |
| ஜப்பான் யென் | 1.24 | 1.28 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.19 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 40.59 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# இலங்கை கடற்படைத் தளபதியை கைவிடுவதா? இரு தரப்பு நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கம்

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு வெளிநாட்டுக் கப்பல்களை விடுவிக்கும் நடவடிக்கை கடந்த 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட போது ஊடகவியலாளர் ஒருவரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டுக்கு கடற்படைத் தளபதி முகம் கொடுத்திருக்கிறார்.

இந்தச் சம்பவம் அரசாங்கத்துக்கும் கடற்படைத் தளபதிக்கும் நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்திலே போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் இரண்டு வெளிநாட்டுக் கப்பல்களைத் தடுத்து வைத்திருந்தனர்.

நான்கு நாட்களாக இந்தக் கப்பல்களை அவர்கள் விடுவிக்க மறுத்த நிலையில் எஸ்.பி.எஸ். எனப்படும் கடற்படையின் விசேட கொமாண்டோ அணியைக் களம் இறக்கி அந்தக் கப்பல்களை விடுவித்திருந்தார் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தன.

அவரே இந்த நடவடிக்கையை நேரடியாக வழி நடத்தினார். கடற்படைப் படகு ஒன்றில் அவர் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சென்று இறங்கிய போது, அங்கு படம் எடுத்துக் கொண்டிருந்த ஊடகவியலாளரை திட்டியவாறு ஆவேசமாகப் பிடித்துத் தள்ளினார்.

ஊடகவியலாளர் தம்மை அடையாளம் காட்டிய போதும் கடற்படைத் தளபதி விடவில்லை. அந்தத் தருணத்தில் அவர் ஆவேசமானவராக நடந்து கொண்டார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அங்கு எடுக்கப்பட்ட வீடியோக்களால் அதனை உறுதி செய்து கொள்ள முடிகின்றது.

இலங்கையில் ஊடகவியலாளர் முப்படைகளின் தளபதி ஒருவரால் பகிரங்கமாகத் தாக்கப்பட்ட அல்லது அச்சுறுத்தப்பட்ட முதல் சம்பவமாக இது கருதப்படுகின்றது.

இந்தச் சம்பவத்திற்கு ஊடக மற்றும் பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. குறித்த தளபதி மிலேச்சத்தனமாக நடந்து கொண்டு இருப்பதாக கூட்டு எதிரணியும் குற்றம் சாட்டியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான செய்திகள் படங்களுடன் வெளியான நிலையில் அரசாங்கம் கடுமையான அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

கடற்படைத் தளபதி மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற குரல்களை அடக்குவதற்காக அவர் மீது பாதுகாப்பு அமைச்சின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஆனாலும் அத்தகையதொரு விசாரணை முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை மாறாக அம்பாந்தோட்டை சம்பவம் தொடர்பாக ஒருமுழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கடற்படையிடம் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி கோரியிருந்தார்.

கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுக்கப்பட்ட இந்த உத்தரவுக்கு அமைய புதன்கிழமை கடற்படை அறிக்கையொன்றைக் கையளித்தது. அந்த அறிக்கையைப் படித்து முடித்த பின்னர்தான் அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பாதுகாப்புச் செயலர் தெரிவித்திருந்தார்.

மறுநாள் (15.12.2016) வியாழக்கிழமை அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இந்த அறிக்கையைக் கையளித்தார் கடற்படைத் தளபதி.

ஊடகவியலாளர் மீதான அச்சுறுத்தும் நடவடிக்கை கடற்படைத் தளபதிக்கு எதிராக அரசாங்கத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கடுமையான எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

இதனால் அவரது பதவி பறிக்கப்படும் என்றும் பரவலாக செய்திகள் வெளியாகி இருந்தன.

ஏற்கனவே கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக முகாம்களில் உள்நுழைய தடை விதிக்கும் முடிவை எடுப்பதில் குறித்த தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தன முக்கிய பங்கு வகித்திருந்தார்.

அந்த முடிவுக்கு உடந்தையாகச் செயற்பட்ட அப்போதைய விமானப் படைத் தளபதி ஏயார் சீவ் மார்ஷல் ககன் புளத்சிங்கவுக்கு சேவை நீடிப்பு வழங்காமல் வீட்டிற்கு அனுப்பியது அரசு.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவுக்கு சேவை நீடிப்பு வழங்கினாலும் விமானப் படைத் தளபதியாக இருந்த ககன் புளத்சிங்கவுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அதேபோன்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தனவை அரசாங்கம் வீட்டிற்கு அனுப்பக் கூடும் என்ற கருத்து பலரிடமும் காணப்படுகின்றது.

ஆனால் கடற்படைத் தளபதி விடயத்தில் அரசாங்கம் மென்போக்கு ஒன்றைக் கடைப்பிடிப்பதாகவே தெரிகின்றது.

ஆரம்பத்தில் இருந்து அவரைக் காப்பாற்றுகின்ற வகையில் அரச இயந்திரம் செயற்படுகின்றது.

ஒரு சில அமைச்சர்கள் ஊடகவியலாளரைத் தாக்கிய கடற்படைத் தளபதியின் செயலை கடுமையாக விமர்சித்துள்ள போதிலும் பெரும்பாலானவர்கள் அவரது செயலுடன் ஒத்துப் போவதையும் காண முடிகின்றது.

கடந்த வியாழக்கிழமை (15.12.2016) அலரி மாளிகைக்குக் கடற்படைத்தளபதியை அழைத்துப் பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜப்பானிய மற்றும் சிங்கப்பூர் கப்பல்களை விடுவிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைக்குப் பாராட்டுத் தெரிவித்திருந்தார்.

கடற்படைத் தளபதியை அழைத்து குட்டு வைக்கப் போகின்றார் என எதிர்பார்த்த பலருக்கு இது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

வெளிநாட்டுக் கப்பல்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பாக சர்வதேச கப்பல் நிறுவனங்களிடம் இருந்து விடுக்கப்பட்ட எச்சரிக்கையை அடுத்து தாமும் ஜனாதிபதியும் பேசி பாதுகாப்புச் செயலர் மூலமாகவே கடற்படையை நடவடிக்கையில் இறங்குமாறு உத்தரவிட்டதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கூறியிருந்தார்.

இதன் மூலம் கடற்படையை அங்கு களம் இறக்கியதன் பின்னணியில் அரசாங்கமே இருந்தது என்பது உறுதியாகி இருக்கிறது. அரசாங்கத்தின் உத்தரவைத் திறமையாகச் செயற்படுத்தியதால்தான் கடற் படைத் தளபதிக்கு அந்தப் பாராட்டு கிடைத்தது.

அது மாத்திரமன்றி சர்வதேச போக்குவரத்து நிறுவனமும் கடற்படைத் தளபதியைப் பாராட்டி சான்றிதழ் வழங்கியிருக்கிறது.

காரணம் தடுத்து வைத்திருந்த கப்பல்களை அவர் விடுவித்திருந்தமைதான்.

இருப்பினும் ஊடகவியலாளரை ஏன் கடற்படைத் தளபதி அச்சுறுத்தியும் ஆவேசமாக நடந்து கொண்டதும் சர்ச்சைக்குரிய விவகாரமாகத்தான் இருக்கின்றது.

கடற்படைத் தளபதி சீருடையில் இல்லாமல் அரைக் காற்சட்டையுடன் இருந்தது ஏன்? என்ற கேள்வியும் பரவலாக எழுப்பப்படுகின்றது.

வடக்கில் இரு கடற் படையினர் மற்றும் பொலிஸார் தாக்கப்பட்ட போது இராணுவத்தினரைக் களம் இறக்காத அரசாங்கம் எதற்காக அம்பாந்தோட்டையில் கடற்படையினரைக் களம் இறக்கியது எனக் கேள்வி எழுப்பியிருந்தார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

இந்தக் கேள்விக்கான பதில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்தில் அடங்கியிருந்தது.

கடற்படைத் தளபதி சிவில் உடையில் இருக்கவில்லை எனவும் அவர் அணிந்திருந்தது மரைன் பைலட் எனப்படும் கப்பல்களுக்கு வழி காட்டுபவர்கள் அணியும் சீருடை என்றும் சரத் பொன்சேகா கூறியிருந்தார்.

கடற்படையில் உள்ள இரண்டு மரைன் பைலட்களில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தனவும் ஒருவர் என்பது சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள தகவல்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் துறைமுக வாசலில் போராட்டத்தை நடத்தியிருந்தால் பொலிஸாரைக் கொண்டு அரசாங்கம் நிலைமையினைச் சமாளித்திருக்க முடியும்.

ஆனால் தொழிலாளர்கள் துறைமுகத்துக்குள் கப்பல்கள் தரித்து நிற்கும் இறங்குதுறைப் பகுதியில் போராட்டம் நடத்தியிருந்தனர்.



தம்மீது நடவடிக்கை எடுத்தால் கடலில் குதிப்போம் என்று மிரட்டியிருந்தனர்.

அதனை விட இரண்டு வெளிநாட்டுக் கப்பல்களைத் தடுத்து வைத்திருந்தனர். அவற்றின் மீது துறைமுகத்தில் பயன்படுத்தும் இரண்டு இராட்சத பாரம் தூக்கிகளை இறக்கிவிட்டு கப்பல்களை நகர விடாமல் தடுத்திருந்தனர்.

துறைமுகத்தில் இருந்த மின் பிறப்பாக்கிகளையும் மின் விநியோகக் கட்டமைப்பையும் ஸ்கனர்கள் உள்ளிட்ட கருவிகளையும் செயற்பட முடியாதவாறு தொழிலாளர்கள் சேதப்படுத்தியிருந்தனர்.

இந்தக் கட்டத்தில் கடற் படையின் தலையீடு தவிர்க்க முடியாததாக மாறியிருந்தது.

கப்பல்களை விடுவிப்பதோ அவற்றை வெளியே அனுப்புவதோ பொலிஸாரால் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கையல்ல. அதை விட கப்பல்கள் பணயம் வைக்கப்படும் சம்பவங்களைக் கையாள்வதற்கு படையினருக்கே பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

. அண்மையில் இலங்கை வந்த அமெரிக்கக் கடற்படைக் கப்பல்களில் வந்த மரைன் படையினருடன் இணைந்து கடற்படையினர் மேற்கொண்ட கூட்டுப் பயிற்சிகளில் கடத்தல்காரர்களிடம் இருந்து கப்பல்களை மீட்கும் நடவடிக்கைக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருந்தது.

அது மாத்திரமன்றி கப்பல்களை மீட்டு அவற்றைத் துறைமுகத்திற்கு வெளியே பாதுகாப்பாகக் கொண்டு செல்ல வேண்டியிருந்தது.

துறைமுகத்தில் பணியாற்றும் கப்பல்களுக்கு வழி காட்டும் டக் படகுகளின் டக் மாஸ்டர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில்தான் கடற்படைத் தளபதி கப்பலை விடுவித்து பாதுகாப்பாகத் துறைமுகத்திற்கு வெளியே கொண்டு செல்லும் மரைன் பைலட்டுக்குரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

கடற்படைத் தளபதியின் இந்த நடவடிக்கை மூலம் அரசாங்கம் சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பியுள்ளது.

அதனால்தான் கடற்படைத் தளபதியை அரசாங்கம் பாதுகாக்க முயற்சிக்கின்றது.

எவ்வாறாயினும் ஊடகவியலாளருக்கு எதிரான அவரது செயற்பாடுகளை அரசாங்கம் அங்கீகரிப்பது சர்ச்சைக்குரிய விடயமாகவே இருக்கும்.

கடற்படையினது சிறப்பு கொமாண்டோக்களின் பாதுகாப்பு வளையத்தை மீறிச் சென்று வீடியோ எடுத்ததால்தான் கடற்படைத் தளபதி ஆவேசமாக நடந்து கொண்டார் என்று கூறப்படும் நியாயமும் பொருத்தமுடையதாகத் தெரியவில்லை.

கடற்படைத் தளபதி விடயத்தில் எழுந்திருக்கும் சர்ச்சைகள் அரசாங்கத்திற்கு இரு பக்க நெருக்கடியைக் கொடுப்பதாகவே இருக்கின்றது. எதிரணியினர் இந்த விடயத்தை தொடர்ச்சியாக தூண்டி விட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதால் இந்த விடயம் இப்போதைக்கு முடிவுக்கு வராது.

அதேவேளை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தன தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் பல்வேறு பாதுகாப்புத் திட்டங்களுக்கு முக்கியமானவர்.

அமெரிக்காவிற்கு அண்மையில் மேற்கொண்ட பயணம், அமெரிக்க கடற்படையுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தியுள்ளமை, சர்வதேச கடற்பாதை பாதுகாப்பில் ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில் கடற்படையைத் தயார்படுத்தும் தலைமைத்துவம், கடற்படையில் புதிதாக மரைன் படைப்பிரிவை உருவாக்கியுள்ளமை போன்ற விடயங்களில் கடற்படைத் தளபதியின் திறமைகள் ஒரு புறம் இருக்க மறு புறம் ஊடகவியலாளரை அச்சுறுத்திய சம்பவம் இவர் மீதான கறையாகவே இருக்கின்றது.

இந்த நிலையில் அரசாங்கம் இந்த விவகாரத்தை எவ்வாறு கையாளப்போகிறது. ஊடகங்களைத் திருப்திப்படுத்துவதற்காக கடற்படைத் தளபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போகிறதா? கடற்படையின் ஆதரவுக்காக ஊடகங்களின் ஆதரவை இழக்கப் போகிறதா?

நன்றி இணையம்

ஒவ்வொரு மனிதனும் பிறந்தது வெற்றி பெறத்தான். தோல்வி அடைய அல்ல.
- ஹென்றி டேவிட் தோரா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பரிபூரண மக்கள் அமைப்பாக தமிழ் மக்கள் பேரவை மலரட்டும்

காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது என்பார் வள்ளுவர். காலம் கருதிச் செய்யப்படுகின்ற உதவியின் உன்னதத்தை எடுத்துரைக்க சிறு உதவியையும் இந்த பூமிக்கு நிகராக ஒப்பிட முடியும் என்பது வள்ளுவரின் நிலைப்பாடு.

அந்தக் குறளின் யதார்த்தம் தமிழ் மக்களுக்கு நன்கு புரியும். தேவைப்படுகின்ற நேரத்தில் தேவைப்படுகின்ற வேளையில் கிடைக்கின்ற உதவி உன்னதமானது என்பதற்கப்பால், அந்த உதவி கிடைக்கப் பெறாது போகின் அதனால் ஏற்படுகின்ற இழப்புக்கள் ஈடு செய்யப்பட முடியாதவையாகவும் இருக்கும்.

எனவே ஈடுசெய்ய முடியாத இழப்பைத் தடுக்கக் கூடியதுதான் காலம் உணர்ந்த உதவி. 2009ஆம் ஆண்டுக்குப்பின் ஈழத் தமிழினத்தின் நிலைமை மிகவும் மோசம் என்றாயிற்று. தமிழர்களுக்கு அரசியல் தலைமை உண்டா என்று எண்ணும் அளவில் அரசியல் களம் இருந்தது.

வன்னி யுத்தத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் அதனைத் தொடர்ந்து ஐ.நா சபையில் நம் சார்பில் நடந்த வாதங்கள் இதனுடன் தொடர்புபட்டதாக இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் என ஏகப்பட்ட விடயங்கள் நடந்தனவாயினும் இவை தொடர்பில் தமிழ் மக்கள் நடப்பது என்ன என்பதை அறியாதவர்களாகவே இருந்தனர் - இருக்கின்றனர்.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் முதல் ஐ.நா சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் வரை இலங்கைக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் வந்து சென்றனராயினும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அவர்களைச் சந்திக்க முடியாமல் போயிற்று.

யுத்தப் பாதிப்பை பார்வையிடுவதற்கும் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திப்பதற்குமாகவே அவர்களின் வருகை இருந்தனவாயினும் அது நடைபெறவில்லை என்பதுதான் உண்மை.

எங்களை ஒருமுறையேனும் சந்தியுங்கள்; எங்கள் அவலத்தை கேளுங்கள்; காணாமல்போன எங்கள் பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள் என்று கெஞ்சிக் கதறியும் பயனற்றுப்போக வந்தவர்களை பின்கதவால் அழைத்துச் செல்லப்பட்ட சம்பவங்களே நடந்தன.

பாதிக்கப்பட்ட மக்களை ஐ.நா செயலாளரும் பிரிட்டிஷ் பிரதமரும் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டிய தமிழ் அரசியல் தலைமை அதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கவே இல்லை எனும்போது தமிழ் மக்கள் பலமற்ற தளத்தில் ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் இருக்கின்றனர் என்பது உணரப்பட்டது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் அமைப்பு உருவாகியது.

தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரியவரான வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களை இணைத் தலைவராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை தனது ஒரு வருட நிறைவுக்குள் தமிழ் மக்களின் நம்பிக்கையை வெல்லும் அளவில் செயலாற்றியுள்ளமை மிகுந்த திருப்தியை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

இந்தத் திருப்தி என்பது உள்நாட்டில் மட்டுமன்றி எங்கள் புலம்பெயர் உறவுகள் வாழ்கின்ற நாடுகளிலும் ஏற்பட்டதால், நம்பிக்கை என்ற அடித்தளம் காப்பாற்றப்பட்டுள்ளது என்று கூறுவது சாலப் பொருத்துடையதாகும்.

இன்று ஒரு வருடத்தை பூர்த்தி செய்கின்ற தமிழ் மக்கள் பேரவை அனைத்து தமிழ் உறவுகளையும் தன்னுள் ஆட்படுத்தி தமிழினத்தின் பலமான சக்தியாக தமிழ் மக்களின் பலமான குரலாக விளங்க வேண்டும்.

தமிழ் மக்களின்அத்தனை தேவைகளையும் இனங்கண்டு அவற்றுக்கெல்லாம் பொருத்துடைய; சேவை நோக்குடைய; ஆளுமைமிக்கவர்களை இணைத்து உப குழுக்களை அமைத்து ஆக வேண்டியவற்றை ஆக்க வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களின் தீர்மானம் எடுக்கும் ஒரு பெரும் சக்தியாக அனைவரின் ஆதரவோடு தமிழ் மக்கள் பேரவை தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

கண்ணீர் விடும் எங்கள் தமிழினத்தின் துயர் துடைக்க தமிழ் மக்கள் பேரவை அயராது பாடுபட வேண்டும் என்பதே இன்றைய ஒரு வருட நிறைவில் எங்கள் பிரார்த்தனை.

# ஆராயாமல் அரசியல் அமைப்பு கொண்டுவரப்பட்டால் எதிர்ப்பு

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

எவரதும் அவசரத்தேவைகளுக்காக புதிய அரசியல் அமைப்பை உருவாக்க முடியாது. ஆராயாது உடனடியாக அரசியல் அமைப்பு கொண்டு வரப்படுமாயின் அதை எதிர்ப்போம் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அரசாங்கம் அவ்வாறு ஏதேனும் தீர்மானங்கள் எடுக்குமாயின் நாமும் அரசாங்கத்துக்கு எதிரான நகர்வுகளை மேற்கொள்ள வேண்டி வரும் எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடு எவ்வாறானது எனக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

# வருட இறுதியில் வானில் ஏற்படவுள்ள மாற்றங்கள்

## இலங்கையர்களுக்கும் வாய்ப்பு

(கொழும்பு)

வருடத்தின் இறுதி விண்கற்கள் பொழிவினை எதிர்வரும் 21ஆம் திகதி இரவு மற்றும் 22ஆம் அதிகாலை பார்க்க முடியும் என அமெரிக்க நாசா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அர்பீட் என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த விண்கற்கள் பொழிவு மணித்தியாலத்திற்கு 5 முதல் 10க்கு இடைப்பட்ட அளவில் பூமியை நோக்கி விழும் என வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விண்கற்கள் பொழிவு வருடாந்தம் நிகழ்கின்ற ஒன்றாகும். அது டிசெம்பர் மாதம் 17 மற்றும் 25ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலங்களில் இதற்கு முன்னர் காண முடிந்தன.

இந்த வருடத்தில் அந்த பொழிவில் மாற்றத்தை காண முடியும் என வானியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை மக்களும் வருடத்தின் இறுதியில் விண்கற்கள் பொழிவினை காண முடியும்.

21 ஆம் திகதி இரவு மற்றும் 22 ஆம் திகதி அதிகாலை வேளையில் வானத்தை அவதானித்தால் விண்கற்களை காண முடியும் என வானியியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (இ-3)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன், யுவதி உயிரிழப்பு

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவரும் யுவதி ஒருவரும் உயிரிழந்துள்ளனர். அத்துருகிரிய, தியபெதும - பகமுன வீதியின் 10வது கிலோ மீற்றர் கட்டைக்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இவ்வாறு இளைஞர் ஒருவரும் இளம் யுவதி ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அரங்கலயில் இருந்து மாலபே நோக்கி நேற்றுக் காலை சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் எதிர் திசையில் பயணித்த மற்றொரு மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாலபே நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும், மற்றைய மோட்டார் சைக்கிளில் அமர்ந்து பயணித்த யுவதியும் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் தலங்கம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

அத்துருகிரிய, ஒருவல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரும், பியில, கனுல்வெல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய யுவதி ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (இ-3)

## 80 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைதானார்

இரத்தினபுரி - எம்பிலிப்பிடிய வீதியின் 97 ஆம் தூண் அருகில் வைத்து 80 கிலோகிராம் கஞ்சாவுடன் நபரொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அரிசி மூட்டைகளில் மறைத்து வைத்து குறித்த கஞ்சா தொகை கடத்தப்பட்டுள்ளதாக எம்பிலிப்பிடிய பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் ஹம்பெகமுவ பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, குறித்த நபரையும் மீட்கப்பட்ட கஞ்சாவினையும் எம்பிலிப்பிடிய நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-3)

### அன்னை சாரதாதேவியின் 164 ஆவது ஜெயந்திவிழா

அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 164 ஆவது ஜெயந்தி விழா நாளை 20 ஆம் திகதி மாலை 4 மணி முதல 6 மணிவரை யாழ்.மருதனார்மடம்வீதி உரும்பிராய்சந்தியிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறும். (இ)

### 'பயணம்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று

எழுவைதீவு அன்ரனி ஜெகதாசனின் 2 ஆம் ஆண்டு சிரார்த்ததின நிகழ்வை முன்னிட்டு "பயணம்" கவிதை நூல் வெளியீடு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு எழுவைதீவு கடலில் இடம்பெறும்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி கா. நிருபா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம். சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் கலாசார உத்தியோகத்தர் திருமதி தி.மாலினி கிருஷ்ணானந்தன், கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உதவியாளர் க.ஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை



### உன்னுள்நான் என்னுள் நீ

ஒரு கைப்பிடி பயறை எடுத்து ஒரு கோப்பை நீரில் போட்டால் ஒரு சில மணி நேரத்தில் அந்தப் பயறு எல்லாவற்றுக்குள்ளும் தண்ணீர் நிறைந்து விடும். அதே நேரத்தில் பயறும் தண்ணீருக்குள் இருக்கும். அதாவது சுருங்கச் சொன்னால் தண்ணீருக்குள் பயறு, பயறுக்குள் தண்ணீர். அதே போல இருப்பு நிலையான சுத்தவெளியானது எல்லா விண்துகள்களையும் விண்துகள்களாலான பருப்பொருள்களையும் சூழ்ந்தும் ஊடுருவியும் இருக்கிறது. இயக்கக்களமாகிய பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கிற இருப்பு நிலையானது, நிழல் அலைத் துகள்களால் நிரம்பப் பெற்றிருக்கிறது. ஆகவே, துகள்களுக்கு இடையே உள்ள வெளியானது வான்காந்தக் களமாகத் திகழ்கிறது.

இத்தகைய பிரபஞ்சக் களத்தின் ஒரு சிறு பகுதியில் உள்ள இந்தப் பூமியானது சூரியனைச் சுற்றி வலம் வருகிறது. பூமியில் உள்ள எல்லா உயிரினங்களும் பரிணமித்து, வளர்ந்து, வாழ்ந்து, மறைந்து இறுதியிலே வான்காந்தக் களத்திலே கலக்கின்றன. பிரபஞ்சத்தின் வாழ்க்கையோடு ஒப்பிடும்போது மனிதனுடைய வாழ்க்கை மிகமிகச் சிறியதாகும். மனிதனின் இந்தக் குறுகிய வாழ்க்கைக் காலத்திற்குள் அவனது உடலிலே ஏற்படும் பல்வேறு விந்தைகளை யாரும் இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளவில்லை.

வாழ்க்கையை முழுமையாக நிறைவோடு வாழும் வகையில் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களை அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சி, பிரபஞ்சத்தின் இயக்கம் இவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது நாம் உள்ளுணர்வாக உணரக்கூடிய மூன்று அடிப்படைத் தத்துவங்களான சுத்தவெளி, உயிர்ச்சக்தி, காந்தம் ஆகியவற்றின் சிறப்பை அறியலாம். இந்த மூன்றைப் பற்றியும் ஒருவர் தெளிவாகவும், சந்தேகம் இல்லாமலும் தெரிந்து கொள்வதற்குத் தவறினால் அவர் தத்துவ ஞானத்தையும் சரி, விஞ்ஞானத்தையும் சரி ஆழமாகவும், பூரணமாகவும் தெரிந்து கொள்ள முடியாது.

# மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

## றோயல் சுப்பர் 8 இற்கு தகுதி





அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு 11 பேர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட போட்டியில் 16.12.2016 வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி றோயல் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதிக் கொண்டது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஆட்டத்தில் றோயல் அணியினர் ஆரம்ப நேரம் முதலே ஆதிக்கத்தை செலுத்தி 20 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலினை போட்டு தனது வெற்றியினை உறுதிப்படுத்திக் கொண்டது.

இக்கோலினை அவ் அணி சார்பாக கோபன் பதிவு செய்தார். தொடர்ந்து போராடிய கலைமதி அணியினர் இடைவேளை வரை எந்தவித கோல்களையும் போடவில்லை. இடைவேளையின் போது ஆட்டம் 1:0 என்ற நிலையில் காணப்பட இரண்டாவது பாதியில் ஆதிக்கத்தை செலுத்திய கலைமதி அணியினர் 30 ஆவது நிமிடத்தில் ஒரு கோலினை போட ஆட்டம் சூடுபிடிக்க தொடங்கியது. இக்கோலினை அவ் அணி சார்பாக சத்தியசீலன் பதிவு செய்தார். ஆட்டநேர முடிவில் ஆட்டம் 1:1 என சமநிலையில் காணப்பட்ட போது வெற்றி தோல்வி சமநிலை தவிர்ப்பு உதை மூலம் தீர்மானிக்கப்பட்டது.

இதில் றோயல் அணியினர் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சுப்பர் 8 ஆட்டத்திற்கு தகுதி பெற்றனர். (க)

# பாய்காட்டன் கனவு அணியில் புறந்தள்ளப்பட்ட ஆசிய வீரர்கள்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தொடக்க துடுப்பாட்ட வீரர் ஜெஃப்ரி பாய்காட். இவர் தற்போது தொலைக்காட்சி வர்ணனையாளராகவுள்ளார். இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது டெஸ்ட். சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்த போட்டியில் அவர் வர்ணனையாளராக செயலாற்றி வருகிறார்.

இவர்தனது 11பேர்கொண்ட கனவு அணியை தற்போது அறிவித்துள்ளார். இதில் ஒரு இந்தியர் மற்றும் இலங்கை வீரர்களுககும் இடமில்லை. இதுகுறித்து அவர் கூறுகையில் "கபில தேவ் மிகவும் சிறந்த பந்து வீச்சாளர். அதேபோல் இயான் போத்தமும் சிறந்த வீரர் தான். ஆனால், மேற்கிந்திய தீவுகள் அணியின் கேரி சோபர்சை விட இவர்களை சிறந்த வீரராக என்னால்தேர்வு செய்ய முடியவில்லை.

அந்த அணியில் எனக்குக் கூட இடமில்லை. கவாஸ்கர் சிறந்த வீரராக இருந்தாலும், கிரேஸ் மற்றும் ஹோப்ஸ் ஆகியோரை விட இவரை எப்படி தேர்வு செய்ய முடியும். கிரேஸ் 30 ஓட்டங்களையொட்டிதான் சராசரி வைத்திருப்பார். ஆனால், தற்போது சிறந்த வகையில் தயார் செய்யப்படும் ஆடுகளத்தை அப்போதைய கால கட்ட ஆடுகளத்துடன் ஒப்பிடக் கூடாது. அப்போது ஆடுகளம் முழுவதும் கற்களாக காணப்படும். ஆடுகளம் காயும் வரை மதியம் இரண்டு மணி வரை காத்திருப்பார்கள். தற்போது ஈரப்பதமான ஆடுகளத்தை கொடுத்தால், வீரர்களுக்கு பைத்தியம் பிடித்து விடும் என்றார்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான் கானை தலைவராக தேர்வு செய்துள்ள பாய்காட், மேற்கிந்தியத்தீவு அணியின் ஜார்ஜ் ஹெட்லி, விவியன் ரிச்சர்ட்ஸ், கார்பீல்டு சோபர்ஸ் இங்கிலாந்தின் ஜேக் ஹோப்ஸ், கிரேஸ் ஆகியோரை தேர்வு செய்துள்ளார்.


# டோனி அமைதியானவர் கோலி ஆக்ரோஷமானவர் இருவரையும் ஒப்பிடாதீர்கள்

## கபில்தேவ் கோரிக்கை

விராட் கோலி தலைமையிலான இந்திய டெஸ்ட் அணி இலங்கை மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து ஆகிய அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றி அசத்தியது. தரவரிசை பட்டியலிலும் முதலிடத்தை 'நம்பர் வன்' அணியாக திகழ்கிறது.

இந்திய ஒரு நாள் போட்டி மற்றும் 20 ஓவர் அணிக்கு டோனி தலைவராக உள்ளார். இந்த நிலையில் ஒரு நாள் போட்டி அணிக்கும் விராட் கோலியை தலைவராக நியமிக்க வேண்டும் என்று பேச்சுக்கள் எழுந்தன.

இதுபற்றி கருத்து தெரிவித்த இந்திய அணி முன்னாள் தலைவர் கபில்தேவ்,



ஒரு நாள் போட்டிக்கு டோனியே நீடிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அவர் கூறுகையில்,

டோனி தனது பணியை சிறப்பாக செய்து வருகிறார். அதுதான் முக்கியம். அவர் அனுபவம் வாய்ந்த வீரர். அவரே ஒரு நாள் போட்டிக்கு தலைவராக நீடிக்க வேண்டும். நேரம் வரும் போது டோனியே அனைத்து வடிவிலான கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவார்.

தலைமை பதவியில் டோனி, கோலி இருவரையும் ஒப்பிட முடியாது. டோனி அமைதியானவர். கோலி ஆக்ரோஷமானவர். இருவரையும் ஒப்பிட்டு பார்ப்பது மிகவும் கடினம் என நினைக்கிறேன். ஏனென்றால் இருவரும் வேறு விதமான அணியையும் செயற்பாடுகளையும் கொண்டுள்ளனர்.

நாளை நீங்கள் டோனி, கோலி ஆகியோரை சவுரவ் கங்குலியுடன் ஒப்பிட்டு சொல்லுங்கள் என்று கேட்பீர்கள். ஒவ்வொரு தலைவரும் தங்களிடம் உள்ள ஆக்ரோஷம், ஊக்கப்படுத்துதல் ஆகியவற்றை வேறு வேறு விதமாக வெளிப்படுத்துவார்கள்.

ஆனால் இவை அனைத்தும் அணியின் வெற்றிக்கு எவ்வாறு உதவுகிறது என்பது தான் முக்கியம். அதுதான் தலைமைத்துவம்.

வேகப்பந்து வீச்சாளர்கள் 135 கி.மீற்றர் வேகத்தில் வீசினாலும் சரியான அளவில் வீசு தான். 140 கி.மீற்றர் வேகத்தில்தான் வீச வேண்டும் என்பதில்லை. முகமது சமி, உமேஷ் யாதவ் இஷாந்த் சர்மா, புவனேஸ்வர் குமார், ஆகியோர் நல்ல முன்னேற்றத்துடன் இருக்கிறார்கள் என அவர் கூறினார்.

# பூநகரி விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணம் வழங்கி வைப்பு





பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் 2016 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சி ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான சிறிதரனால் 16.12.2016 அன்று பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கட்சியின் கொள்கைப்பரப்பு செயலாளர் வேழமாலிகிதன், கட்சியின் இளைஞர் அணித்தலைவர் சுரேன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள், பிரதேச செயலக கணக்காளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர், பயனாளிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (கி)

# 2016ம் ஆண்டுக்கான தேசிய ரீதியிலான கராத்தே

## சென்.ஜோன்ஸ், யாழ்.மத்தி மாணவர்கள் தங்கம்




இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப் போட்டியில் 19 வயதுப் பிரிவிற்கான கறுப்புப் பட்டி குமித்தேயில் சென். ஜோன்ஸ் கல்லூரியை சேர்ந்த விஜயராஜ் நிவேதன் தங்கப் பதக்கத்தினையும் யாழ். மத்திய கல்லூரி மாணவன் 13 வயது மண்ணிறப்பட்டிக்கான குமித்தே போட்டியில் தங்கம் வென்றார்.

வெற்றி பெற்ற மாணவர்களுடன் பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜை படத்தில் காணலாம். (க)

## விசேட வானூர்தி...

யாழ்ப்பாணம் சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் ஆறு ஆண்களும் ஐந்து பெண்களும் உள்ளடங்களாக பலியான பதினொரு பேரில் 10 பேரினது சடலங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து விஷேட வானூர்தி மூலம் நேற்று மதியம் களுத்துறைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

மேலும் குறித்த பதினொரு பேருக்கும் நெஞ்சு, வயிறு ஆகிய பகுதிகள் உள்ளடங்கலாக உடலின் பல பாகங்களிலும் ஏற்பட்ட காயங்களே மரணத்திற்கான காரணம் என யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி மயூரதன் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் களுத்துறையில் இருந்து வந்த சுற்றுலா பயணிகளது ஹயஸ் வாகனமும் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் நேருக்கு நேர் மோதியதால் ஏற்பட்ட கோர விபத்து சம்பவத்தில் ஹயஸ் வாகனத்தில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் பத்துபேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தனர்.

அத்துடன் குறித்த சம்பவத்தில் ஹயஸ் வானில் பயணித்த இருவரும் மற்றும் பேருந்தில் பயணித்த நால்வருமாக ஆறு பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவ்வாறு வைத்தியசாலையில சேர்க்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரான ஹயஸ் வானில் பயணித்த பதினொராவது நபரும் சிகிச்சை பலனின்றி அன்று மாலை உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில் இவ் விபத்து சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் ஏழு பேர் மாதம்பை பகுதியை சேர்ந்தவர்கள் என்பதுடன் இருவர் கலித தோட்ட பகுதியையும் ஒருவர் பத்தரகாம பகுதியையும் மற்றைய நபர் மாத்தளை பகுதியையும் சேர்ந்தவர்களாவர். இந்நிலையில் உயிரிழந்தவர்களது சடலங்களானது யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சாவகச்சேரி பதில் நீதிவான் எஸ். கணபதிபிள்ளை நேரில் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். அத்துடன் சடலங்கள் தொடர்பான பிரேத பரிசோதனைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி மயூரதன் மேற்கொண்டிருந்தார்.

இதன்படி குறித்த மரணம் ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரி தெரிவிக்கையில், உயிரிழந்த அனைவரது உடலிலும் நெஞ்சு மற்றும் வயிற்று பகுதியில் பலமான காயம் ஏற்பட்டிருந்தது. அத்துடன் உடலல் ஏனைய பகுதிகளிலும் ஏற்பட்டிருந்த காயங்களே இவ் மரணத்திற்கான காரணமாகும். குறிப்பாக உயிரிழந்தவர்களது உடலில் உள்ள காயங்களை அடிப்படையாக கொண்டு பார்க்கும் போது விபத்து இடம்பெற்று சிறிது நேரத்திலேயே உயிரிழந்திருக்கலாம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதனை தொடர்ந்து குறித்த பதினொரு சடலங்களில் மாத்தளை பகுதியை சேர்ந்தவரது சடலமானது வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டதுடன் எனைய பத்து பேரது சடலங்களும் இலங்கை விமான படையினரது ஒத்துழைப்புடன் விஷேட வானூர்தி மூலம் நேற்று மதியம் யாழ்ப்பாணம் பலாலியில் இருந்து கொழும்பு இரத் மலானை விமான நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து களுத்துறை மாதம்பை மற்றும் ஏனையோரது இடங்களுக்கு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

மேலும் குறித்த விபத்து சம்பவத்தையடுத்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள் நேற்று அதிகாலை முதல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்த நிலையில் அவர்களுக்கான தங்குமிட ஏற்பாடுகள் மற்றும் உணவு ஏற்பாடுகள் போன்ற அனைத்து தேவைகள் தொடர்பான ஏற்பாடுகளையும் யாழ்.போதனா வைத்தியசாலையினர் ஏற்பாடு செய்திருந்ததாக வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்திருந்தார்.

இதேவேளை குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்ற போது ஜாதி பேதங்களை மறந்து காயமடைந்தவர்களை உடனடியாக வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு உதவிய யாழ்.மக்களுக்கு உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் உறவினர்கள் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர். குறிப்பாக இது தொடர்பாக இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் சிலர் தெரிவிக்கையில், நாம் தமிழர்கள் எம்மீது வெறுப்பாக உள்ளார்கள் என நினைத்துகொண்டிருந்த நிலையில் இவ் விபத்தில் தமிழ் மக்களே தமக்கு பூரண உதவிகளை வழங்கியிருந்தார்கள்.

எமது இறந்த உறவுகளையும் காயமடைந்தவர்களையும் உடனடியாகவே வாகனத்தில் இருந்து மீட்டெடுத்து வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கும் ஏனைய உதவிகளை செய்வதற்கும் பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள். அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தினரும் எமக்கு தங்குமிட உணவு ஏற்பாடுகளை வழங்கியிருந்தனர். இவ்வாறான நிலையில் இவர்கள் எமக்கு வழங்கிய உதவிகளை உயிருள்ள வரையில் வரையில் மறக்க மாட்டோம் எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

## பொதுச் சுகாதார...

சுகாதார அமைச்சினால் இவ்வாறான முறையற்ற இடமாற்றம் இடம்பெற இருந்த போது எமது எதிர்ப்பினையடுத்து அந்த இட மாற்றம் இரத்துசெய்யப்பட்டது. அதே போன்றே இந்தவருடமும் முறையற்ற இடமாற்றத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டு உத்தியோகத்தர்கள் மீது திணிக்கப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தாய்சங்க உறுப்பினர்கள் இணைந்து 3 மாத காலம் வடமாகாண ஆளுநரிடம் கலந்துரையாடினோம். அத்துடன் சுகாதார அமைச்சின் செயலாளருடனும் பேசியிருந்தோம் ஆனால் எவரும் உரிய பதில் தரவில்லை. இந்நிலையில் உரியதீர்வு கிடைக்கும் வரை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் வெளிக் கடமைகள் எவற்றையும் செய்ய மாட்டார்கள் எனவும் கால வரையறையின்றி இப்போராட்டம் தொடரும் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-9)

# மரண அறிவித்தல்

### திருமதி

## செல்லையா சோதிப்பிள்ளை



அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா சோதிப்பிள்ளை 18.12.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.அன்னார் காலஞ்சென்ற அம்பலம்-முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்புமிகு மூத்தமகளும் காலஞ்சென்ற வை.செல்லையா (மனேஜர் ) அவர்களின் அன்பு மனைவியும் அமரர் முருகேசு, சிவலிங்கம், அமரர் யோகநாதன், சரஸ்வதி, அமரர் திலகவதி, கமலேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செ.கந்தசாமி (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் மக்கள் வங்கி), இ.புவனேஸ்வரி, செ.பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உப்புக் கூட்டுத்தாபன ஊழியர், சிவபூமி விவசாயப்பண்ணை முகாமையாளர்) ச.பாலகௌரி, வி.ஞானாம்பிகை, செ.ஆறுமுகம் (சுவிஸ்), செ. பரமேஸ்வரன் (அதிபர் யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்) காலஞ்சென்ற செ.விக்னேஸ்வரன், செ.கணேஸ்வரன், இ.இராஜேஸ்வரி, செ. சுணேந்திரன் (வாழ்வெழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் உடுவில்) சி. கணேசாயினி (சுவிஸ் ) ஆகியோரின் அன்புத் தாயாரும் க.லீலாதேவி, பா.சிவேஸ்வரி ஆ.மதிவதனி, ப.சிவாசினி, க.சுமதி, க.சந்திரலதா காலஞ்சென்ற ரவீந்திரன், சந்திரகுமார், விமலநாதன் காலஞ்சென்ற இராஜேஸ்வரன், சிவதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜன், கஜந்தா , மதன், சுதர்சன் சுதர்சினி, நிதர்சன், கபிலன், மதுரா, யசோதரா, கியானா, கிருஷ்ணகுமார், பாலகுமார், ஜகீர்த்தனா, வருணா, கிசோக்குமார், கஜகுகன், கஜகோபிதன், கஜவதனன், மந்தாகினி, ஆரங்கன், கதிர்தர்சினி, தர்சனன், சயந்தர்சினி, இளங்குமரன், ஈழப்பிரியா, தேவமருகன், திரண்மிகா, கவிஸ்மிகா, திவயன், கவீனா, ஜெயசொரூபி, வினோதினி, தயாநிதி பூமிநாதன், பாஸ்கரன், சுயந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நவநீதன், எழில்நிலா, மதுசாங்கன், டினுசாங்கன், ஜெசினா, ஆதித்தன், அஜய், பவிஸ்னா, மிந்துசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை (20.12.2016) காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சதானந்தா லேன்,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

(6937)

தகவல்:-
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின்
ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினரும்
கல்வி சாரா ஊழியருமான
திருமதி வளர்மதியின் அன்பு மகள்
**அமரர் இ.பாமினி** அவர்கள் அகால
மரணமடைந்தமையையிட்டு
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி


அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை






365
72
(Express Service)
(Door to Door Service)
DHL aramex FedEx
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Call 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
Call 021 222 3536
(C-6799)

Biology-2019 A/L
English and Tamil medium
K.KALAIVANAN
(Spl.in Biological Sciences)
commence on 19.12.2016 Monday
Evening -6.00 PM
Royal Academy-Jaffna
0713438442
(6985)

# IBC தமிழ் விளம்பரங்களுக்கு

உங்கள் பொருட்கள், சேவைகளை
லண்டன் IBC தமிழ் தொலைக்காட்சி
மற்றும் வானொலியில்
விளம்பரம் செய்யவும்......





இலங்கையில் நடைபெறும் கலை கலாச்சார
மற்றும் திருவிழா நிகழ்வுகளை
IBC தமிழ் தொலைக்காட்சி மூலம்
உங்கள் புலம்பெயர் உறவுகளுக்கு
எடுத்துச்செல்லவும்
அழையுங்கள்

வி.விஸ்வா
(0094) 0766984771
(0044) 07404232736
skmarketing2016@gmail.com


## பூட்டி வைக்கப்பட்டி...

றும் வீட்டின் முன்வாயில் கேற் என்பன கடந்த எட்டு நாட்களாக பூட்டப்பட்டு இருந்துள்ளது. இதன்போது அவ் வீட்டில் வசிக்கும் பிரஸ்தாப குடும்பப் பெண்ணை பூட்டப்பட்ட வீட்டு வளவுக குள் கண்ட அயல் வீட்டுக்காரர்கள் அவ்வப் போது வாயில கேற் ஊடாக தாண்டிச் சென்று உணவினை வழங்கியிருந்தனர். இந் நிலையில் நேற்றுக் காலையிலிருந்து வீட்டில் குறித்த குடும்பப் பெண்ணின் நடமாட்டத்தை காணவில்லை. இதனையடுத்து சந்தேகம் அடைந்த அயலவர்கள் ஊடகவியலாளர்கள் மூலமாக வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் தமிழ் முறைப்பாட்டு பிரிவுக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சோமரட்ண விஜயமுனி தலைமையிலான குழுவினர் வீட்டு மதில் மேலாக உள் நுழைந்து வீட்டின் கதவைத் திறந்து, அங்கு இயலாத நிலையில் தள்ளாடியபடி இருந்த குறித்த குடும்ப பெண்ணை மீட்டுள்ளனர். மேலும் குறித்த பெண்ணின் உடல்நிலை மோசமடைந்திருந்தமையால் பொலிஸார் அவரை வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இவரது கணவன் மற்றும் மகன் ஆகிய இருவருமே இவரை கடந்த 8 நாட்களாக தனிமையில் விட்டுச் சென்றுள்ளனர் என பொலிஸாரின் முதற் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ள நிலையில் குறித்த வீடும் பாழடைந்த நிலையில் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(செ-250)


# க.பொ.த(உ/த) 2018 உயிரியல்
மாதாந்தத் தொடர் பரீட்சை - டிசம்பர்2016
**S.Ponthivakaran**

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.


| முறைப்பெயர்ப்பு ஹ43ர் | School | Marks | Rank |
|---|---|---|---|
| சிவகரன் பிரகாஸ் | J/K.H.C | 93 | 1 |
| ஆதிரை மணிவண்ணன் | J/M.L.C | 88 | 2 |
| பாஸ்கரன் பார்த்தீபன் | J/K.H.C | 88 | 2 |
| நவராசா சங்கீர்த்தனன் | J/K.H.C | 85 | 4 |
| விக்னேஸ்வரன் துவாரகன் | J/S.J.C | 85 | 4 |
| தயாநேசன் சஞ்சீவன் | J/S.P.C | 84 | 6 |
| சுப்பிரமணியம் சுபாசன் | J/J.H.C | 83 | 7 |
| திருச்செல்வம் துவாரகன் | J/K.H.C | 83 | 7 |
| துஷாரா தருமரெத்தினம் | J/C.G.C | 82 | 9 |
| அனிஸ் புளொர்டா இருதயநாதன் | J/K.H.C | 82 | 9 |
| அபினயா சிறிதரன் | J/H.F.C | 81 | 11 |
| சிவராஜா வினோதன் | Mu/M.C.C | 81 | 11 |
| எட்வின் ஜோய் விதுசன் | J/S.J.C | 80 | 13 |
| ஜெயகுமார் தேனுஜன் | J/J.H.C | 79 | 14 |
| கஜலக்ஷ்மி புஷ்பாகரன் | J/V.G.H.S | 76 | 15 |
| திருச்செல்வம் டினோஜன் | J/C.H.C | 76 | 15 |
| மகேந்திரராஜா ஜனகன் | J/J.H.C | 73 | 17 |
| கதிர்காமநாதன் சாயிந்தன் | J/K.H.C | 73 | 17 |
| பாலசுப்பிரமணியம் யுகேந்திரன் | Bd/U.S.C | 73 | 17 |
| தனராகவி கேதீஸ்வரன் | J/V.G.H.S | 72 | 20 |
| அருந்தா ஆனந்தராஜ் | J/V.G.H.S | 72 | 20 |
| றிஸ்மி லெஸ்லி பாஸ்கரதேவன் | J/V.G.H.S | 72 | 20 |
| நிசாந்தி செல்வநாதன் | J/J.H.L.C | 71 | 23 |
| பிரணவி கியூ லோரன்ஸ் ரெனாறன்ஸ் | J/K.H.C | 71 | 23 |
| கஜானா சிவயோகராசா | J/K.H.C | 70 | 25 |
| கஜானி. V | J/C.H.C | 70 | 25 |
| நிதிலா கருணாகரன் | J/C.H.C | 70 | 25 |
| சாரங்கா நவரட்ணம் | J/C.H.L.C | 69 | 28 |
| விஜித்திரா றெமேந்திரன் | J/I.C.M.V | 68 | 29 |
| சங்கவி சகாயரூபன் | J/V.G.H.S | 68 | 29 |
| தீபிகா துரைராஜேஸ்வரன் | J/V.G.H.S | 68 | 29 |
| தேனுகா ஸ்ரீனிவாசன் | J/J.H.L.C | 67 | 32 |
| கேதாரணி ஜெகராஜன் | Mu/P.M.V | 67 | 32 |
| கிரிஜாழினி வல்லிபுரம் | J/C.H.C | 67 | 32 |
| அரணி துரைசிங்கம் | J/K.H.C | 66 | 35 |
| சத்தியவாகினி ஞானேஸ்வரன் | J/C.H.C | 66 | 35 |
| கேதாரகௌரி தவராஜசிங்கம் | J/J.H.L.C | 65 | 37 |
| சில்மியா முருகவடிவேல் | J/C.G.C | 65 | 37 |
| விஜினா பாஸ்கரன் | J/V.C.C | 65 | 37 |
| லவீனா இராஜரவீந்திரன் | J/C.H.C | 64 | 40 |
| தவராசா திலக்சன் | J/S.P.C | 63 | 41 |
| திவ்யா பிரபாகர் | J/J.H.L.C | 63 | 41 |
| வித்தகி செல்வராஜா | J/C.H.C | 62 | 43 |
| பியூலா சிவனேசன் | J/M.V.C.C | 62 | 43 |
| சிந்துஜா அருள்ஜோதி | J/J.H.L.C | 61 | 45 |
| அபிநயா செல்வராசா | J/J.H.L.C | 61 | 45 |
| கார்த்திகா புவனேந்திரன் | Mu/P.C.C | 61 | 45 |
| பவதர்சினி பழனிபபழம் | J/V.G.H.S | 61 | 45 |
| கம்சிகா முத்துலிங்கம் | J/V.G.H.S | 61 | 45 |
| நிலுசா விறாஜினி பிறிற்றோ | J/J.H.L.C | 60 | 50 |
| சங்கவி சச்சிதானந்தன் | J/C.H.C | 60 | 50 |
| அனகஜா இரத்தினசபாபதி | J/C.H.C | 60 | 50 |


NEW SCIENCE WORLD Brown Road, Jaffna. (சி-6792)


## வடக்கு-கிழக்கு...

வித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது பொய்ப் பிரசாரம் எனவும் தெரிவித்துள்ளார். பதுளையில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாமும் வலுவடைந்து, கட்சியையும் வலுப படுத்தி எமது பயணத்தை நாம் தொடர்ந்து செல்கிறோம் என்று எண்ணி செயற்பட வேண்டும். புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் நாட்டின் ஒருமைப்பாட்டை இல்லாமல் செய்து, பௌத்த மதத்திற்கு இருக்கும் முக்கியத்துவத்தை இல்லாமல் செய்து, சமஷ்டியை ஏற்படுத்தி, வடக்கு கிழக்கை ஒன்றிணைக்க போவதாக பல்வேறு நபர்கள் பொய் பிரசாரங்களை மேற் கொண்டு வருகின்றனர்.

எனினும்புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாத்து, பௌத்த மதத்திற்கு இருக்கும் முன்னுரிமையை வழங்கி, ஏனைய மதங்களுக்கான உரிமைகளை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். மேலும் தொகுதி வாரி முறையில் தேர்தல் நடத்தவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.(செ-11)

## இந்து...

லில் பூஜையை முடித்து விட்டு, நேற்று அதிகாலை பூஜை வழிபாட்டுக்காக கோவிலுக்குச் சென்ற பூசகர், இச்சம்பவத்தை அவதானித்துள்ளார்.

இது தொடர்பில் கோவில் நிர்வாகத்தினருக்கு அவர் தகவல் வழங்கியதை அடுத்து, வாழைச் சேனைப் பொலிஸில் நிர்வாகத்தி னர் முறைப்பாடு செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (இ-5)

## திருப்பதி செல்லும்...

செல்லவுள்ளார். இதற்காக நாளை மறுதினம் 21ஆம் திகதி பிரதமர் சென்னை பயணமாக வுள்ளார். கடந்த ஒக்ரோபர் மாதம் குருவாயூர் ஆலயத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7808, 021 567 1592

## வீடு வாடகைக்கு

இருபாலை கோண்டாவில் வீதியில் சந்திக்கு அருகில் பாதுகாப்பான பெரிய அனெக்ஸ் வீடு வாடகைக்கு உண்டு.
உடன் தொடர்புகளுக்கு:-
0772046284, 0776114068
(6977)

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

பண்டிகைக்காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட
021 221 5656
070 330 5500
அண்ணா & கோ
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

## V2 TRAVELS

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226236
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(சி-6756)

## FRENCH LANGUAGE CENTRE
FALC FOR THE BEST FRENCH FOREVER
## பிரெஞ்சு மொழி வகுப்பு

FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர்க்கான...
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007,
DELF A1, A2,B1 இல் 100 % சித்தி, இதுவரை 1173 மாணவர்கள்
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 09.01.17 திங்கள் 3.30pm.
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

## Holy Cross School of Health
767/4, Beach Road, Jaffna, SriLanka.

DIPLOMA IN NURSING (02 years)
Holy Cross school of Health Science
விண்ணப்ப இறுதித் திகதி:-30.01.2017
க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை தாதியர் பாடசாலை இல.767/4 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
பணிப்பாளர்
(6862) தொ.பே:0213001102, 0771159391

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & French EMBASSY யின் கீழ்
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்...
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF, உலகம் முழுவதும் 1000 கிளைகள். இலங்கையில் சர்வதேச பிரெஞ் Certificate ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள் : யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
இலவசம் : PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை ...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து ...
செல்வோர் : யாழ், வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.
ஆரம்பம் :24.12.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

## Computer Hardware & Networking
## Mobile Phone Repairing Course

* PC Hradware & Troubleshooting
* PC Networking

New Batch start on 06.01.2017





2016 O/L மாணவர்களுக்கு 25% Discount

SmartPhoneகள் உட்பட அனைத்து Phoneகளிலும் பயிற்சியளிக்கப்படும்
10th Batch start on 03.01.2017
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
*10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால், ஆசன முன்பதிவு செய்யவும்.
ICS EDUCATION 77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் 076-7013060 , 021-7306000
(சி-6789)

## கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், சுற்றுமதில் கட்டுதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள் என்பவற்றுடன் Plumbing, Painting, Electrical works அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRUCTION, JAFFNA
தொடர்புகளுக்கு:- 0776679564 (J.K.VASAN) E.mail:-axshaya construction@gmail.com (C-6793)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.